
Registered as a News Paper
பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 14 வெள்ளி - 43 19 - 25 - டிசம்பர் - 2003



## யசூசி அஹாசியின் முதல் வருகையும் மீள் வருகையும்...

## கிரிக்கெட் ஆடுகளமும் அரசியல் ஆடுகளமும்...

## ஈராக் இனி அமைதி கொள்ளுமா?

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 19.12. 2003
மின் அஞ்சல : Ehatham@sltnet.lk

# இதற்கென்றால் மட்டும் சமரசமா!

'பட்ஜெட்' மீதான சந்திரிகாவின் அமைச்சுக்களின் குழுநிலை விவாதம் நெருக்கடிக்குள்ளாகும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சுமுகமாக அனைத்தும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஆளும் கட்சி அல்லாத ஒருவர் சனாதிபதியாக இருந்து முக்கிய அமைச்சுக்களை தன்கீழ் வைத்து எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களே அமைச்சுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி விவாதத்தை ஆரம்பிப்பது இலங்கை அரசியலில் முதல் முறையானது. ஒரு வகையில் இது உலக அரசியலிலும் முதல்முறையானது. விசித்திரமானது.

இதன்படி எதிர்க்கட்சியே ஆளும் கட்சியாகவும் இருக்கும் நடைமுறையின் விந்தை அரசியல் வரலாற்றிலேயே விநோதமானது.

இதிலும் இலங்கையில் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் இவ்விரு கட்சிகளும் எதிர்க்கட்சிகளாக மட்டும் தமது கடமையை ஆற்றிய வரலாறு இல்லை. நடைமுறையில் அரசியல் பின்னணியாலும், குடும்பப்பின்னணியாலும் அவை பகைமைக் கட்சிகளாகவே இருந்து வந்துள்ளன.

அதனாலேயே ஆட்சியதிகாரத்தை இவை கைப்பற்றியபோதெல்லாம் எதிர்க்கட்சியையும் எதிர்க்கட்சியின் முன்னணித் தலைவர்களையும், குறிவைத்து அரசியலிலிருந்து அப்புறப்படுத்துவதற்காகவும், ஓரங்கட்டுவதற்காகவும் தமது அதிகாரத்தை செயற்படுத்தி இருக்கின்றன. அதற்காக - அதற்காக மட்டுமே அரசியல் யாப்பில் சட்டமும் கொண்டுவந்ததுண்டு.

இத்தகையவர்களுக்கு இடையில்தான் விநோதமான முறையில் சமரசம்பேண முடிந்திருக்கிறது.

பகைமையானவர்கள் இருவருக்கிடையில் சமரசம் ஏற்படுகிறதென்றால் ஒன்று பொது நலன் கருதி பரஸ்பர புரிந்துணர்வுடன் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கோடு சமரசத்துக்கு வருவதால் சாத்தியமாகமுடியும்.

அல்லது பகைப்பதில் இருவரும் வெற்றிகாண முடியாது என்ற நிலை உணரப்பட்டால் சமரசம் உருவாகமுடியும்.

அதுவும் அல்லாவிடில் பகைப்பதிலும்விட சமரசத்தில் அதிக இலாபம் அடையமுடியும் என்று இருவரும் கணிப்பீடு செய்வதால் சமரசம் சாத்தியமாகலாம்.

இதில் நாட்டின் நலன்கருதி இருவருக்குமிடையிலான விடயத்தில் சமரசம் எட்டப்பட்டு இருப்பதற்கு இடமேயில்லை. அப்படி சமரசம் உருவாகுவதென்றால் அது 'பட்ஜெட்' விவகாரத்தில் மட்டும்தான் உருவாகவேண்டும் என்று இல்லை.

அதைவிடவும் நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கவல்ல சமாதான விடயத்தில் உருவாகி இருக்கவேண்டும்.

ஆக, பகைப்பதில் இருவரும் வெற்றி ஈட்டமுடியாது என்ற தருணத்தில் எழும் சமரசமாக இதனைக்கொள்ளமுடியும். மேலும் பகைப்பதை விடவும் சமரசத்தில் அதிக இலாபம் என்ற கணிப்பிலும் இது நிகழ்ந்திருக்கமுடியும்.

ஏனெனில் எப்படியோ தேர்தல் ஒன்றை நாடு விரைவில் சந்திக்கும் வாய்ப்புள்ளதை அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த அதிகார இழுபறியால் சுயநல நோக்கில் தாம் செயற்படவில்லை என்று பொய்யாக மெய்ப்பிப்பதில் இருவரும் சிரத்தையாக இருக்கின்றனர். அவப்பெயரில் இருந்து தப்பிப்பது இருவருக்கும் அவசியமாக இருக்கிறது.

அதற்காக ரணில் தனது மூன்று அமைச்சுக்கள் பறிக்கப்பட்டு, இப்பொழுது உள்ள சந்திரிகாவின் நடைமுறையில் சமாதானத்தைக் குழப்பும் யதார்த்தம் இல்லாது இருந்தாலும் கூட ரணில் பேச்சை ஆரம்பிக்கத்தயாராக இல்லை. ரணில் அதை ஒரு விவகாரமாக்கி தன்னைப் பலப்படுத்தவே விரும்புகிறார்.

அத்தகைய சூழலில் 'பட்ஜெட்' மீதான விவாதம் சுமுகமாக நடக்க இரு பகைமைக் கட்சிகளும் ஒத்துழைத்து இருக்கின்றன என்றால் அதில் அவர்களுக்கான தனிப்பட்ட தேவைகளும் இலாபங்களும் இருக்கின்றனவே அன்றி வேறெதுவுமாக இருக்கமுடியாது.

சுய தேவைகளுக்காக இரண்டு பகைமைக் கட்சிகளும் விந்தையான விநோதமான வகையில் சமரசம் காணமுடிகின்றபோது இத்தீவை ஆட்டிப்படைக்கும் இனப்பிரச்சினை விவகாரத்தில் மட்டும் இவர்களினால் தமக்குள் ஒத்துழைப்பு பெறவோ, சமரசம் காணமுடியாமல் இருப்பதாக அரை நூற்றாண்டாக இவை சொல்லி வருகின்றன. இப்பொழுதும் சொல்லுகின்றன. இனியும் சொல்லிக்கொள்ளும்.

யதார்த்தத்தைத் தரிசிக்க எந்த சர்வதேச சக்தியாவது தயாராகவிருந்தால் இது அவர்களுக்குச் சமர்ப்பணம்.

## தூரனின் பார்வையில்

# பாதுகாப்பு என்ற பெயரில் அரசு யுத்தத்திற்கு தயாராகிறதா?

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ரணில் தலைமையிலான அரசிடமிருந்து சட்டபூர்வமாக அபகரித்துக்கொண்ட பின்னர், நாட்டில் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக நிலவி வரும் தற்காலிகமான அமைதி மற்றும் சமாதானச் சூழ்நிலையானது மெல்ல விலகிச் செல்லும் தன்மை கொண்டதாக மாறிவருகின்றது.

இந்த மாற்றத்தின் வெளிப்பாடாக அண்மையில் நடந்தேறியுள்ள சில சம்பவங்களைக் குறிப்பிடமுடியும்.

சமர்தானத்தை இதயசுத்தியுடன் சமாதானமான முறையில் அணுகுவதில் ஆர்வமற்ற சிறிலங்காவின் அரசபீடத்தவர்களின் போட்டா போட்டி அரசியல் நகர்வுகள் சமாதானப் பேச்சுவார்த்தை நகர்வுகளை ஓரங்கட்டி விட்டதில் வியப்பொன்றுமில்லை.

பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்க முன்னரே நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலை சீர்குலைந்து விட்டதாகவும். பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாகிவிட்டதாகவும், இந்தநிலை நீடிக்குமேயானால் தான் தனது அதிகார பலத்தை பிரயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம் எனவும் அடிக்கடி எச்சரித்து வந்ததை நினைவுகூறுதல் அவசியமானதாகும்.

அவர் பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்பதற்கான முன்னோடி எச்சரிக்கை அறிவிப்பாகவே அதனை மேற்கொண்டார் என்றே சொல்லவேண்டும்.

அமெரிக்கா தலைமையிலான அதன் சார்புநாடுகளான ஜப்பான், அவுஸ்ரேலியா, கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பின்புல ஆதரவுடனும் நோர்வேயின் அனுசரணையுடனும் மேற்கொள்ளப்பட்டுவந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளின் ஆரம்பத்தில் இதுவும் வழமைபோன்ற குறுகிய காலச் சமாதானமாகத் தான் இருக்கும் என நினைத்து அதில் அவ்வளவு அக்கறை காட்டாதிருந்த சந்திரிகாவும், ஏனைய இனவாத அணியைச் சேர்ந்த எதிர்க்கட்சிகளும், பேச்சுவார்த்தையின் தன்மைகளை அவர்கள் எதிர்பாராத ஒரு வடிவத்தை எடுத்து ஓராண்டுக்கும் மேலாக முன்னேறிச் சென்றமையால் அதிர்ந்து போனதென்னவோ உண்மைதான்.

சனாதிபதியும் எதிர்க்கட்சிகளும் மட்டுமல்ல இந்தியாவும் இதேவிதமான அதிர்ச்சியை அடைந்ததும் நிஜம்தான்.

எனவேதான் சனாதிபதியும் அவரது அருமை ஆலோசகர் கதிர்காமரும் இந்தியாவின் நாடித்துடிப்பை உணர்ந்து அதன் மூலமாக சமாதான முயற்சிகளில் குழப்பத்தை உண்டு பண்ண முயன்றனர். அதேபோன்று ஏனைய இனவாத கட்சிகளும் இந்த நடவடிக்கைக்கு ஜால்ரா போடுவதன் மூலம் தம் எதிர்ப்பிருப்பை வெளிப்படுத்தின.

இந்தியாவுக்கும் இலங்கைப் பிரச்சினைக்குள் எவரின் வாலைப்பிடித்துக் கொண்டாவது நுழையவேண்டிய தேவை இருந்ததால் இந்த வாய்ப்பை சிக்கெனப்பிடித்துக்கொண்டது.

குரங்குபாஞ்சான் விடுதலைப் புலிகளின் முகாம் தொடர்பாகப் பிரச்சினைகளை தொடக்கி, திருகோணமலையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனத்தொடர்ந்து, திருகோணமலைத் துறைமுகப்பகுதி ஆபத்துக்குள்ளாகிவிட்டது என விரிந்து, இந்திய எண்ணைக் குதங்களுக்கு ஆபத்து என மையங்கொண்ட அரசியல் சூறாவளி மெல்ல மெல்ல வேகங்கொண்டு இன்றைய சிறிலங்காவின் அரசியல் நெருக்கடி அனைத்திற்கும் காரணமாகிவிட்டுள்ளது.

சனாதிபதி தன் நிறைவேற்று அதிகார பலத்தை பிரயோகிப்பதற்கு தேர்வு செய்த முதலாவது நிகழ்வு திருமலை விவகாரமாகவே அமைந்தது.

ஈழப்பிரச்சினையில் இந்தியாவின் மறுநுழைவுக்கு சந்திரிகா திருகோணமலையில் அவர்களின் எண்ணைக் குதங்களுக்கு ஆபத்து என்ற அபாயச்சங்கொலி மூலம் அழைப்பு விடுத்தார்.

ஆரம்பத்தில் நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளுக்கு பூரண ஆதரவு வழங்குவதாக உதட்டளவில் கூறிய இந்தியா உள்ளத்தளவில் அந்த எண்ணத்தைக்கொண்டதாக இருக்கவில்லை என்பதை அதன் அண்மைக்கால செயற்பாடுகள் தெளிவாகவே உணர்த்திவருகின்றன.

இது சந்திரிகா விரும்பி எதிர்பார்த்த ஒன்றேயாகும்.

இதனையடுத்து அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த சந்திரிகாவின் அபிமானத்திற்கும் ஆசீர்வாதத்திற்குமுரிய இராணுவத் தளபதி லயனல் பலகல்ல அங்கிருந்து விடுத்த அறிக்கைகள் சமாதானத்தை அச்சுறுத்துவதாகவே அமைந்திருந்தன.

சமாதானம் தோற்றால் யுத்தத்தை எதிர் கொள்ள இராணுவம் தயாராக உள்ளதாக அவர் அங்கு நின்று அறிக்கை விடுத்திருந்தமையானது ஏதோ ஒரு உள்நோக்கத்துடனும், ஒரு பிற்பலத்தின் உற்சாக உந்துதலின் பேரிலும் சொன்னார் என்பதையும் உணரக்கூடியதாக உள்ளது.

அது மட்டுமல்ல இந்து சமுத்திரத்தின் பிராந்தியப் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையியே ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதென்றும், இப்பகுதியில் நடைபெறும் சட்ட விரோத தீவிரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இது பெரிதும் உதவுமென்றும், இதற்கென இந்திய இலங்கைக் கடற்படை கூட்டாகச் செயற்படும் என்றும் தெரிவித்துள்ளமையானது இந்தியா இலங்கைக்குள் மற்றுமொரு இராஜதந்திர இராணுவ ரீதியிலான ஆக்கிரமிப்பை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளதைக் காட்டுவதுடன், பலாலி விமான நிலையத்தை நவீனப்படுத்த இந்தியா உதவும் என்ற பலகல்லேயின் செய்தியானது குடா நாட்டுக்குள் இந்தியா காலடி வைப்பதற்கான தளத்தை சந்திரிகா அமைத்துக்கொடுக்கிறார் என்பதையும் உணர்த்தி நிற்கிறது.

'சமாதானம் முறிந்தால்' என்று கேள்வி கேட்டும் பலகல்லேயே அதற்கான பதிலையும் கூறியிருப்பதானது யுத்தம் ஒன்றுக்கு தாம் தயார்நிலையில் வைக்கப்பட்டிருக்கும்படி கோரப்பட்டுள்ளார் என்பதையே வெளிப்படுத்தியுள்ளது.

இதேசமயம் முப்படை அதிகாரிகள் குழுவொன்று சீனாவுக்கு ஆயுதக்கொள்வனவுக்கென செல்லும் செய்தியும் வெளியாகியுள்ளது. சந்திரிகா பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னரே இதுவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சமாதானத்தின் மீதான உறுதியின்மையும், அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதற்கான ஆர்வமோ, துணிச்சலோ. விருப்பமோ இல்லாமையும் சந்திரிகாவிடம் நிறைந்து இருப்பதே இந்த நடவடிக்கைகளுக்கு காரணம் என்றால் மிகையில்லை.

அத்துடன் இராணுவத்தின் விசேட கொமாண்டோ படையணிக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளதாகவும், அவர்களுக்கு இந்தியாவில் பயிற்சி வழங்கத் திட்டமிட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளமையும் சமாதானத்தை அச்சுறுத்தும் விடயங்களேயாகும்.

சமாதானத்தை முன்னெடுக்க- தேசத்தில் அமைதி நிலையைப்பேண- முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்களில் விட்டுக்கொடுப்போ. புரிந்துணர்வுடன் கூடிய செயற்பாடோ மேற்கொள்ளப் பின்னடிப்பவர்கள், பாதுகாப்பு என்ற பெயரில் மீண்டுமோர் கொடிய யுத்தத்திற்கான தயாரிப்புகளில் தீவிரம் காட்டுவதுதான் தமிழ்மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

அதேபோன்று சமாதானம் குறித்து அழுத்தம் தெரிவித்துக்கொண்டே இராணுவ நலன்களுக்கு உதவிபுரிந்து, பயிற்சிவழங்கி அவர்களைப் போர்க்கோலம் கொள்ளவைக்கும் கைங்கரியத்தைப் புரியும் சில வல்லாதிக்க நாடுகளின் போக்கு அருவருப்புக்குரியதாகவும் உள்ளது.

ஆயுதங்களை விற்றுக்கொண்டு போருக்கு ஆயத்தமாக பயிற்சியும் வழங்கிக்கொண்டு, சமாதானமே எமது இலக்கு என்று சொல்பவர்களைப் பார்க்கும்போது எரிச்சலே மிஞ்சுகிறது. இதற்கெல்லாம் அவர்கள் கூறும் ஒரே விளக்கம். இவையாவும் நாடுகளுக்கிடையேயான நல்லுறவின் அடிப்படையிலான வழமையான செய்ற்பாடுகள் என்பதேயாகும்.

சந்திரிகாவின் கையில் பாதுகாப்பு அமைச்சு பறிபோனதும் நாட்டின் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் அதிகமாகியுள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இந்த நிலையில் தற்கொலைப் போராளிகள் 400பேர் கொழும்புக்குள் ஊடுருவியுள்ளதாக சந்திரிகாவே கூறியிருப்பதானது கொழும்பு நகரில் அதிரடி நடவடிக்கைகளை தேடுதல், சோதனை என்ற பெயரில் தமிழ்மக்களுக்கு எதிராக படையினரைக் கொண்டு மீண்டும் ஆரம்பிக்கும் சந்திரிகாவின் திட்டத்தை வெளிப்படுத்துவதாகவும் அவர்கள் கூறியிருப்பதும் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயமாகும்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிட்டது என்ற தனது கருத்துக்களை நிரூபித்துக்காட்ட இத்தகைய நாடகங்கள் சந்திரிகாவுக்கு இப்போது மிக அவசியமாகவும் உள்ளன.

சந்திரிகா ஏற்கனவே தன்னை ஒரு சிறந்த நடிகையென பகிரங்கமாக பிரகடனம் செய்வதை நினைவிற்கொள்வது நல்லது. •



# யசூசி அஹாசியின் முதல் வருகையும் மீள் வருகையும்...

**மௌரியன்**

மீண்டும் யசூசி அஹாசி வரப்போகிறார். சில மாதங்களின் முன்னர் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக, டோக்கியோவில் நடைபெற்ற சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு தொடர்பாக, சிறிலங்காவுக்கும், வன்னிக்கும் விஜயம்செய்து செய்திகளில் பரபரப்பாக அடிபட்ட ஜப்பானின் விசேட பிரதிநிதியைத்தான் குறிப்பிடுகிறேன்.

கொழும்பு அரசியலில் அதிரடி அரசியல் சதி நடவடிக்கை காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை சமாதானத்தை நிரந்தரமாக ஓரங்கட்டிவிட்ட நிலையில் பிரதமர் ரணிலுக்கும் அவருக்குமிடையிலான அரசியல் பகைநிலை தீர்க்கப் படமுடியாத முறுகல் நிலைக்கு இறுகிக்கொண்டேபோகிறது.

இருவருக்கும் இடையேயான முரண்பாடுகளை நீக்கி ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தும் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தினை ஏற்றுக்கொள்ளவும் - நிராகரிக்கவும் முடியாத நிலை சந்திரிகாவுக்கு. தன்னுடன் எந்த வகையிலும் ஒரு இணக்கப்பாட்டுக்கு மனமுவந்து வரக்கூடிய மனோபாவம் சந்திரிகாவுக்கு கிடையவே கிடையாது என்பதில் உறுதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத்தின் குரலுக்கு மதிப்பளிப்பதைப்போற் காட்டிக்கொண்டு, சந்திரிகாவுடன் பேச்சுக்களை மேற்கொண்டு வருகின்றபோதும் அதில் ஒரு இணக்கப்பாடு ஏற்படக்கூடிய அளவுக்கு - தனது நிலைப்பாட்டில் விட்டுக்கொடுத்தலை மேற்கொள்பவராக இல்லை.

சந்திரிகா ரணிலின் கோரிக்கைக்கு இணங்கி இறங்கி வரவேண்டிய நிலை ஏற்படின் அது அரசியலில் அவருக்கு ஏற்படக்கூடிய மாபெரும் தோல்வியாகிவிடும்.

ரணில் சந்திரிகாவுக்கு பணிந்து போக நேரிட்டால் அது அவரின் அரசியல் வாழ்வின் இறுதி அத்தியாயத்தை எழுத வைத்துவிடும்.

எனவே இப்போதுள்ள நெருக்கடி நிலையானது இரு தரப்பினரில் எவருமே பரஸ்பர புரிந்துணர்வுடன், தேசிய அக்கறையுடன், சமாதானத்தின் மீதான பிடிப்புடன் விட்டுக்கொடுப்புகளுக்கு முன்வராமல் தீரப்போவதேயில்லை. அப்படி அவர்கள் விட்டுக்கொடுப்புகளுக்கு முன்வந்து இணக்கத்திற்கு வருவதாயின், சமாதான முயற்சிகளை முன்னெடுக்கத் தூண்டி நெருக்குதலைக் கொடுத்து வரும் சர்வதேச சமூகம் மீதான அச்சத்தின் ( மரியாதையின் காரணமாக அல்ல....) காரணமாகவே அது சாத்தியமாதல் கூடும்.

அப்படியான சாத்தியக்கூறு ஒன்று ஏற்படின் அது சனாதிபதிக்கே பாதகமானதாக அமையும்.

அதிகார ஏதுமற்ற ரணில் இனிமேல் விட்டுக்கொடுப்பதற்கு அவரது பிரதமர் பதவியைத் தவிர வேறெதுவுமில்லை. அதுவும் கூட அதிகார பலமற்ற சுயநிர்ணய உரிமையற்ற சனாதிபதியின் அதிகார பலத்தால் ஆட்டிப்படைக்கக் கூடியதான ஒரு பெயர்பலகைப் பதவியேயாகும்.

எனவே விட்டுக்கொடுப்பின்றி இணக்கப்பாடு எதுவும் சாத்தியமில்லை என்பதே இன்றைய அரசியல் யதார்த்தமாகியுள்ள நிலையில், விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்ளவேண்டிய நிலையில் உள்ளவரான சந்திரிகாவின் நிலையே ரணிலை விடவும் மோசமானதாகும்.

இதேசமயம் சமாதானத்தை அடுத்தகட்டத்திற்கு எப்படி நகர்த்துவது என்பதில் கடந்த பல மாதங்களாகவே ஒரு முடிவும் எடுக்கமுடியாத நிலையில் திணறிக்கொண்டிருந்த ரணில், இப்போது, சந்திரிகா தொலைநோக்கு சிந்தனையின்றி மேற்கொண்ட அரசியல் செயற்பாடுகள் காரணமாக, தன்னை சமாதான முன்னெடுப்புகளில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு பொறுப்பை சந்திரிகாவில் சுமத்திவிட்டு, சனாதிபதியையே அனைத்திற்கும் காரணம் என்று கூறிவிட்டு கைகட்டிக்கொண்டு நிற்கிறார்.

எப்படியோ ரணிலின் நிலை இப்போது நிம்மதியான ஒன்றாகிவிட்டது.

எந்த முடிவையும் இப்போது சந்திரிகாவே மேற்கொள்ள வேண்டிய அரசியல் சூழல் அவருக்கு ஒரு சிக்கல் நிறைந்த பொறியாகிவிட்டது.

உண்மையில் சமாதான நகர்வுகளின் முட்டுக்கட்டை நிலைக்கு ரணிலின் பங்கு கணிசமானது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடுதலைப்புலிகளின் நியாயமான கோரிக்கை குறித்து அவர் காட்டிய ஆர்வமின்மை மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டின் அம்சங்களை ஒப்புக்கொண்டபடி உரியகாலத்தில் நடைமுறைப் படுத்துவதில் காட்டிய அக்கறையின்மை, படைதரப்பின் - குறிப்பாக கடற்படையினரின் போர் நிறுத்த மீறல்களை கட்டுப்படுத்தமுடியாத அவரின் இயலாமைபோன்ற பலவும் சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட காரணங்களாகும்.

சமாதானம் குறித்து பேசிக்கொண்டே தனது அரசை, வெளிநாடுகளில் இருந்து கிடைக்கக்கூடிய சமாதானத்தின் பேரிலான பெருமளவு கடன் மற்றும் நிதியுதவிகளைக்கொண்டு பொருளாதார ரீதியில் ஸ்திரப்படுத்திக் கொள்வதில் ரணில் காட்டிய கவனம் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான அடிப்படைகளை வலுப்படுத்துவதில் காட்டவில்லை என்பதே உண்மையாகும்.

ரணிலின் இந்த முடிவெடுக்க முடியாத நிலைக்கு சந்திரிகாவும், பேரினவாதிகளும் அயல் நாடான இந்தியாவும், மறைமுகமாகவும் நேரடியாகவும் கொடுத்த அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் கூடக் காரணம் என்பதை அரசியல் ஆய்வாளர்கள் பல தடவைகள் அழுத்தமாகத் தெரிவித்துமுள்ளனர்.

எனவே சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னெடுப்புகளின் போதெல்லாம் அரசின் சார்பில் - ரணிலின் சார்பில் - பங்குகொண்ட பிரமுகர்கள் கொடுத்த வாக்குறுதிகள் யாவும் தேர்தல் கால வாக்குறுதிகளாகவே போயின.

ஆனாலும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சமாதானத்தை ஆதரித்து நின்ற நாடுகளின் வற்புறுத்தல்களை அவரால் புறந்தள்ளிவிடமுடியாத நிலையில் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து காலம்கடத்தலை மேற்கொண்டார் என்பதும் உண்மையே.

ஆனால் விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகசபைக்கான கோரிக்கை ரணிலை திக்குமுக்காட வைத்தது. இருந்தாலும் ஒப்புக்கு ஒரு அர்த்தமற்ற திட்ட யோசனையை அவர் முன்வைத்து சமாளிக்க முயன்றபோதும் புலிகள் மிகவும் புத்திசாலித்தனமாகவும், ராஜதந்திர ரீதியிலும், நடந்துகொண்டு மாற்று யோசனைகளை முன்வைத்த விதம் ரணிலை மட்டுமல்ல, சந்திரிகாவையும் பிரமிக்க வைத்ததால் ஏற்பட்ட பிரதிபலிப்புகளே இன்றைய சிறிலங்காவின் அரசியல் நெருக்கடிகளாகும்.

இந்த அரசியல் நெருக்கடி உருவாக்கப்பட்டதன் மூல நோக்கமே சமாதான நகர்வையும் இடைக்கால நிர்வக அதிகாரசபை உருவாக்கத்தையும் சிதைப்பது தான்.

சந்திரிகா அதனைக் குறிவைத்தே அமைச்சுப் பொறுப்புகளை பெற்றுக்கொண்டார் என்பதில் இருவேறு கருத்துக்கிடையாது.

ரணிலோ, சமாதான முயற்சிகளைக் குழப்பவே சந்திரிகா இந்த சட்ட பூர்வ அரசியல் சதியை மேற்கொண்டார் எனத் தெரிவித்திருக்கிறாரே....

ரணிலின் விருப்பமும் மறைமுகமாக அதுவாகவே இருந்தது. ஆனாலும் அதனை எப்படிக் குழப்ப, அல்லது தேக்க நிலையை அடைய வைப்பது என்பது தெரியாமல் அந்தரப்பட்டு அலைந்துகொண்டிருந்தபோதே சந்திரிகா தனது நடவடிக்கை மூலம் கைகொடுத்தார்.

சகல பிரச்சினைகளும், குற்றங்களும் சந்திரிகாவின் மேல் போடப்பட்டுவிட்டன. இந்தச்சூழலில் சமாதானத்தை எப்படியாவது தொடரவேண்டுமென்பது சர்வதேச சமூகத்தின் விருப்பார்வமாக இருக்கையில் அதனை எப்படி மேற்கொள்வதென்பது குறித்து கடந்த வாரத்தில் அமெரிக்க அதிகாரிகள் சிலர் இங்கு வந்து ஆராய்ந்து சென்றுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய அதிகாரி ஒருவர் வந்து நிலைமைகளை மதிப்பீடுசெய்துவிட்டு சமாதானத்தை சிங்கள அரசியல் தலைமைகளிடம் வலியுறுத்திச்சென்றார்.

இப்போது ஜப்பானின் விசேட தூதர் அஹாசி வரப்போகிறார். அவராவது கொழும்பு அரசியலில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் தீர்வு காண்பாரா? என்பதே பலரதும் கேள்வியாகும். முன்பு அவர் வந்தபோது அவர் சந்தித்த சிறிலங்காவின் அரசியல் சூழல் வேறு. இப்போது அவர் சந்திக்கப்போகும் நிலைவேறு. அப்போது விடுதலைப்புலிகளை ஜப்பான் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு வலியுறுத்த - அழுத்தம் கொடுக்கவந்து காரியம் பலிக்காது திரும்பினார். இப்போது அரசுக்கும் - சனாதிபதிக்கும் - பிரச்சினைகளுக்கு தீர்வுகாண இணக்கத்திற்கு வருமாறு வற்புறுத்தவோ, அறிவுறுத்தவோ, அல்லது அழுத்தம் கொடுக்கவோ வருகிறார் என வைத்துக்கொண்டாலும், அவர் சிறிலங்காவின் இனப்பிரச்சினையின் உண்மையான பரிமாணம் ஒன்றை இந்த வருகையின்போது உணர்ந்து கொள்ளவே போகிறார்.

அதற்காகவாவது அவர் வந்து போகத்தான்வேண்டும். இதுவும் ஒரு காலத்தின் தேவைதான்.

## ஓகோ! அப்படியா!



சனாதிபதி சந்திரிகா. பல்கலைக்கழக விரிவுரையாளர் மத்தியில்.

**ஆளும் கட்சியின் தொல்லைகளைத் தாங்க முடியவில்லை. கூட்டத் தொடர்களைத் தவிர்க்க இதுவே காரணம்.**

### ஓகோ !அப்படியா!



கூட்டுப்படைத் தளபதி பலகல்ல. பத்திரிகையாளர் மத்தியில் .

**பலாலி விமான ஓடு பாதை சீரமைப்பு உட்பட பல்வேறு இராணுவ உதவிகளை இந்தியா வழங்கும்.**

### ஓகோ !அப்படியா!



எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷ. கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில்.

**இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு அரசியல் தலைவர்கள் ஒன்றிணைய வேண்டும்.**

### ஓகோ !அப்படியா!



ஜீ.எல். பீரிஸ். ஊடகவியலாளர் மாநாட்டில்.

**பாதுகாப்பு அமைச்சை மீளளிக்குமாறு சனாதிபதியிடம் பிரதமர் கோரவில்லை, ஆனாலும் சமாதான முயற்சிக்கு அவசியம்.**

### ஓகோ !அப்படியா!



ரணில் விக்கிரமசிங்க.குருநாகல் மக்கள் சந்திப்பில்.

**யாழ்ப்பாணத்தை கைப்பற்ற முன்னைய ஆட்சியிலிருந்தவர்கள் சகல வளங்களையும் பயன்படுத்தினர். ஆனால் அவர்களால் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர முடியவில்லை.**

### ஓகோ !அப்படியா!



அநுருத்த ரத்வத்தை. கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில்.

**தீவிரமாக அரசியலில் ஈடுபடப் போகிறேன். சிலவிசமிகளின் பொய்ப் பிரச்சாரங்களினால் மக்கள் மத்தியில் எனக்கிருந்த மதிப்பு குறைந்துவிடவில்லை.**

# நறுக்கென...

## சதாம் கைது; ஒரு வரலாற்றுத் தவறின் விளைவு



**கடைசியில்** சதாம் ஹுசைன் உயிருடன் பிடிபட்டார் என்ற செய்தியை அமெரிக்கா அறிவித்துவிட்டதில் அதற்கு அளவற்ற பெருமிதமும் மகிழ்ச்சியும்.

அவர் கைதான செய்தியை அறிவித்ததும் ஈராக்கியர்கள் பட்டாசு கொழுத்தி மகிழ்ந்ததாகவும் செய்தியை அமெரிக்காவே வெளியிட்டுள்ளது.

எந்த விதமான எதிர்ப்பையும் காட்டாது, போராட்ட உணர்வை வெளிப்படுத்தாது எதிரிபடைகளுக்கு எந்த விதமான இழப்பையும் ஏற்படுத்தாது ( இதுவும் அமெரிக்க செய்திதான்!?) அவர் பிடிபட்டார் என்பது பரபரப்பான ஒரு கதையின் உயிரற்ற முடிவாகியது ஏமாற்றமே.

அவர் ஒரு ஈராக்கிய மகனாக - இராணுவ ஜெனரலுக்குரிய வீரத்துடன் - தனது ஜென்ம விரோதிக்கு - தன் நாட்டை தன் மக்களை - ஈவிரக்கமின்றி ஆக்கிரமித்து நுழைந்து துவம்சம் செய்த எதிரிக்கு எதிராக போராடிச்செத்த போராளியாகவே தன் முடிவை அமைத்திருந்தால் அவருக்காக தலை சாய்த்து மனதளவிலாவது இறுதி வணக்கம் செய்ய ஒரு சிலராவது இருந்திருப்பர்.

இந்த வகையில்தான் அவர் படுதோல்வி கண்டுள்ளார்.

உலக வல்லரசுகளின் ஒருங்கிணைந்த மேலாதிக்க வெறிக்கு எதிராக அவர் ஒரு காலத்தில் குரல் கொடுத்து நின்றபோது ஈராக்கிற்கு அவர் ஒரு கம்பீரத்தைக் கொடுத் திருக்கிறார். அவரின் வரலாற்றுத் தவறுகளையும் மீறி அவருக்கு ஒரு அடையாளமிருக்கவும் செய்தது.

ஆனால் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளின் ஊடுருவலை எதிர்க்காது அவரும் அவரது படைகளும் பின்வாங்கிய போது அதனை ஒரு ராஜதந்திர யுக்தி என நினைத்து சதாம் மீதான நம்பிக்கையில் இருந்தவர்களும் உண்டு.

சதாம் அவர்களை ஏமாற்றிவிட்டார்.

ஈராக் மீதான தலையீட்டை நியாயப்படுத்தமுடியாமல் புஷ் நிர்வாகமும் பிளேயரும் திணறி தம் முகவரியை இழந்துகொண்டிருக்கையில் சதாமின் கைது அவர்களுக்கு மீண்டும் ஒரு தற்காலிக முகவரியை வழங்கியுள்ளது.

சதாமின் புதல்வர்களை அமெரிக்க படைகள் வேட்டையாடியபோது இருந்த சிறு அனுதாபத்துடன் கூடிய ஈராக்கிய மக்களின் கொதிப்புணர்வை சதாமின் கைது சிதறடித்துவிட்டது.

ஒரு நாட்டின் தலைவர் தன் நாட்டு மக்களாலேயே காட்டிக்கொடுக்கப் படுவதைப்போன்ற அவலம் வேறில்லை. இப்படி ஒரு அவலம் நேர்வதற்கு அவர் தன் நாட்டு மக்களுக்கே விசுவாசமாக நடக்காமல் இருந்திருக்கவேண்டும், அல்லது அந்த நாட்டு மக்களுக்கு தேசிய உணர்வோ தேசப்பற்றோ இல்லாதிருந்திருக்கவேண்டும்.

ஈராக்கில் என்ன் நடந்திருக்கிறது என்பது சதாமுக்கும், அவரது மக்களுக்குமே தெரிந்த விடயமாகும்.

ஈராக்கை இனி ' அல்லாவாற்'தான் காப்பாற்றவேண்டும்.

## விலகவும் மாட்டார்;விரும்பவும் மாட்டார்



**சில வேளைகளில்** சில அரசியல் வாதிகள் விடும் அறிக்கைகள் அதிர்ச்சியூட்டுபவையாக மட்டுமல்ல, ஆச்சரியமூட்டு பவையாகவும் இருக்கிறது.

அண்மையில் சிறிலங்காவின் எதிர்கட்சி பிரமுகர்களில் ஒருவரான நிமால்சிறிபால டி.சில்வாவும், அக்கட்சியின் பேச்சாளர் சரத்அமுனுகமவும் விடுத்த அறிக்கை இதற்கு ஒரு சான்றாகும்.

அதாவது நிறைவேற்று அதிகாரம் சனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க ரணிலின் அரசு உதவவேண்டுமாம்!

எப்படி இருக்கு கதை?

வாரத்துக்கொருதடவையாகிலும் அளவுக்கு அதிகமாக தன்வசம் குவித்துள்ள அதிகாரத்தை வைத்தே அனைவரையும் அச்சுறுத்தி ஆட்டிப்படைத்துவரும் அல்லிராணியான சனாதிபதி சந்திரிகாவின் நிறைவேற்று அதிகார - சர்வாதிகார ஆட்சியினை இல்லாமற் செய்யும் வலு ரணிலின் அரசுக்கு உள்ளதாக அல்லவா அவர்களின் கோரிக்கை எண்ண வைக்கிறது?

'தான் பதவிக்கு வந்ததும் முதல் பணியாக நிறைவேற்று அதிகார சனாதிபதி ஆட்சி முறையை இல்லாமற்செய்வேன்' என்று கூறிக்கொண்டு 1990 களின் மத்தியில் ஆட்சி பீடம் ஏறிய சந்திரிகாவுக்கு, அந்த பதவிக்கதிரையின் பாதுகாப்பான சொகுசு பின்னர்தான் தெரிந்தது.

அவர்காலத்திய சமாதான முயற்சிகள், அவரின் நேர்மையற்ற அணுகுமுறைகள் காரணமாக தோல்வியடைய நேரிட்டதும், போர் மீண்டும் தொடங்கியது.

பின்னர் யுத்தத்தை காரணம் காட்டிக்கொண்டே தன் அளவற்ற அதிகாரங்களைப் பயன்படுத்தி பதவிச்சொகுசில் பயன்பெற்ற சந்திரிகா இன்றுவரை தனது அதிகார பலத்தின் அத்திவாரத்திலேயே அனைத்தையம் செய்துவருகிறார்.

தனது அதிகாரத்தில் ஒன்றிரண்டு குறைந்தாலும் பொறுக்காதவர் சந்திரிகா என்பதை அவரது அண்மைக்கால அமைச்சுப்பறிப்பு நடவடிக்கைகள் நிரூபித்தன.

இந்த அதிகாரம் இல்லாவிட்டால் அவரிடம் எதுவுமே கிடையாது என்ற நிலை. அவரே விட்டுக்கொடுக்கவிரும்பாத அந்த ஆட்சி முறையை நீக்க ரணிலின் அரசு ஒத்துழைக்க வேண்டுமென்றால் அதற்கு என்னதான் அர்த்தம்.

ரணிலுக்கும் அந்தக் கதிரைமீதும், நிறைவேற்று அதிகாரப் பொக்கிஷம் மீதும் ஒரு கண்நீண்டகாலமாகவே உள்ளது. எனவே அவர் அதை நீக்க உடனடியாக முன்வரமாட்டார் என்பதுதானே அர்த்தம.

அந்த நம்பிக்கையில்தானே எதிர்க்கட்சி பிரமுகர்கள் இவ்வாறான அறிக்கையை விட்டுள்ளார்கள்.

சந்திரிகா நினைத்தால் தானே அது குறித்து நேரடியாக அறிவிக்கலாமே. அவரிடம் அதற்கான அதிகார பலமும் இருக்கவே செய்கிறதே.....

ஒன்று மட்டும் உண்மை -

சந்திரிகா பதவியில் இருக்கும் வரையில் அந்த சர்வாதிகாரத்தன்மையை இழக்க விரும்பவே மாட்டார்..... தனக்குப்பின் வேறு எவரும் அந்தக்கதிரையில் அமர்வதற்கான வாய்ப்பினை வழங்கவும் மாட்டார்.

அவ்வளவு தான்.

## சமாதானத்திற்கான யுத்தத்திற்கு புத்துயிர்ப்பு அளிக்கப்படுகிறதா?



**சிறிலங்காவின்** இராணுவத் தளபதி இந்தியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாடு திரும்பியுள்ளார். பலகல்லே இந்தியாவுக்கு விஜயம் செய்வது ஒன்றும் புதினமான விடயமல்ல.

ஆனால் இம்முறை அவரின் விஜயத்திற்கு சில முக்கியத்துவம்மிக்க காரணங்களும் உண்டு. விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான திட்டவரைபினை இந்தியா அங்கிகரிக்காது என்ற செய்தி வெளியான பின்னர் இன்னும் விளக்கமாக கூறுவதானால், சனாதிபதி சந்திரிகா தனது அதிகார பலத்தைப் பிரயோகித்து பாதுகாப்பு அமைச்சை தன்வசமாக்கிய பின்னால் அவரது நம்பிக்கைக்கும் ஆசீர்வாதத்திற்குமுரியவரான பலகல்லே வெறுங்கையுடன் இந்தியாவுக்கு சென்றிருக்கமாட்டார். சந்திரிகா என்ன செய்தியை பலகல்லேயூடாக இந்திய தலைமைகள் மற்றும் அதிகாரிகளுக்கு தெரிவிக்க அனுப்பியிருப்பார் என்ற மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியும் உண்டு.

காஷ்மீர் யுத்தப்பிரதேசம்வரை சென்ற பலகல்லே அங்கு நின்று பகிரங்கமாகவே விடுத்த செய்தி சமாதான ஆர்வலருக்கு திருப்தி தரும் ஒன்றல்ல.

'விடுதலைப்புலிகள் யுத்தத்தை ஆரம்பித்தால் அதனை எதிர்கொள்ள இராணுவம் தயாராகவே உள்ளது' என்பதே அந்த வார்த்தைகளாகும்.

அதனைத் தொடர்ந்து அவர் சொன்ன பல செய்திகள் சமாதானத்திற்கும் அமைதிக்கும் விடுக்கும் அச்சுறுத்தல் எச்சரிக்கைகளாக மட்டுமல்ல தமிழ்மக்களையும் விடுதலைப்புலிகளையும் மிரட்டும் தன்மைகொண்டவைகளாகவும் இருந்தன.

இலங்கைப் புலனாய்வுப் பிரிவுக்கு உளவுச் சேவைபரிமாற்றம் செய்வதன் மூலம் தீவிரவாதத்தை ஒடுக்க உதவும் இந்தியாவுடன் பயங்கரவாதமானது இரு நாடுகளுக்குமிடையே அச்சுறுத்தல்களுக்கு இடமளிக்காதவகையில் இராணுவ நடவடிக்கைகள் - கடற்படை நடவடிக்கைகள் ஆகியவற்றை இணைந்துமேற்கொள்ள இணக்கம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்து சமுத்திரப்பிராந்தியம் மீதான பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே ஒரு இணக்கப்பாடும் எட்டப்பட்டுள்ளதாம்!

பலாலி விமான நிலைய புனரமைப்புப் பணிக்கு இந்தியா உதவவுள்ளதாம்.....! சரி இவை ஒருபுறமிருக்க.......

கடற்படை,விமானப்படை மற்றும் இராணுவம் அனைத்திற்கும் தேவையான நவீன ஆயுதங்கள், போர்க்கப்பல்கள், யுத்த விமானங்கள் அனைத்தும் கொள்வனவு செய்வதற்காக முப்படையைச்சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்று சீனாவுக்கு செல்கிறதாம்.

சந்திரிகா பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்ற பின்னர் அதிரடியாக சில நடவடிக்கைகளை மேற்கொள்வது சமாதானத்திற்கான யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்கவா என்ற கேள்வி எழவே செய்கிறது.

இதே சமயம் நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு ரீதியில் இலங்கைப்படைகளுக்கு தாங்கள் பயிற்சி அளிப்பதாக அமெரிக்க ராஜாங்க திணைக்கள அதிகாரி கூறியுள்ளார்.

சிறிலங்கா இராணுவத்திற்கு சகல வழிகளிலும் உதவிக்கொண்டு தமிழ்மக்களுக்கு மட்டும் சமாதானத்தை உபதேசிக்கும் சர்வதேசத்தின் ஜனநாயகத் தன்மைக்கு என்ன சொல்லி பாராட்டுவதாம்.......

## சந்திரிகா - ரணில் பேச்சுக்கள்; ஆளை ஆள் ஏமாற்றும் வியூகங்கள்!



**சிறிலங்கா** சனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையேயான நான்காவது சுற்றுப்பேச்சு வார்த்தையும் முடிவெதையும் எட்டாத நிலையில் முடிவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தை களின் முடிவிலும் கூட இதேபோன்ற அறிவிப்பே வெளியான போதிலும் அடுத்த சுற்றுத் சந்திப்புக்குறித்தும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இம்முறை அடுத்த பேச்சுவார்த்தை குறித்த கதையே இல்லை. ஆனாலும் பேச்சுக்கள் சுமுகமாக நடைபெற்றதாக மட்டும் இரு தரப்பும் கருத்து வெளியிட்டுள்ளார்கள். இது சம்பிரதாயபூர்வமாகக் கூறப்படும் வார்த்தைகளே.

சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் குறித்து, முரண்பாடான கொள்கையுடையவர்கள் நடத்தும் பேச்சுக்கள் சுமுகமாக நடைபெறும் என்று எவரும் நம்பமாட்டார்கள். அப்படி அது சுமுகமாக நடைபெறுமேயானால் இருவரும் முக்கியமான சிக்கலுக்கான பிரச்சினைகள் குறித்து ஒரு முடிவுக்கு வந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கும்.

ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை.

எனவே, அடுத்த பேச்சுக்கான நாளெதுவும் குறிக்கப்படாது பேச்சுக்கள் முடிந்திருப்ப தானது, இனிமேல் பேச்சுக்கள் தொடர்வதற்கான வாய்ப்பு இல்லை என்பதை உணர்த்துவதாகவே உள்ளது.

அப்படி பேச்சுக்கள் எதுவும் நடைபெற நேரிட்டாலும் முடிவெதையும் எட்டும் சாத்தியம் இல்லை என்பதில் இருவருமே தெளிவாக இருப்பதாகத்தெரிகிறது.

பேச்சுவார்த்தை நடந்து முடிந்த இரண்டாம் நாளே தனது கட்சி உறுப்பினர்களிடம் ரணில் நாடாளுமன்றத் தேர்தலுக்கு தயாராகுமாறு பணித்துள்ளார்.

ரணில் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள நினைக்கிறார்.

அதாவது சமாதானச் சூழலில் தனக்கான உள்ளூர் மற்றும் சர்வதேச ஆதரவுக்காற்று மிகவும் சாதகமாக இருப்பதால், தேர்தலில் தனக்கு பெரும் வெற்றி கிடைக்கக் கூடிய வாய்ப்பு அதிகம் என்றே அவர் நம்புகிறார்.

சந்திரிகாஎந்த வகையிலும் தேர்தலை சந்திக்கும் துணிச்சலுடன் இல்லை.

இணக்கப் பேச்சு, தேசிய நல்லிணக்க அரசுக்கான பேச்சு, சமாதானத்திற்காக இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்பு குறித்து பேச்சு எனக் கொஞ்சக்காலம் கடத்தலாம் என நினைக்கிறார்.

ஆனால் அதற்கு சாத்தியம் இல்லை.

பறித்த அமைச்சுக்களை மீண்டும் சனாதிபதி வழங்க முன்வந்தால் அதற்கான சூழல் ஏற்படலாம். அப்போது ரணிலுக்கு அது வெற்றியாகிவிடும்.

ஆனால் ரணில் மீண்டும் ஒரு சிக்கலுள் விழநேரிடும்.

சமாதானப் பேச்சுக்களை, இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடுதலைப்புலிகளின் திட்ட வரைபிலிருந்து ஆரம்பிக்கநேரிடும்.

அதனை ஓரளவுக்கேனும் அங்கிகரிப்பதாகக் கூறினால் சிங்களப் பேரினவாதம் எதிர்த்தெழும். இந்தியாவும் இவ்விடயத்தில் மறைமுகமாக சமாதான எதிர்ப்பாளருக்கு உதவக்கூடும் என்பதற்கான சமிக்ஞையை காட்டியுள்ளது.

இது ரணிலுக்கு பாதகமான சூழலையே உருவாக்கும்.

எனவேதான் பாதுகாப்பு அமைச்சை மீளளிக்குமாறு கோரிக்கைவிட ரணில் துணியவில்லை. ஆக சனாதிபதியும், பிரதமரும் அரசியல் வியூகங்களை மாறி மாறி அமைத்து ஒருவரை மற்றவர் வீழ்த்தும் மூலோபாயங்களை வகுப்பதிலேயே காலத்தை கடத்தி வருகின்றனர். சமாதானமும் மெல்ல மெல்ல காலமாகிக்கொண்டே போகிறது.

**செங்குட்டுவன்**

துயரம், அழைக்காமல் நுழையும், எப்பொழுதும். - தாமஸ் ஃபுல்லர்

# கிரிக்கெட் ஆடுகளமும் அரசியல் ஆடுகளமும்...



சிறி. இந்திரகுமார்

கொழும்பு தழுவிய மக்கள் இப்போது பெருங் கவலையில் இருப்பது தம்புள்ளயில் நடைபெற்ற இலங்கை இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் வெற்றியைத் தனதாக்கிக்கொண்ட இலங்கை அணியினால் கண்டியில் நடைபெற்ற இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து அணியை வெற்றிகொள்ள முடியாது ஏமாற்றம் அளித்துவிட்டது என்பதே.

இந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளையும் பார்த்த எவரும் இலகுவில் ஒன்றை புரிந்துகொள்வர். அதாவது வெற்றி வாய்ப்பை நோக்கி நகர்ந்துகொண்டிருந்த இலங்கை அணியை இங்கிலாந்து வீரர்கள் பெரும் ஆர்ப்பாட்டங்கள் எதுவுமின்றி ஆறுதலாக ஆட்டம் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவதற்காக பின்வரிசை ஆட்டக்காரர்கள் சலிப்பூட்டும் வகையில் பந்து பரிமாற்றங்களை கடத்தும் வகையில் ஆடிக்கொண்டிருந்ததை.

ஆனால் மைதானத்தைச் சுற்றி நின்ற இலங்கை ரசிகர்கள் இறுதிப் பந்து பரிமாற்றத்திலாவது எஞ்சிய இங்கிலாந்து அணியினரின் விக்கட்டுக்களை இலங்கை பந்துவீச்சாளர்கள் வீழ்த்தி வெற்றி பெற்றுவிடமாட்டார்களா? என ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த கிரிக்கெட் ஆட்டத்தின்போது பொதுவாகவே இரண்டு அணிகளின் பந்துவீச்சாளர்களுக்குமே ஆடுகளம் சாதகமாக இருந்தது.

இந்த கிரிக்கெட் ஆடுகளத்தைச்சுற்றி இலங்கை ரசிகர்களின் கவனம் முற்றாக திரும்பியிருக்க இலங்கை அரசியல் ஆடுகளத்தை பொறுத்து சலித்து வெறுத்துப்போய் இருக்கிறார்கள்.

சனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக இருவராலும் நியமிக்கப்பட்ட மனோ - தித்தவெல குழுவினரும் இன்று இலங்கை கிரிக்கெட் ஆடுகளங்களில் விக்கட்டுகளை வீழ்த்துவதற்காக போராடிக்கொண்டிருக்கும் பந்துவீச்சாளர்களின் மனோநிலையிலேயே இருக்கின்றனர்.

சந்திரிகாவினாலும் ரணிலினாலும் நியமிக்கப்பட்ட இந்த அரசியல் பந்து வீச்சாளர்களாலும் வீசப்படுகிறபந்துகளில் சந்திரிகாவின் தலைமையிலான பந்துவீச்சாளர்கள் வீழ்த்தப்போகும் விக்கட்டுகளை பொறுத்தே சந்திரிகாவின் அரசியல் வெற்றிவாய்ப்பு தங்கியிருக்கிறது.

ஆனால் ரணிலோ தான் ஆடும் ஆட்டத்தில் தனது பந்து வீச்சாளர்களால் விக்கட்டுகளை வீழ்த்த முடியாவிட்டாலும் தொடர்ந்து இதே முறையில் பந்துகளை வீசிக்கொண்டிருந்தால், அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைவர் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஹிற்விக்கட் முறையில் அதாவது தனது துடுப்பினாலேயே தனது விக்கட்டை தட்டிவீழ்த்தி ஆட்டமிழந்தது போல ஆட்டமிழப்பார் என காத்திருக்கிறார்.

ஆனால் இந்த அதிகாரத்தை நிர்ணயிக்கப்போகும் பந்துவீச்சுகளை மட்டும் பார்த்து சலித்தது போல இதுவரை இலங்கை ரசிகர்களை போல ரசிகர்களோடு ரசிகர்களாக இருந்த சர்வதேச சமூகத்தின் இப்போது தனது ரசனை என்பது பந்து வீச்சு மட்டுமல்ல இதுவரை பேசாதிருந்த சமாதானம் எனும் துடுப்பாட்டமுமே என வாய் திறக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

அவர்கள் தொடர்ந்தும் பந்து வீச்சை பார்த்துக்கொண்டிருக்க தயாரில்லை என்பதையே அடுத்த வாரம் யப்பானிய விசேட தூதுவர் யசுசி அஹாசியின் இலங்கை விஜயம் தெளிவுபடுத்துகிறது.

இதன் சமிக்ஞைகள் அண்மைக்காலமாகவே தெரியத்தொடங்கியிருந்தன. சந்திரிகாவோ,ரணிலோ உண்மையில் சமாதானத்திற்காக பாடுபடவில்லை. அவர்கள் தங்கள் அரசியல் மேலாண்மையை நிறுவிக்கொள்ளவே முயல்கிறார்கள் என்ற உண்மை சர்வதேச சமூகத்திற்கு புலப்படத்தொடங்கியிருந்தது.

ஏனென்றால், சமாதான இரட்சகராகத் தன்னை இனங்காட்டிய ரணில் தனக்கும் சந்திரிகாவுக்கும் இடையில் ஏற்பட்ட அதிகார மோதலில் சமாதானத்தை முற்றாக கை நழுவவிட்டு அவரின் கவனம் தனது அதிகாரத்தை குறிவைப்பதாகவே இருக்கிறது.

இலங்கையில் தலையாய பிரச்சினை ஒன்று தீராது இருந்த போது அதனை கைவிட்டு இரண்டு அரசியல் தலைவர்களுக்கிடையில் அதிகார மேலாண்மையை நிறுவும் அவசரம் அதிகம் தலைதூக்கியது சர்வதேச சமூகத்திற்கு அவ்வளவு திருபதியை அளித்திருக்கமுடியாது.

இந்த அதிகாரமேலாண்மை போட்டிக்குள் சந்திரிகாவிற்கு நிகர் ரணில் என்பதை ரணில் மெல்ல மெல்ல வெளிப்படுத்தத் தொடங்கி விட்டார். இதனால் ரணில் தனக்கு ஏற்படுத்திய சமாதான இரட்சகர் என்ற பெயர் மெல்ல கலையத்தொடங்கிவிட்டது.

ஆனால் உலகின் முரண்பாடுகள் முற்றி மோதல்கள் தொடரும் நாடுகளுக்கெல்லாம் இலங்கையை முன்னுதாரணமாக காட்ட விரும்பிய சர்வதேச சமூகத்திற்கு சந்திரிகா - ரணில் அதிகார மேலாண்மை போட்டிக்கிடையில் சிக்குண்டு சமாதானம் செத்துவிடக்கூடிய அபாயம் இருப்பதாகவே கருதுகின்றன.

இதில் கவனிக்கவேண்டியது என்னவென்றால், புலிகள் இராணுவரீதியாக பெற்ற அதேயளவு வெற்றியை இதுவரையும் சமாதானத்திற்காக காத்த பொறுமையினூடாகவும், சமாதான முயற்சி தொடர்பான புலிகளின் அணுகுமுறையினூடாகவும் புலிகளுக்கு முன்பு பெற்ற இராணுவ வெற்றிக்கு சமதையான அரசியல் வெற்றியை இப்போது பெற்றுக்கொடுத்திருக்கிறது.

இந்த கணிப்பீடு அதிகம் புலிகள் பக்கம் சார்ந்த ஒரு கருத்தல்ல. அண்மைக்காலமாக சர்வதேச ராஜதந்திரிகள் பலர் வெளிப்படுத்தியுள்ள கருத்துக்களே இதனை புலப்படுத்துகிறது.

அண்மையில் இணையத்தளம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவித்துள்ள ஒரு ராஜதந்திரி அரசின் மீது தமது அழுத்தம் ஆரம்பத்திலிருந்து மேற்கொள்ளப்படாமல் தனித்து புலிகள் மீது மட்டும் மேற்கொள்ளப்பட்டதன் தவறே தற்போதைய விளைவு என தெரிவித்துள்ளார்.

இந்த கருத்து அரசு - புலிகளிற்கிடையிலான சமாதான பேச்சுவார்த்தையில் சர்வதேச சமூகம் தவறிழைத்துவிட்டதுடன், தோல்வியையும் சந்தித்துவிட்டது என்பதையே காட்டுகிறது.



ஆனால் புலிகளோ தாங்கள் வெளியிட்டு வந்த மேற்குலகின் புலிகள் மீதான அழுத்தமோ பக்கச்சார்பான நிலைப்பாடோ இலங்கையில் எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும் என்ற கருத்தில் முழுமையான வெற்றியை பெற்றுவிட்டனர்.

ஏனென்றால் மௌனமாக சமாதானத் திற்கான தமது விசுவாசத்தை காட்டிவந்த புலிகள் ஓரளவுக்கு சர்வதேச சமூகத்தை பகிரங்கமாகவே எச்சரித்திருந்தனர்.

மேலும் இன்னுமொரு கருத்தையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அண்மையில் மட்டக்களப்பில் வைத்து அமெரிக்கா புலிகள் மீதான தடையை நீக்குவதற்கான வாய்ப்பு ஏற்படலாம் என்றும் விடுதலைப்புலிகள் மனித உரிமை காப்பு மற்றும் ஏனைய விடயங்களிலும் நடந்துகொள்ளும் விதம் குறித்து அமெரிக்கா கருத்திற்கொண்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இது அமெரிக்கா புலிகள் தொடர்பான அணுகுமுறையில் புலிகளின் நடவடிக்கையில் திருப்தி கொள்வதையே காட்டுகிறது.

அத்தோடு மேற்கு நாட்டு ராஜதந்திரி ஒருவர் தாங்கள் இதுவரை கொழும்பை கவனிக்காமல் கிளிநொச்சி மீது மாத்திரமே கூடுதல் கவனம் வைத்திருக்கிறோம். இது தவறு தாம் இரு தரப்பையும் சமத்துவமான அளவில் கண்காணித்து நெருக்குதலைக் கொடுத்திருக்க வேண்டும் என்றும் தங்களது இராஜதந்திர பங்கின் விசை மழுங்கலானதாக அமைந்துவிட்டது என்றும் தெரிவித்திருந்தார்.

இவையெல்லாம் எதைக் காட்டுகிறது என்றால் புலிகளது அரசியல் ரீதியிலான வெற்றியைத்தானே. எனவேதான் இதுவரை தமது அரசியல் இராஜதந்திர நகர்வில் வெற்றியைப்பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் இனி அடுத்துவரும் காலங்களில் சர்வதேச சமூகத்தின் இராஜதந்திர அழுத்தப்பிரயோகங்கள் கொழும்பை நோக்கி நகரும், மாறாக தற்போது ஏற்பட்டுள்ள ஒரு வெற்றிடத்தை சர்வதேச சமூகம் தொடர்ந்தும் சுமுகமாக பேணிக்கொள்வதற்காக புலிகளை தாஜா பண்ணும் வார்த்தை வித்தைகளாக இதனை மேற்கொள்ளுமாயின் சந்திரிகா - ரணிலுக்கிடையிலான அதிகார மேலாண்மை ஆடுகளம் முடிவின்றி எவ்வாறு தொடர்கிறதோ அதேபோன்றே சமாதான ஆடுகளமும் முடிவின்றித்தொடரும்.

இந்த நிலையில் சர்வதேச சமூகத்தின் அதிக பலப்பிரயோகம் கொழும்பை நோக்கித்திரும்பும் என நம்பலாம். ●

---

## மதவடி மயிலர்



**செய்தி:-** *உயர்பாதுகாப்பு வலயங்கள் சட்ட ரீதியாக அமைக்கப்பட்டனவா? சட்டமா அதிபரிடம் உயர் நீதிமன்றம் கேள்வி.*

**மயிலர் :-** உயர் நீதிமன்றம் சட்ட ரீதியாக அமைக்கப்பட்டதாக இருக்கலாம். ஆனால் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் இராணுவ ஆக்கிரமிப்பாளர்கள் முகாமிட்டுக் குந்தியிருக்க எந்த சட்டம் அனுமதிக்கிறதாம்? இது கூடத்தெரியாத நீதிபதிகளா? பாவம் சட்டமா அதிபர். இனி இதுக்கு தோதாக அரசியல் யாப்பு சட்டவிதிகளுக்குள் எதையாவது தேடிப்பிடிக்க வேண்டுமே! அது சரி உயர்நீதிமன்ற வளாகப்பகுதியில் போய் இராணுவம் குந்திக்கொண்டு. அதனை உயர்பாதுகாப்பு வலயம் என்று பிரகடனம் செய்தால் நீதிபதிகள் அதற்கும் சட்டமா அதிபரிடம் யோசனை கேட்பார்களா?

**செய்தி :-** *நாடாளுமன்ற உறுப்பினர் தொகையை 266 ஆக அதிகரிக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆலோசனை.*

**மயிலர் :-** ஏற்கனவே 225 பேர் இருந்து நாட்டை குட்டிச்சுவராக்கி கூத்தடிக்கிறது போதாதென்று இன்னும் கொஞ்சப்பேரை உருவாக்கப்போகினம். மக்களின் வரிப்பணத்தையும். வெளிநாட்டுக் கடன்களையும். விழலுக்கிறைத்த நீராகச் செலவழிக்கிறதைத் தவிர வேறு என்னத்தைச் செய்து கிழிக்கப்போகினம் இவையள்? பிச்சையெடுக்கிற பெருமாளிடம் பிடுங்கித்தின்னுற அநுமார் கூட்டங்கள கூட்டுறது ஆபத்துப்பாருங்கோ.

**செய்தி:-** *சுரங்க அறையொன்றில் பதுங்கியிருந்த சதாம் ஹூசைன் அமெரிக்கப் படைகளிடம் பிடிபட்டார்.*

**மயிலர் :-** பிடிபடாமல் உயிர் துறந்திருந்தால் சதாம் ஹூசைன் தன் பெயரை நிலைக்க வைத்திருப்பார். சரி அமெரிக்காவின் 'புஷ்' ஒரு பெருமூச்சு விடுவது கேட்கிறது... ஆனாலும் பின்னாலே யாரோ செருமிக்காட்டி தன் இருப்பை அவருக்கு தெரிவிப்பதும் கேட்கவே செய்கிறது....

அட....! அது பின்லேடன்.... புஷ்ஷிக்கு மீண்டும் உள்ளூற நடுங்குகிறது.... அந்த மீசைக்காரரைப் பிடித்தாயிற்று. இந்தத் தாடிக்காரரை என்ன செய்வதாம்....? இஸ்லாமிய உலகம் அமெரிக்கரை நிம்மதியாக நித்திரை கொள்ளவே விடாது போலிருக்கு......!

**செய்தி:-** *நாடுகளுக் கிடையிலான ஒத்துழைப்பு ரீதியிலேயே இலங்கைப் படைகளுக்கு பயிற்சி அளிக்கிறோம் என்கிறார் அமெரிக்க ராஜாங்க திணைக்கள அதிகாரி.*

**மயிலர் :-** அதுசரி நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு ரீதியில் இலங்கைப் படைகளுக்கு பயிற்சி அளித்து தமிழ்மக்களுக்கு எதிராக போரிடத் தயார் படுத்துகிறோம் என்று விளக்கமாகக் கூறினால் என்ன?

அது சரி படைகளுக்கு பயிற்சி அளிப்பதை விட்டு பிரதமருக்கும். சனாதிபதிக்கும் சமாதானத்தை எப்படி ஏற்படுத்துவது என்று பயிற்சி அளிக்கலாமே.... சண்டைக்கு ஒத்துழைப்பு வழங்குவீர்கள் சமாதானத்திற்கு பயிற்சி அளிக்கமாட்டீர்கள்... சும்மா அழுத்தம் தெரிவித்து என்ன பயன் பாருங்கோ.....?

**செய்தி:-** *விடுதலைப்புலிகள் தொடர்பான ஜெயலலிதாவின் நிலைப்பாட்டிற்கு சிகலஉறுமய பாராட்டு.*

**மயிலர் :-** பேயைச் சாத்தான் பாராட்டாமல் வேறு எதுதான் பாராட்டுமாம்? போற போக்கைப் பார்த்தால் சிகல உறுமய. ஜே.வி.பி. எல்லாம் ஜெயலலிதாவை தங்கள் இதய தெய்வம் என்று பூஜித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.... ஏன் இந்தியா போய் ஜெயலலிதாவின் காலில் விழுந்து வணங்கவும் கூடும். அப்போது தானே அம்மாவின் ஆசீர்வாதம் கிடைக்கும்....!

---

☞ தருணத்திற்கு ஏற்ப தைரியம் பெருகும். - வில்லியம் ஷேக்ஸ்பியர்.

நேர்நோக்கு

# தேசப்பற்று இருக்குமானால்

நாட்டுப்பற்றாளர் முன்னணி என அண்மையில் அமைக்கப்பட்ட அமைப்பு கட்சியாக மாறும் நோக்கத்தைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த நாட்டுப்பற்றாளர் அமைப்பில் அரசியல் கட்சி உறுப்பினர்கள் பலர் அங்கம் வகிக்கையில் அது கட்சியாக மாறும் எண்ணத்தை வெளியிட்டிருக்கிறது.

இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமே தற்போதைய சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டிவிடுவதாகும். இவ் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதும் இது பல சமாதான எதிர்ப்புப் பேரணிகளை நடத்தியிருக்கிறது. இதில் ஜே.வி.பி, சு.க, ம.ஜ.மு பிரமுகர்கள் கூட கலந்துகொண்டிருக்கிறார்கள்.

"போலிச்சமாதான நடவடிக்கைகள்'' அல்லது "நாட்டைப் புலிகளுக்குத் தாரைவார்க்கும் முயற்சி'' என சமாதான முயற்சிகளை வர்ணிக்கும் இவர்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக யுத்தத்தையே அடிமனதில் கொண்டிருக்கிறார்கள்.

சிறிலங்காவின் முக்கிய கட்சிகளின் உறுப்பினர்கள் - ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிரானவர்கள் - ஒன்றிணைந்து இந்த அமைப்பை உருவாக்கிய போதும் இப்போது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகள் இவர்களுக்கு பிடிக்காத காரணத்தினாலேயே அவர்கள் இவ்வாறானதொரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றதும், போர் நிறுத்த ஒப்பந்தம், சமாதான நடவடிக்கைகளைக் கைவிட்டு கடுமையான போக்கைக் கையாள்வார் என எதிர்பார்த்த வேளையில் அது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாது உள்ளதுடன் போர் நிறுத்தத்தை இறுக்கமாகக் கடைப்பிடிக்கவும் உத்தரவிட்டிருப்பது அவர்களை விரக்திக்குள்ளாக்கியுள்ளது.

அதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சைப் பறித்தாலும் சமாதான முன்னெடுப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அதற்காகவே தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க முன்வருமாறு சனாதிபதி அழைத்து வருகிறார். இம் முயற்சி இதுவரை வெற்றியளிக்காவிடினும் நாட்டுப்பற்றாளர் முன்னணிக்கு இந்த நடவடிக்கைகள் மகிழ்ச்சியளிப்பதாக இல்லை.

ரணில்விக்கிரமசிங்க கடைப்பிடித்த அதே நடவடிக்கைகளையே சனாதிபதி சந்திரிகாவும் கடைப்பிடிப்பதாக அவர்கள் எண்ணுவதால் சனாதிபதி சந்திரிகா மீதும் அவர்கள் கோபமுற்றுள்ளனர்.



ஆனால் அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இவ் இரு கட்சிகளும் யுத்தம் நடத்தி அதன் விளைவை அறிந்து கொண்டுள்ளன. அது மட்டுமல்லாது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் வழங்கிய ஆணைக்கு இணங்கவே ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இப்போது பேச்சுவார்த்தைகளில் இறங்கியிருக்கிறது.

இதேவேளை சுமார் ஏழு வருடகாலமாக அனைத்து வழங்களையும் திருப்பி யுத்தம் புரிந்தவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தின் இறுதிப் பகுதியில் பொருளாதார வழிகள் யாவும் அடைக்கப்பட்டு பெரும் சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டிருந்தவர் அவர்.

அதிலும் மேலாக "அக்கினிச் சுவாலை" வாங்கிய அடியினால் இராணுவ ரீதியாக அடுத்து என்ன? என்பது தெரியாத நிலையில் இருந்தவர்.

இவ்வாறான சூழலில் நடைபெற்ற தேர்தலில்தான் சமாதானத்துக்காக மக்கள் ரணிலில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்தார்கள். மக்கள் இவ்வாறு எடுத்த முடிவானது மிகச் சரியானது என்பது கடந்த இரண்டு வருடங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இச்சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்தால் மட்டுமே அனைத்து ரீதியாகவும் நாடு பாதுகாக்கப்படமுடியும் என சிங்கள மக்கள் இன்று உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதேவேளை, சமாதான முயற்சிகளுக்கு எதிரானோர் அல்லது குழப்ப முற்படுவோர் சர்வதேசரீதியாக மட்டுமல்ல, நாட்டு மக்களாலும்புறக்கணிக்கப்படும் நிலையே இன்று காணப்படுகிறது. அதனை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சைப் பறித்துக்கொண்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்கள் தெளிவுற விளக்கியுள்ளன.

அதனாலேயே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் போர் நிறுத்த ஒப்பந்தம் கடைப்பிடிக்கப்படும் என்றும் சமாதான நடவடிக்கைகள் தொடரும் எனவும் கூறவேண்டி வந்தது. அவரே விரும்பியிராத - அவரால் முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை எல்லோரையும் விட அவரே இறுக்கமாகக் கடைப்பிடிக்கவேண்டிய நிலையில் இருக்கிறார். அல்லாவிடின் சமாதானத்தின் விரோதியாக உலகத்தாலும் நாட்டின் விரோதியாக மக்களாலும் பார்க்கப்படவேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்படுவார்.

இன்று நாட்டுப்பற்றுக் குறித்து பேசும் ஜே.வி.பி. கூட ஒரு சமயம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைக்கும் ஆட்சியில் இடம்பெற நேர்ந்து அவர்களுக்கே பாதுகாப்பு அமைச்சுக் கிடைத்தாலும் அவர்களும் இப்பொழுது சந்திரிகாவுக்குள்ள நிலைக்கே தள்ளப்படுவார்கள்.

ஏனெனில் இன்று யுத்தமொன்று ஏற்படுவதை சிங்கள மக்கள் விரும்பவில்லை. அமைதி வழியில் பிரச்சினைக்குத் தீர்வு காணவே முயலுகின்றனர். அதனாலேயே அவர்கள் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.மு. வை ஆதரிக்கிறார்கள். இதனை நன்கு புரிந்துகொண்டதன் காரணத்தாலேயே பொதுத் தேர்தல் ஒன்றுக்கு சனாதிபதி சந்திரிகா அஞ்சுகிறார்.


இவ்வாறான நிலையில் தேசப்பற்று என்று கூறிக்கொண்டு தேசத்தை அழிக்க வழிகாட்டும் இவர்களை மக்கள் ஆதரிக்க மாட்டார்கள். அங்கிகரிக்கவும் மாட்டார்கள். இவர்கள் ஊர்வலம் நடத்திக்கொண்டிருப்பதைத்தவிர வேறு வழியில்லை. உண்மையில் தேசப்பற்று அவர்களுக்கு இருக்குமானால் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவாகவே இவர்கள் செயற்படவேண்டும்.

வேலவன்

# தீர்வை விலக்கின் பலனை மக்கள் அனுபவிப்பார்கள்

தமிழீழ நிதித்துறையினர் மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் பொருளாதார மேம்பாடு என்பவற்றை கருத்திற்கொண்டு பொருளாதார ரீதியாக மேம்பாடு காண்பதை கவனத்தில் எடுத்து இதுவரை காலமும் தங்களால் அறவிடப்பட்ட தீர்வைகள் தொடர்பாக பல பொருட்களுக்கு தீர்வை விலக்களிப்பதோடு, பல பொருட்களுக்கு தீர்வை குறைப்பையும் செய்துள்ளனர்.

இந்தவகையில் மக்களின் வாழ்க்கையை கவனத்திற்கொண்டு நிதித்துறையினர் மேற்கொண்டிருக்கும் இம் முயற்சியின் பலன்களை மக்கள் அனுபவிக்கக் கூடியதாக இருக்கும்.



அதிலும் போரின் கொடுமையினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட மீனவர்கள், மற்றும் விவசாயிகள் தொழில் ரீதியாகவும், வருவாய் ரீதியாகவும் ஒரு முன்னேற்றகரமான நிலையினை அடையத்தக்கதாக அந்த தொழிலின்போது பயன்படுத்தப்படும் உபகரணங்களுக்கு தீர்வை விலக்களித்திருப்பதோடு,

உள்ளூரில் அவர்களின் உற்பத்திப் பொருட்கள் ஒரு சிறந்த சந்தைவாய்ப்பை பெறும் வகையில் கவனமாக நிதித்துறையினர் தமது தீர்வை விலக்கு மற்றும் தீர்வை விபரங்களை வெளியிட்டுள்ளனர்.

இதுவரை காலமும் உள்ளூரில் நெல் உற்பத்தியைப் பொறுத்த வரை போதிய நிரம்பல் இருந்த போதும் மேலதிகமாக இறக்குமதி செய்யப்படும் அரிசியினாலும், நிவாரணத்துக்காக கொண்டுவரப்படும் அரிசியினாலும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் நெல்லிற்கு கேள்வியும் அதே நேரம் சந்தை வாய்ப்பும் அற்றிருந்த நிலமை காணப்பட்டது.

இதனை கவனத்தில் கொண்டு இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான தீர்வையினை அதிகரித்ததுடன் கோதுமை மாவிற்கான தீர்வையினை அதிகரித்து உள்ளூரில் அரிசிப்பாவனையை அதிகரிக்கச் செய்வதுடன் அரிசிக்கான சந்தை வாய்ப்பை அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு நிதித்துறையினர் இதுவரை காலமும் தங்களால் அறவிடப்பட்ட தீர்வை அறவீடுகளை மீளாய்வு செய்து மக்களின் வாழ்க்கைச் சுமையினை சற்றேனும் குறைக்கத்தக்கதாக வழிவகை செய்துள்ளமை பாராட்டுக்குரியதே.

மக்களிடம் அறவிடப்படும் தீர்வைகள் மூலம் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு அத்தியாவசியமான படை பலத்தையும் நிர்வாகக் கட்டமைப்புக்களையுமே புலிகள் பேணி வருகின்றனர்.

மக்கள் துன்பங்களுக்கு மத்தியிலும் அளித்துவந்த பங்களிப்பினூடாக கட்டிவளர்க்கப்பட்ட புலிகளின் படையணிகள் சாதித்த சாதனைகள் மூலமே அரசு புலிகள் பேச்சுவார்த்தையின் போதும் சமபங்காளிகளாக பேரம் பேசும் சக்தியை அதிகமாகக் கொண்டு பேச்சுமேசையில் பேச்சு மேலாண்மை கொண்ட தரப்பாகப் புலிகளால் கலந்துகொள்ள முடிந்தது.

இந்த நிலையில் புலிகள் இத்தீர்வை அறவீடு மூலம் பெற்ற பெருந்தொகை நிதி இழப்பை இழந்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை கவனத்தில் கொண்டு அவர்களின் மேம்பாட்டிற்காக செயலாற்றியுள்ளனர்.

இந்த தீர்வை விலக்கு மூலம் பொருட்களுக்கு ஏற்படக்கூடிய விலை குறைப்புகளை உரியமுறையில் வர்த்தக சமூகம் நுகர்வோரைச் சென்றடையக்கூடிய வழிவகைகளைச் செய்யவேண்டும்.

ஏனென்றால் புலிகள் எந்த நோக்கத்தின் அடிப்படையில் இந்த தீர்வை விலக்களிப்பை மேற்கொண்டார்களோ அந்த நோக்கம் உரிய இலக்கை அடைய வேண்டும்.

அதனடிப்படையில் இந்த செயற்பாட்டின் வெற்றியில் வர்த்தக சமூகத்தின் உழைப்பும் ஒத்தாசையும் கணிசமான அளவு இருப்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

இதனை புரிந்துகொண்டு செயற்படுவதன் மூலமே விடுதலைக்காக உழைத்த மக்கள் ஆறுதலடைய பங்காற்றியதாக இருக்க முடியும்.

இதனை எல்லோரும் புரிந்துகொண்டு செயலாற்றுவார்கள் என நம்பலாம்.

—— நக்கீரர்

# வாருங்கள் மும்பாய் நகர் போகலாம், பார்க்கப் பேச நிறைய இருக்கு

நகரேஷு காஞ்சி என்ற வட மொழி வாக்கியம் நகரங்களில் சிறந்தது காஞ்சிபுரம் என்று பொருள்படுகின்றது. பலவிதமான சிறப்புக்களுள்ள காஞ்சி பண்டைய காலந்தொட்டு இன்றுவரை நெசவுத் தொழிலுக்குப் பேர் பெற்றுள்ளது.




காஞ்சிபுரம் சேலைகள் மிகச் சிறந்து விளங்குவதற்கு கைத்தறி மூலம் நெசவு செய்யப்படுவதே காரணம். அழகுக்கு அழகு செய்யும் காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளின் பளபளப்புக்கு அங்குள்ள பாலாறு நீர் ஊற்றுத் தான் காரணம். கச்சாப்பட்டில் சாயம் ஏற்றும் போது இந்த நீர் பயன்படுத்தப்படுவதால் தனித்துவமான பளபளப்பு ஏற்படுகின்றது. இந்த நகரில் 40,000கைத்தறிகள் இருப்பதால் காஞ்சிபுரம் போனால காலாட்டிப்பிழைக்கலாம் என்ற பழமொழி தோன்றியது.

காஞ்சியின் நெசவுத் தொழில் பற்றி, சிலப்பதிகார வரிகள் இவ்வாறு கூறுகின்றன:

நூலினும் மயிரினும்  
நுழைநூல் பட்டினும்  
பல்வகை தெரியாப் பன்னூ  
தடுக்கத்து நறுமடி செறிந்த  
அறுவையர் வீதி.

பிரிட்டிஷ் ஆட்சியின்போது மும்பாய் நகரப் பகுதியில் பிரமாண்டமான நெசவு ஆலைகள் இருந்தன. இன்று குறைந்துவிட்டன. 1995ல் இந்து மதத்தேசியவாத மாநில அரசால் பொம்பே (BOMBAY) என்ற பிரிட்டிசார் வைத்த பெயர் மும்பாய் (MUMBAI) என்று மாற்றப்பட்டது. மும்பாய் என்ற பெயருடன் ஒரு பெண் தெய்வத்தின் கோயில் அப்பகுதியில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. 1534ல் இப்பகுதி போத்துக்கேயர் வசமானது. 1661ல் அது பிரிட்டிசாரின் பிடியில் வீழ்ந்தது. மகாராஷ்திரா மாநிலத்தின் தலைநகரான மும்பாய் இந்தியாவின் மிகப்பெரிய துறைமுகங்களில் ஒன்றாகும்.



இந்தியாவின் நான்கு மிகப்பெரிய நகரங்களில் மக்கள் தொகையிலும் பரப்பளவிலும் மும்பாய் முதலிடம் வகிக்கிறது.

புதுடில்லி, கொல்கொத்தா, சென்னை என்பன முறையே இரண்டாம், மூன்றாம், நான்காம் இடங்களை வகிக்கின்றன. சிறிது காலத்திற்கு முன்பு கொல்கொத்தா நகர் கல்கத்தா என்று அழைக்கப்பட்டது. வங்காளி பேசும் மேற்கு வங்காளத்தின் தலைநகராக இந்த நகரம் விளங்குகின்றது.

வங்காள மொழியில் ஒரு விசித்திரம், 'அ'ஒலியை இம் மொழி பேசுவோர் 'ஒ' என்று தான் உச்சரிப்பார்கள். பாசு என்ற பெயரை போசு என்பார்கள். கல்கத்தா, கொல்கொத்தா என்று மாற்றப்பட்டதில் வியப்பில்லை. 1912ம் ஆண்டுவரை பிரிட்டிஷ் இந்தியாவின் தலைநகரமாக கொல்கொத்தா இருந்தது. அதன் பின் புதுடில்லிக்கு மாற்றப்பட்டது. இன்று அது இந்தியாவின் தலைநகரமாகத் தொடர்கின்றது.

புதுடில்லி ஒரு திட்டமிட்டுக் கட்டப்பட்ட புதுநகரம். பழைய டில்லி அருகாமையில் இருக்கிறது. பழைய டில்லி யமுனா நதியோரத்தில் காணப்படுகின்றது. முகலாய மன்னன் ஷாஜகான் 1638ல் பழைய டில்லியைச் சுற்றிப் பெருஞ்சுவர் எழுப்பினான், இன்றும் அது நிலைக்கின்றது. பழைய டில்லிக்குத் தெற்கிலுள்ள புதுடில்லியைத் திட்டமிட்டுக்கட்டியவர் நகர் உருவாக்கக் கலைஞர் சேர் எட்வின் லான்ட்சியர் லுட்யென்ஸ் (SIR EDWIN LANSEER LUTYENS) என்பவராவார். புதுடில்லி கட்டப்பட்ட காலம் 1912-1930.

இந்தியாவின் முன்னாள் ஆட்சியாளர்களான பிரிட்டிசார் மும்பாயை இந்தியாவின் தலைவாயில் என்று அழைத்தார்கள். கப்பல் மூலம் அவர்கள் தமது நாட்டுக்குப் போக்குவரவுகளை மும்பாய் மூலம் மேற்கொண்டனர். அரேபியன் கடல் நீபடும் கரையோரத்தில் 'இந்தியாவின் நுழைவாயில்' (GATEWAY TO INDIA) என்று பெயரிடப்பட்ட கல்லினாலான பிரமாண்டமான வளைவுக்கட்டடத்தை பிரிட்டிசார் 1911ல் ஐந்தாம் ஜோர்ச் மன்னனின் இந்தியா வருகையை நினைவூட்டுவதற்காகக் கட்டியுள்ளனர். இந்தியாவின் மிகப் பெரிய நகரமான மும்பாய் பல குறுந்தீவுகளை 'தாம்போதிகள் மூலம் தொகுத்து உருவாக்கப்பட்டுள்ளது. இட நெருக்கடிதான் மும்பாய் எதிர்நோக்கும் மிகப்பெரிய பிரச்சினை.

உலகெங்கிலும் பத்து மில்லியனுக்கும் கூடுதலான சனத்தொகையுள்ள பெருநகரங்கள் பதின்மூன்று உள்ளன. அவற்றுள் ஆசியாவில் ஏழு இருக்கின்றன. உலகின் மக்கள் தொகையிற் கூடிய நகரமாக ஜப்பான் தலைநகர் டோக்கியோ இடம்பெறுகின்றது. இதுவொரு தனிநாடு போன்றது என்று சொல்லப்படுகின்றது. ஆசிய நகரங்கள் யாவும் கிட்டத்தட்ட ஒரே வகைப்பிரச்சினையை எதிர் நோக்குகின்றன. சீனாவின் ஷென்ஹாய் தொடங்கி இந்தியாவின் மும்பாய்வரை குடியிருப்புக்கள், சேரிகள், குப்பை மேடுகள், மாசுபட்ட காற்று, தொழிற்சாலைக் கழிவுகள் என்பன பொது அம்சங்களாகக் காணப்படுகின்றன. நோய் உற்பத்தி மையங்களாகவும் ஆசியாவின் பெரும் நகரங்கள் உருவாகியுள்ளன. பதின்மூன்று மில்லியன் மக்கள் தொகையைக்கொண்ட மும்பாய் இதற்கு விதிவிலக்கல்ல.

அண்மையில் எடுக்கப்பட்ட கணிப்பின்படி உலகின் மிகக் கூடுதலான அலுவலக வாடகையை அறவிடும் நகரம் என்று மும்பாய் வர்ணிக்கப்பட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை மும்பாயிலிருந்து செயற்பட்ட நெசவுத் தொழிற்சாலைகள் இப்போது அகலத்தொடங்கியுள்ளன. இவையிருந்த நிலங்கள் அலுவலகக் கட்டடங்கள், தொடர் மாடிக் குடியிருப்புக்கள் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவின் வர்த்தகத்தலை நகரமாகவும், வங்கி நடவடிக்கைகளின் அனைத்திந்திய மையமாகவும் மும்பாய் இன்று திகழ்கின்றது. பாரிய வர்த்தக நிறுவனங்களிடமிருந்து இந்திய மத்திய அரசு வசூலிக்கும் வரிப்பணத்தின் எண்பது வீதம் மும்பாய் வர்த்தக நிறுவனங்களிடம் இருந்து பெறப்படுகின்றன. உலகின் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள் யாவும் தமது கிளைகளையும், முகவர் அலுவலகங்களையும் மும்பாயில் திறந்துள்ளன. இந்தியச் சந்தைக்குள் நுழைவதற்கு மும்பாயை அவர்கள் நுழைவாயிலாக கொண்டுள்ளனர். மும்பாயில் பங்குச்சந்தை இந்திய மட்டத்தில் முதலிடத்தையும், ஆசியாவில் கேந்திர இடத்தையும் பிடித்துள்ளது.

ஒரு நகரின் தோற்றம், வளர்ச்சி அல்லது வீழ்ச்சி, மறைவு என்பன அந்த நகரம் அமையும் நாட்டு மக்களின் அரசியல் மற்றும் பொருளாதார வரலாறாக இடம் பெறுவதாகக் கூறுவர். இதற்கு மும்பாய் விதிவிலக்கல்ல. ஜவகர்லால் நேரு இந்திரா காந்தி காலத்தில் அவர்களுடைய சோஷலிசப் பொருளாதாரக்கொள்கைகள் காரணமாக இந்தியா மிகவும் நலிவுற்ற நிலையில் இருந்தது. நரசிம்மராவ் பிரதமரான பின் அவருடைய நிதி அமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் புகுத்திய திறந்த பொருளாதாரக்கொள்கை காரணமாகப் பொதுவாக இந்தியாவும் குறிப்பாக மும்பாயும் இன்றைய பூதாகர விரிவை அடைந்தன.

ஒரு இலட்சத்துக்கும் குறைவான நிரந்தர வாசிகளைக்கொண்ட கிளிநொச்சியை நகரமென்று குறிப்பிட முடியாவிட்டாலும் அது அண்மைக் காலமாக எமது அரசியல் வரலாறு, இராணுவ வரலாறு என்பனவின் வெளிப்பாடாக அமைகின்றது. மக்கள் தான் நகரத்தின் முக்கிய அங்கம். இராமன் இருக்கும் இடம் அயோத்தி என்பதற்கு அமைவாக எங்கு தலைமை இருக்கிறதோ அவ்விடம் முக்கியத்துவம் பெறும் என்பது பொதுவிதி.

ஆசிய நகரங்களில் கோடீஸ்வரர்களும் பரமஏழைகளும் தத்தம் பகுதிகளில் வாழ்வதை அவதானிக்க முடியும். ஆசியாவின் மிகப்பெரிய சேரி என்று வர்ணிக்கப்படும் தாராவியில் ஏழை மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் நெருக்கமாக வாழ்கின்றனர். மத்திய மும்பாயில் தாராவி காணப்படுகின்றது. இச்சேரிக்கு ஊடாகச் செல்லும் நவீன நெடுஞ்சாலைக்கு மறுபக்கத்தில் வானுயர்ந்த தொடர் மாடிக்கட்டடங்களும் செல்வந்தர்களின மாளிகைகளும் காட்சி தருகின்றன. தாராவியின் சேரியில் பொருளாதார முயற்சிகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு குடிசையும் ஒரு சிறு கைத்தொழில் நிலையமாக இடம்பெறுகின்றன. நாளொன்றுக்கு எழுபது குரோ இந்திய ரூபா இலாபத்தைத் தாராவி ஈட்டுவதாகவும், அதில் மூன்றிலொரு பங்கு ஏற்றுமதிகளால் கிடைப்பதாகவும் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தாராவில் வாழும் தமிழர்கள் சேரி மக்களுக்கான உணவகங்களை நடத்துகின்றனர். உடுப்பி என்று இவ்வுணவகங்கள் அழைக்கப்படுகின்றன.

தீவுகள் ஒன்றிணைந்த பெருநகரமான மும்பாயின் மையப்பகுதியாக பதினொரு மைல் நீளமும், மூன்று மைல் அகலமும் கொண்ட மும்பாய் தீவு காணப்படுகின்றது. நகரத்தின் வர்த்தக, நிர்வாக, அரசியல் இருப்பிடமாகவும் இத்தீவு அமைகின்றது. இத்தீவின் மேற்கில் 180அடி உயரமான மலபார் ஹில்ஸ் (MALABAR HILLS) என்ற குன்று இருக்கின்றது. குன்றின் பக்கங்களில் கோடீஸ்வரர்களின் மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன. குன்றின் உச்சியிலிருந்து மும்பாய் நகரின் பெரும் பகுதியைப்பார்க்கலாம். இரவில் இத்தீவின் கரையோரமாகச் செல்லும் மரைன் டிரைவ் (MARINE DRIVE) எனப்படும் நெடுஞ்சாலையில் எரியும் மின்சார வெளிச்சங்கள் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். ஆசியாவின் மிகவும் பிரகாசமான கரையோர நெடுஞ்சாலை என்றும் இதில் எரியும் விளக்குத் தொடரை மகாராணியின் முத்துமாலை என்றும் அழைப்பது நெடுங்கால வழமை.

மும்பாய் என்ற பெயருடன் ஒரு தூங்குமூஞ்சித் தீவாக இருந்த இம் உலகின் மிக முக்கிய துறைமுகங்களில் ஒன்றாகவும் வளர்ச்சியடைந்துள்ளது. மிகவும் ஆழமான இயற்கையாக உருவான உலகின் மிகச்சிறந்த

## அன்பரசு

துறைமுகங்களில் ஒன்றாக பதினொரு மைல் நீளமான இத்தீவின் துறைமுகம் கணிப்பிடப்படுகின்றது. இத்துறைமுகத்தின் பரப்பளவு எழுபது சதுர மைல். இந்தியாவின் மக்கள் யாபேரையும் மும்பாய் நகரில் சந்திக்கலாம். தமிழர்கள் மாதுங்கா என்ற நகர்ப்பகுதியில் தமது வழமைபோல் ஒன்றாக வாழ்கின்றனர்.

உலகத் திரைப்பட தயாரிப்பில் அமெரிக்காவின் ஹொலிவூட் முதலிடம் பிடித்துள்ளது. இரண்டாம் இடத்தை மும்பாய் பெருநகரின் ஒரு பகுதியில் இயங்கும் பொலிவூட் (BOLLYWOOD) என்று அழைக்கப்படும். இந்திப் படத்தயாரிப்பு மையம் பிடித்துள்ளது. மசாலாப்படங்கள் என்று முன்பு ஒதுக்கிவைக்கப்பட்ட இந்திப் படங்களுக்கு இப்போது உலக மட்டத்தில் பேரும் புகழுடன் உயர்ந்த வருவாயும் கிடைக்கின்றது.

இடநெருக்கடிதான் மும்பாய் எதிர்நோக்கும் மிகப்பெரிய பிரச்சினை. மும்பாயின் புறநகர்ப்பகுதிகள் பல மைல் தொலைவில் அமைந்துள்ளன. இங்கு வாடும் மக்கள் தமது பணியாற்றும் அலுவலகங்களுக்கு பல சிரமங்களுக்கு மத்தியில் வந்துசேர்கின்றனர். இவர்களுடைய மதிய உணவு பலமைல் தொலைவிலுள்ள அவர்கள் குடும்ப வீடுகளில் இருந்து இப்பணியில ஈடுபடுவோரால் கொண்டுவரப்படுகின்றன. வீடு வீடாகச்சென்று உணவுப்பெட்டிகளைச் சேகரித்து மும்பாய் மையப்பகுதிக்குச் செல்லும் புகையிரதங்களில் முதற்கண் ஏற்றுவார்கள். பின்பு இன்னுமோர் பணியாளர்குழு இரயிலில் இருந்து அவற்றை இறக்கி எந்தப்பெட்டி யாருக்குச் சொந்தம் என்பதை நிர்ணயம் செய்தபின் உரியவருக்கு அவற்றைக் கொடுப்பார்கள்.

நாளொன்றுக்கு இரு இலட்சத்துக்கும் மேலான மதிய உணவுப் பொதிகள் இவ்வாறு விநியோகிக்கப்படுகின்றன. இத்தொழிலில் ஈடுபடுவோரின எண்ணிக்கை 5000. இவர்கள் இந்தி மொழியில் டப்பாவாலாக்கள் என்று அழைப்பார்கள். இவர்கள் சாப்பாட்டுப் பெட்டிகளை மாறிக்கொடுப்பதில்லை என்ற வியப்பான உண்மையை உலகின் முன்னணி கணனித்தயாரிப்பு நிறுவனங்கள் அவதானித்துள்ளன. இரண்டு இலட்சம் பெட்டிகளை படுவேகமாக உரியநேரத்தில் உரியவர்களிடம் எப்படிச்சேர்கிறார்கள், அதன் இரகசியம் என்ன போன்ற ஆய்வுகளை



அமெரிக்க நிறுவனங்கள் நடத்துகின்றன. அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறுவதற்கு டப்பாவாலாக்களுக்கு நேரமில்லை என்று சொல்கிறார்கள்.

காஞ்சிபுரம் போனால் காலாட்டிப் பிழைக்கலாம் என்று சொல்வதைப் போல் மும்பாய் போனால் நாலு பைசாவைக்காணலாம் என்ற நம்பிக்கை இந்தியாவில் நிலவுகிறது. 'மகாத்மாவின் நிழலில்' என்ற தலைப்பில் சுயசரிதை எழுதிய இந்தியாவின் கோடீஸ்வரர்களில் ஒருவரும், காந்தியின் விடுதலைப்போருக்கு நிதி வழங்கியவருமான ஜீ.டி.பிர்ளா தனது பாட்டனார் மும்பாய் நகருக்குக் கால்நடையாக வந்து செல்வமீட்டியதாகக் கூறுகிறார். ஆனால் எப்படிப் பணக்காரர் ஆனார் என்பதை மாத்திரம் இந்த நூலில் கூறாது தவிர்த்துள்ளார். வாஷிங்ரனின் விசாலமான அழகோ, இலண்டனின் தொன்மையோ மும்பாயிடம் இல்லாதிருந்தாலும் அது உலகின் முன்னணி நகரங்களில ஒன்று என்பதில் ஐயமில்லை. கடலோரத்தில் இருப்பதுதான் இதற்கு முக்கிய காரணம். வளர்ச்சி ஆரம்பித்து விட்டால் நிறுத்துவது கடினம் என்பது இன்னுமோர் விடயம்.

மிகுந்த ஞானம் பெரும்பாலும், மிகக் குறைந்த சொற்களுடன் இணைந்து செல்லும். - ஸோஃபாக்லிஸ்

# ஈகைத்தாயின் விடுதலைப் பற்றுறுதி

இ.கபிலன்



மாவீரர்களானவர்கள்


இராசமணி அம்மா



இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டவர்கள்

**கிளிவெட்டி** மேன்கமம்வெளி வயல் நிலங்களது வரட்சியைச் செழுமைப்படுத்தும் கங்கை.

ஊர் மக்களது உடலுழைப்பில் நெற்கதிர்கள் அறுத்துக்குவித்து இருக்கும் சூழல் விவசாயப் பொருளாதார வாழ்வைப் புலப்படுத்தும் களனிகள்.

இச்சிற்றூர் மக்களது ஆன்மீக மையமாக அபிராமி அம்மன் ஆலயம். இவைகள் அனைத்தும் இனிதான வாழ்க்கை வட்டத்தினுள் வாழும் மக்களாகவும். செல்வச் செழிப்புள்ள வளமான மக்களாகவும் வாழவைத்தன.

இம் மக்களது உரித்தான வாழ்க்கைக்குள் இராசமணி அம்மா தன் கணவர் அருளம்பலம், ஏழு புத்திரர்கள், மூன்று புத்திரிகளுடன் இன்புற்று இனிது வாழ்ந்தார்.

சொந்தமண்ணில் சொந்தவீட்டில், தன் கணவனோடு உயிரொன்றி வாழும் ஒவ்வொரு கணமும் அம்மாவின் நெஞ்சை நிறைத்தது. தன் கணவர் பிள்ளைகளோடு வாழும் வாழ்வைப்போல சிறப்பான வாழ்வு வேறில்லை என்பதே அம்மாவின் மனவுலகில் வேர்பதித்த எண்ணங்களாக இருந்தன. எப்போதும் குடும்பமாக இணைபிரியாத வாழ்வையே வாழ்ந்து வருவோம் என்கிற நம்பிக்கைகள் அம்மாவிடம் அப்போது செறிந்தே கிடந்தன.

அம்மாவினது இனிய குணவியல்புகள், உறவினர் அயலவர் என அனைவரும் அம்மாவை விருப்பப் பூர்வமாக அரவணைத்தார்கள். இவ்வற்புதமான மகிழ்வான சூழலில் தம் ஊர் பாரம்பரியத்துடன் வாழ்ந்து வந்த அம்மாவும், அவ்வூர் மக்களும் நெருக்கடிகளைத் , துன்பங்களைச் சுமந்த வண்ணம் ஆபத்துக்களையும் எதிர்கொள்ள ஆரம்பித்தார்கள்.

இச் சிற்றூர் மக்களது தமிழ்த்தேசிய எழுச்சியின் மத்தியில் சிங்களப்பேரினவாதம் தலைதூக்கத் தொடங்கியது. எதையுமே போராடித்தான் தம்மை நிலைப்படுத்திக் கொண்டார்கள் இம் மக்கள்.

மிகப்பழமை வாய்ந்த கிளிவெட்டி முத்துமாரியம்மன் ஆலய வளவினுள் இயற்கையாகவே வளர்ந்து மிகப்பெரிய விருட்சமான ஆலமரத்தினை மையப்படுத்தி பௌத்த ஆலயமாக்குவதன் மூலம் தமது பௌத்த சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்பை மேற்கொள்ள 1978இல் முனைந்தது சிங்கள இனவாதம்.

அதனை எதிர்த்துத் தமிழ்த்தேசிய உணர்வுமிக்க இளைஞர்களான கிருபராஜா, குமாரதுரை,துரைநாயகம், தங்கராசா இன்னும் இருவர் ஒன்றிணைந்து ஐந்நூறு மக்களின் எழுச்சிமிகு ஒத்துழைப்புடன் இரவோடு இரவாக அவ் மரத்தினை இல்லாமல் செய்து அதில் தம் பாரம்பரியமான பிள்ளையார் சிலையொன்றை நிலைநிறுத்தினார்கள். இன்னும் அப்பிள்ளையார் சிங்களமத ஆக்கிரமிப்பை எதிர்த்து நிமிர்வுடன் இருக்கும் குறியீடாக வேயுள்ளது.

இவ்வரலாற்று வியக்கத்தக்க புதுமையான நிகழ்வுக்குப்பின் தமிழரின் பூர்வீக பூமியான புலச்சேனையை தெகிவத்தை ஆக மாற்றிய சிங்களவர்கள் சிங்களப்படையின் துணையோடு சில சிற்றூர்களை எரித்து நாசம் செய்ததில் அம்மாவினது ஊரும் பாதிப்பிற்குள்ளாகியது.

அம்மா தன் குடும்பத்தோடு அயல் கிராமமொன்றில் சில வாரங்கள் தம் பாதுகாப்புக் கருதி வாழ்ந்த பின்னர் மீளவும் சொந்த வீட்டுக்கே சென்று வாழ்ந்து வரலானார்.

காலங்கள் ஓடின. தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம், ஆயுதப்போராட்டமாகி தமிழரின் இராணுவப்பண்பை வெளிப்படுத்தும் சூழ்நிலை மூதூர்ப்பகுதியில் 1985இல் உருவாகியது.

இக்காலகட்டத்திற்தான் சிங்கள ஊர்காவற்படையினர் ஊருக்குள் நுழைந்து இளம் பெண்பிள்ளைகளைப் பிடித்துச்சென்றனர். இவ்வேளையில் தளபதி கணேசின் போராளிகளான குண்டுக்கணேஸ், விஜித், நந்தன் ஆகியோரினது விரைந்த துணிகரச் செயற்பாட்டால் மீட்டு எடுக்கப்பட்டனர்.

அதன்போது போராளிகளின் துப்பாக்கி ரவைகளில் இரு ஊர்காவற்படையினர் மாண்டு போனதுடன், ஒரு ஊர்காவற்படை உறுப்பினர் உயிருடன் பிடிக்கப்பட்டார். மணியண்ணனின் மகன் ஊர்காவற்படையினரின் கத்திக்குத்தில் கொல்லப்பட்டுள்ளார். இவற்றுக்கு ஒரு தனி வரலாறு உண்டு.

இவ்வரலாற்று நெருக்கடி மிகுந்த காலகட்டத்திற்தான் ஊர்மக்கள் இடம்பெயர்ந்தார்கள். இம் மக்களோடு அம்மா குடும்பத்தினரும் இடம்பெயர்ந்து சம்பூர்ப் பாடசாலை அகதிமுகாம் வாழ்வினுள் வாழத்தொடங்கினார்கள். அம்மா தன் குடும்பத்தினருடன் கிடுகு வேலிகளுக்குள்ளே தனிவீட்டுக்குள்ளே இருந்து கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தவர். அவலங்களைத் தாங்கிய அகதிமுகாம் வாழ்வு அம்மாவிற்குப் புதியது.

அம்மாவின் கணவர் தம் சந்ததியினர் காலங்காலமாக ஓர் வருமானத்தைப் பெறவேண்டுமென்பதற்காக அணு அணுவாக அரும்பாடு பட்டுச்சேர்த்து உருவாக்கிய பட்டியை மகன் ஜெயக்குமாரின் உதவியுடன் சாவாறு பொன்னாங்கேணிப்பகுதியில் வைத்துப் பராமரித்து அங்கேயே நாட்களைக் கழித்து வந்தார்.

இது இப்படியிருக்க மேன்கமம் ஊருக்குள் தம் வீடுவளவுகளைப் பார்க்கச்சென்ற கனகசுந்தரம், கைலாயநாதன், பெரியதம்பி ஆகியோர் சிங்களப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட செய்தியால் அம்மாவுக்குத் தன் ஊர் செத்துப்போய்க் கிடந்த மாதிரி ஓர் உணர்வு ஏற்பட்டது.

தன் ஊர் சின்னாபின்னமாக்கப்பட்டு அழிந்து கிடக்கின்ற கவலையுடன் அம்மா ஏனைய பிள்ளைகளுடன் சம்பூரில் வாழ்ந்து வரும்போது மகன் கணேசராசா மூலம் விடுதலைப்புலிகள் உறவு ஏற்பட ஆரம்பித்தது. தாக்குதல் தளபதி கஜேந்திரன் முதன் முதலாக அம்மாவின் அரவணைப்பிற்குள் வந்த பின் மூதூர் அரசியல் பொறுப்பாளர் டொமினிக், அம்மாவிடம் வந்து செல்ல இயக்க உறவு மேம்படவே தொடங்கியது.

அம்மாவின் மகன் கணேசராசா உள்ளூர்ப் பயிற்சியைப் பெற்று இயக்கப்பணிகளுக்குச் சென்றுவரும்போதெல்லாம் அம்மாவினது ஒத்துழைப்பு இருக்கும். ஒரு சில மாதங்களின் பின் முழுநேர உறுப்பினராகி யாழ்ப்பாணம் சென்று அடிப்படைப் பயிற்சியைப் பெற்று மீள ஊர்வந்து சேர்ந்தார்.

இவ்வேளையிற்தான் அம்மாவின் மகன் ஜெயக்குமார் பொன்னாங்கேணியில் சிங்களப்படையால் சுட்டுக்கொல்லப்பட்ட நிகழ்வால் அம்மா துயரத்தின் அழுத்தங்களிலிருந்து விடுபட்டு வரும் சில மாதங்களின் பின்னர் சிங்களக்கடற்படையினரின் கடற்கலங்களால் ஏவப்பட்ட செல் தாக்குதலால் கணவர் அருளம்பலம் இறால் குழிக்கங்கை மண்ணில் சாவு அடைந்தார்.

கணவரை இழந்த அம்மாவின் கண்களில் இருந்து பொலபொலவென்று கண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. அம்மாவினது உறவினர்களும், உரித்தாளிகளும், ஊர்மக்களும் அழுது புலம்பும் மரணஓசை அவ்விடத்தில் கேட்டது. தன் கணவனது இறுதிச் சடங்கை இறால்குழி மண்ணில் செய்துவிட்டு சம்பூர் வந்து சேர்ந்தார் அம்மா.

தமிழரின் நியாயமான அர்ப்பணிப்பு நிறைந்த போராட்டத்தை முடக்கவும், தமது நலன்களுக்குச் சாதகமான ஓர் அரசியல் இராணுவ அடித்தளத்தை இடவும் இந்தியப்படை தமிழ்த்தேசத்தை ஆக்கிரமித்தது. இக் காலப் பகுதியில் போராளிகளின் அரவணைப்பில் அம்மா தன் குடும்பத்தோடு, தன் ஊர் மக்களோடு சொந்த ஊருக்கு வந்து விதவை வாழ்வை வாழ ஆரம்பித்தார். அம்மாவின் மனதில் அன்றும் கூட கணவரது நினைவுகளும், மகனது இளமையான கட்டான தோற்றமும்தான் அரங்கேறியது. எவ்வளவோ அன்புறவுகள் சுற்றியிருந்தாலும் தன்னைச் சுற்றி வெறுமையுணர்வு வலையாக விரிவதை உணர்ந்தார் அம்மா. மகன் கணேசராசாவின் வருகை அம்மாவின் அப்போதைய வெறுமைக்கு ஓரளவு ஆறுதலளித்தது.

தமிழ்த்தேசியம் இந்தியப்பொறிக்குள் சிக்குண்டு போகாமல் பாதுகாக்க விடுதலைப் புலிகள் முனைந்த போது போர் மூண்டதனையடுத்து அம்மாவின் ஊருக்குள் இந்தியப்படையினரின் நடமாட்டங்கள் அதிகரிக்க போராளிகளின் நகர்வுகள் மட்டுப்படுத்தப்பட்டன.

03ஆம் கொலனி முகாமில் இருந்து போராளிகளான பவான், றொபின், கோடீஸ், நடேஸ்அம்மான், சுருளி,கெரில்லா, ரூபன், தவம், ராஜேஸ், சுட்டா,வேலாயுதம், மீசைஇராசா, தவநேசன், சங்கிலி, புவிராஜ், மருமகன், அன்ரன், பேனாட், பட்டாவி, அகிலன், அண்ணா சிவனேசன், சுதாகர் ஆகிய போராளிகள் தாக்குதல், உணவுப்பொருட்கொள்வனவு, பிற தேவைகள் என ஊருக்குள் வந்து செல்லும் போது எல்லாம் அம்மாவினது வீடும், அம்மாவின் மகள் விஜயலட்சுமி, மகளது கணவர் சிவலையர் வீடும்தான் அனைத்து உதவிகளையும் செய்து வந்தது. இவர்களுடன் கந்தசாமி, சித்திரவேல் ஆகியோரும் உதவினார்கள்.

மருமகன் சிவலையர் தன் வண்டியில் பொருட்கள்கொண்டுவந்து கொடுப்பார். சிவலையரின் மனைவி (அம்மாவின் மகள்), வீட்டில் தங்கிச் செல்லும் போராளிகளுக்கான உணவு சமைத்துக்கொடுத்து அரவணைத்தார். மறுபுறம் அம்மாவும் உணவுப்பொருட்களைச் சிறிது சிறிதாகச் சேர்த்து சேமித்துத் தன் வீட்டில் வைத்துக்கொடுப்பதும், இரவில் வரும் போராளிகளுக்கு அயலவரான அபிராமியின் துணையோடு சமைத்துப் பசியைத் தீர்ப்பதும் வழமையாகியது.

இந்தியப்படையினரின் இராணுவ அழுத்தங்கள் அம்மா குடும்பத்தாரை மிகப்பெரும் நெருக்கடிக்குள்ளும் சிக்கலுக்குள்ளும் உள்ளாக்கியது. அம்மாவின் மருமகன் சிவலையர் கைது செய்யப்பட்டு பத்து மாதங்கள் சிறையில் இருந்து விடுதலையாகிய பின் அவர், 03ஆம் கொலனி முகாம் போராளிகளுடனே தன் நாட்களைக் கழித்தார்.

மகன் கணேசராசா விலகி வீட்டில் இருக்கும் காலத்தில் காய்ச்சல் வந்து மயக்கமடைந்து மூதூர் வைத்தியசாலையில் சேலைன் ஏற்றிய நிலையில் இருக்கும்வேளை இந்தியப் படையால் கைதுசெய்யப்பட்டார். திருமலை மத்தியசிறைச்சாலையில் ஒன்பது மாதங்கள் தடுப்பில் இருந்து விடுதலையானார்.

இந்தியப்படையினரின் கைக்கூலியான ரமணன் அணியினர் அபிராமி ஆலயத் தலைவருக்கு அடித்து முரண்பட்ட சம்பவத்தில் அம்மாவின் மகன் பேரின்பராசா ரமணன் அணியினருடன் கடுமையாக முரண்பட்டார். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பேரின்பராசா ரமணனால் கைதுசெய்யப்பட்டு கிளிநொச்சி TNA முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தார். ஒரு சில மாதங்களின் பின்னர் பேரின்பராசா ஒரு A.K, ஒரு பிஸ்டல் ஆகிய ஆயுதங்களைக் களவாக எடுத்துக்கொண்டு இயக்கத்திடம் வந்து சேர்ந்தார். அவ் நாளில் இருந்து சத்தியன் என்கிற பெயருடன் பவான் தாக்குதல் அணியில் இணைந்து செயலாற்ற ஆரம்பித்தார்.

இரவில் ஊருக்குள் வரும் இந்தியப் படையினர் அம்மாவின் வீட்டை மையப்படுத்தி பதுங்கியிருந்த நாட்கள் பல. அம்மாவை முகாமுக்கு அழைத்து விசாரணை செய்து அச்சுறுத்தியபோதும் அம்மாவினது தளராத மனவுறுதியையும் அதனால் வந்த துணிவும் அப்போது போராளிகளுக்குப் பக்கத் துணையாக இருந்தது.

போராளிகள் எந்த நேரமும் சென்றால் உடன் தேனீர் கொடுத்துவிட்டு சமைக்க ஆரம்பித்துவிடுவார்; அம்மா அயலவரான அபிராமியுடன் தன் கடைக்குட்டிகளான சூட்டி, சின்னச் சத்தியன் ஆகிய மூவரையும் வெளிக் காவலுக்கு விட்டுவிடுவார்.

ஒரு நாள் றொபின், பிரதீப், வினோத் ஆகியோர் ஊருக்குள் வரும்போது றொபின் காயத்திற்குள்ளாகியபடி அம்மாவிடம் வந்து சேர்ந்தார். அம்மா தன் பழைய சீலையைக் கிழித்து கோப்பித்தூள் வைத்துக் காயத்துக்கு கட்டிவிட்டார்.

அம்மா காணும் போராளிகளிடம் தன் கையால் போராளிகளது கன்னத்தில் வாஞ்சையோடு தடவியபடியே முதல்கேட்பது "சாப்பிட்டு விட்டீர்களா?"

இந்தியப்படையினரின் திடீர் திடீரென வரும் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தும் தாக்குதல்களைப் போராளிகளான பவான். நடேஸ்அம்மான், பிரதீப், கெரில்லா, மருமகன், வேலாயுதம், அன்ரன், சிவனேசன்,றொபின், சத்தியன் ஆகியோர் மேற்கொண்டார்கள். அதாவது 58 சந்தியில் பகல்வேளையில் உலாவந்த இந்தியப்படையினர் மீதும் மேன்கமம் கொலனிப் பாலத்திற்கு மிக அண்மையிலிருந்த இந்தியப் படையினர் மீதும் தாக்குதல்களைத்தொடுத்து இந்தியப்படையினரைப் பின்வாங்கி ஓடச்செய்தார்கள். இதனால் பிரதான வீதிகளில் மட்டும் இந்தியப் படை உலாவரும் சூழலாக மாறியது. இக்காலத்தினுள்தான் சுட்டா வீரச்சாவு அடைந்தார்.

நாட்கள் நகர்ந்தன. ஒரு நாள் பகல் அம்மாவிடம் போராளிகள் வந்தபோது அம்மா தன் கையால் பலாப்பழம் வெட்டி அதிலுள்ள சுளைகளை எடுத்துக்கொடுக்க போராளிகள் சுவைபடச் சாப்பிட்டுவிட்டுத் தாக்குதலுக்குச் சென்றார்கள். அப்போது எதிர்பாராதநிலையில் சண்டைக்களம் மாறியிருந்ததனால் சக்கர வெட்டையில் நடேஸ்அம்மானும், மீசைராசாவும் வீரச்சாவு அடைந்தார்கள். ஏனைய போராளிகள் ஒருவரையொருவர் தோளிலே தொட்டு வார்த்தைகளின்றி ஆறுதல்படுத்தினார்கள்.

(19ம் பக்கம் பார்க்க...)

# தொடர்கதை

## பகுதி - 03

## அத்தியாயம் - 07

## தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு



கிளிநொச்சி நகரமும் பலத்த சேதங்களுக்குள்ளாகியிருந்தது. எல்லாச் சுவர்களிலும் துப்பாக்கிச் சன்னங்களின் துளைகள். கருமை மண்டிக்கிடந்த கோலத்துடன் பல கடைகள் காணப்பட்டன.

வேலாயுதத்தின் கடைத் தொகுதி அவ்வளவு சேதமுற வில்லை. சுவரில் சன்னங்களின் சிறு துளைகள் இருந்ததே தவிர கட்டடம் அப்படியே இருந்தது.

''போவம் தம்பி வா'' அவரால் நின்று பார்க்க முடிய வில்லை.

குமரபுரத்தில் தொடர்ந்து எறிகணைகள் வந்து விழுந்து வெடிப்பதால் ஊரில் இருக்க பயந்தார்கள். ஊரில் வேறு ஆட்களும் வந்து இருக்கவில்லை. வீடு முற்று முழுதாய் எரிந்த நிலையில் விநாசி தலையில் கை வைத்து அழுதபோது தேற்ற வகை தெரியாது நின்றார். ஊருக்குள் பலரது வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டுவிட்டன.

"இந்த ஆனையிறவுக்குப் பக்கத்தில இருக்கிறதால எப்பவும் எங்களுக்கு அழிவுதான்."

பொருமிக்கொண்டிருந்த விநாசியை கவலையோடு பார்த்தார்.

"கொஞ்ச நாளைக்கு குஞ்சுப்பரந்தனிலேயே இருப்பம் எண்டு பார்க்கிறன்."

"அதுதான் நல்லது விநாசி. நாங்களும் விக்கியோட தான் போய் இருக்கப் போறம். பிறகு பார்த்துச் செய்வம்."

எரிந்து அழிந்து போயிருந்த வீடுகளுக்குள் மிஞ்சிய பொருட்களை மூட்டை கட்டிக்கொண்டு சன மெல்லாம் கொஞ்சம் தூரத்துக்கு இருக்க என்று போனார்கள். அவர்களும் விக்கினேஸ்வரன் வீட்டுக்குப் போனார்கள். பகல் நேரங்களில் முருகானந்தனுடன் வந்து வீட்டைப் பார்த்துக்கொண்டு போவார். வயலைப்பார்க்க மனம் கலங்கியது. இளம் பயிரை தொடர்ந்தும் காப்பாற்றி எடுக்க வேண்டுமே என்ற கலக்கம்.

பசளை போட்டார். ஆட்களைப்பிடித்து கள்ள எடுப்பித்தார். குளத்து தண்ணியை கேட்டு விடுவதற்கும் நெருக்குதல் தோன்றியது. எனக்கு உனக்கு என்று சண்டை எழுந்தது.

இரவெல்லாம் தண்ணி பாயும் போது காவலுக்கு மரியக்கண்டுவும் ராமசாமியும் நிற்க வேண்டிய தாயிற்று. காரைக்கொண்டு வராததால் வயலுக்கு சைக்கிளிலேயே போய் வந்தார். அவரை வீட்டில் நிற்கச் சொல்லி விட்டு முருகானந்தனும் விக்கினேஸ்வரனும் இரவு நேரங்களில் மாறி மாறி வயலில் போய் நின்றார்கள்.

காலை நேரச் செய்தி ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

''ஐயா செய்தி கேட்டீங்களே. ஆமியின்ர கட்டுப்பாட்டுக்குள்ள இல்லாத தமிழர் பிரதேசங்களுக்கு பொருளாதாரத் தடையாம். அரசாங்கம் அறிவிச்சிருக்கு. இனி பசளை மருந்து வகை ஒண்டும் வராதாம். டீசல், பெற்றோலும் வராதாம்." முருகானந்தன் செய்தியைக் கேட்டு விட்டுச் சொன்னான்.

''இதென்னடா புதுப் பிரச்சனை. டீசல் இல்லாட்டி வயல் என்னெண்டு உழுறது. பசளை மருந்து இல்லாட்டி நெல்லு என்னெண்டு விளையும். அது சரி பாதை"யும் அடைபட்டுப் போச்சு. லொறியள் நெல்லு எடுக்க வராது. நெல்லை எங்க போய் ஆருக்கு விற்கிறது."

அவரின் தலைக்குள் விண் விண் என்று வலி ஏறியது.

வர வர நிலமை மோசமாகிக்கொண்டே வந்தது.

"நினைச்ச நேரமெல்லாம் வந்து குண்டுகளைக் கொட்டிப் போட்டுப் போறாங்கள். ரெண்டை சுட்டு விழுத்தினால் தான் உவங்களுக்கு உறைக்கும்."

எரிச்சலுடன் சுந்தரமூர்த்தி வாத்தியார் சொன்னார்.

''கோட்டைக்குள்ளயிருக்கிற ஆமியளை வெளிக்கிட விடாமல் மறிச்சு வைச்சிருக்கினமல்லே. அந்த ஆத்திரத்தில கொண்டு வந்து எங்கட தலையில கொட்டுறாங்கள்.'' ஏரம்பு ஏற்ற இறக்கத்தோடு சொன்னான்.

''அந்தப் பொம்பிளைப் பிள்ளையள் இப்பவும் ஊர் எல்லைக் கட்டிடத்திலதான் இருக்குதுகள். மலர்விழியும், அமுதினியும் சைக்கிளில பசளைப்பை முட்ட ஏதோ சாமான்கள் கட்டிக்கொண்டு போகுதுகள். அவங்களும் ஷெல் அடிச்சுக்கொண்டிருக்கிறாங்கள்."

அடிக்கடி பரந்தன் சந்தியில் குண்டுகள் போடுவதால் சந்தி எப்போதும் வெறிச்சிட்டுக் கிடந்தது. ஊருக்குள்ளும் பகலில் மட்டுமே நடமாட்டம் இருந்தது. இப்போது ஓவசியர் சந்தியில் சந்தை கூடியது. தேனீர்க் கடை, சைக்கிள் ஒட்டுக்கடை, பலசரக்குக்கடை எல்லாம் ஒவ்வொன்றாய் அங்கு முளைத்தன. அந்த பாதை வழியாக பூநகரி சங்குப்பிட்டி கேரதீவு போய் யாழ்ப்பாணத்துக்கான பிரயாணம் நடந்து கொண்டிருந்தது. அதனால் ஓவசியர் சந்தி ஆள் நடமாட்டமுள்ள இடமாக மாறிவிட்டது.

அந்தத் தடவை நெல்வெட்டி அடிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. சங்குப்பிட்டி கேரதீவு பாதை வழியாக குறைந்த அளவு நெல்லு மூட்டைகளே யாழ்ப்பாணத்துக்குப் போகக்கூடியதாக இருந்தது. இங்கே விலை சரிந்து விட்டது.

யூரியா இல்லாமல் அமோனியாவை போட்டதில் விளைச்சலும் குறைவு. நோய் வந்தபோது அடிக்க மருந்துகள் இல்லாமற் போய்விட்டது. முறை தலையாய் வயல் செய்து பழகியவருக்கு இப்படி அரை குறையாய் செய்ய மனம் ஒப்பவில்லை. அதுவே பெரிய பாறாங்கல்லாக மனதுக்குள் கனத்துக் கொண்டிருந்தது.

இப்போது ஊருக்கு கொஞ்சம் கொஞ்சமாய் ஆட்கள் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். தங்கள் வீட்டைத் திருத்திக் கட்டிக்கொண்டு அவர்களும் இருக்க வந்து விட்டார்கள். பாடசாலைக்கும் பிள்ளைகள் கொஞ்சம் கொஞ்சமாய் வரத்தொடங்கினார்கள். பரந்தன் சந்தியில் இடிபாடுகளுக்கிடையே ஒவ்வொன்றாய் கடைகள் தோன்றின.

அடுத்த தடவை குத்தகைக் காணிகளை விட்டு விட்டு சொந்தக் காணியை மட்டும் செய்தார். கொத்துக் கொத்தாக நெல்சுமந்த கதிர்கள் இப்போது போதிய உரமின்றி ஊசி ஊசியாக நின்றதைப் பார்க்க வயிறு எரிந்தது.

டீசல் இல்லாததால் மரக்கறி எண்ணெயுடன், மண்ணெண்ணயுடன் கலந்து விட்டு உழவியந்திரங்கள் இயங்கின. பெற்றோல் இல்லாததால் காரை கொண்டுவர வில்லை. இனிமேல் கார் ஓட முடியும் என்றும் தோன்றவில்லை.

அன்று பொழுது சாயும் நேரம் ஆசாத்தும், இளங்கோவும் வந்து கிராமத்தில் இருந்த எல்லோருடைய உழவியந்திரங்களையும் கேட்டு எடுத்துக்கொண்டு போனார்கள். பிரதான வீதியிலும் போராளிகளின் வாகனங்கள் ஓடித்திரிந்தன. நடுச்சாமம் ஒரு மணிக்கு வந்து கதவு தட்டி வசந்தனும் கவிதனும் மண்வெட்டிகளை வாங்கிக் கொண்டு போனார்கள். ஏதோ நடக்கப்போகிறது என்று உள்ளுணர்வு கூறியது.

இரண்டு வாரங்களின் பின் ஒரு அதிகாலையில் ஆனையிறவுப் பக்கமாய் கேட்ட வெடிச்சத்தங்களில் ஊரே அதிர்ந்தது. விடிகின்ற நேரம் எல்லோரும் ஊரை விட்டு வெளியேறினார்கள். அவர்கள் விக்கினேஸ்வரன் வீட்டுக்குப் போனார்கள்.

"ஆனையிறவு அடிபடுகுது"

சந்திக்கு சந்தி சனங்கள் கூடி நின்றார்கள். பதை பதைப்போடு வடக்குத் திசையை பார்த்தார்கள். இடைவிடாத சத்தங்கள் காதுகளை அதிர வைத்து வீட்டின் யன்னல்கள் கதவுகள் எல்லாம் அதிர்ந்து ஆடின.

"இவ்வளவு நாளும் உந்த ஆனையிறவு ஆமியால மனிசர் பட்ட பாடு. இதோட உவங்களை அடிச்சுக் கலைச்சுப்போட வேணும்."

"ஆன சாப்பாடும் இல்லாமல் பிள்ளையள் நிண்டு சண்டை பிடிக்குதுகள். ஓவசியர் சந்தியில கொட்டிலில வைச்சு சமைச்சுக் குடுக்க ஆயத்தம் நடக்குது. மாரியிட்டமானோ மரையோ இறைச்சிக்கு சொல்லிக்கிடக்கு. தொடர்ந்து கொஞ்ச நாளைக்கு சாப்பாடு அனுப்ப வேணும். எல்லாரும் விரும்பின மாதிரி ஒத்துழைக்கினம், காசோ உழைப்போ..."

தியாகராசா விதானை சொன்னபோது "வடிவாய் சமைச்சுக் குடுங்கோ" என்று காசு எடுத்துக் கொடுத்தார்.

ஓவசியர் சந்திக்கு அவர் போன போது சனம் திருவிழா போல நின்றது. சமையல் நடந்து கொண்டிருந்தது. சாப்பாடு கட்டுகின்ற நேரம் பெரும் இரைச்சலோடு பொம்பர் தலைக்கு மேல் சுற்றியது. குத்தி தாழ்ந்து அடுத்தடுத்து நாலு குண்டுகளை போட்டுவிட்டுப்போனது. பத்து நிமிடத்துக்கு அங்கே பதட்டம் நிலவியது. விழுந்து எழும்பிய சனங்கள் பிறகு இயல்பாக தங்கள் வேலையை தொடர்ந்தார்கள். தொடர்ந்து சத்தங்கள் அதிர்ந்து கொண்டேயிருந்தன.

"கிளிநொச்சி சனம் எல்லாம் மிக்சா, பருத்துறைவடை, முட்டைமா எண்டு செய்து பெட்டி பெட்டியாய் குடுத்து விடுகுதுகள்."

மனுவேற்பிள்ளை ஓவசியர் நேற்று மத்தியானத்துக்கு ஐநூறு சாப்பாடு கட்டி குடுத்தனுப்பினவராம். சனம் எல்லாம் நேர்த்தி வைச்சபடி. உந்த ஆனையிறவுக்கு ஒரு முடிவு வந்திட வேணும்."

கிளிநொச்சி பிரதேசமே ஒருவித எதிர்பார்ப்போடு காத்திருந்தது. வருகின்ற செய்திகள் கவலையையே தந்தது..

திசையெல்லாம் அதிர்ந்த சத்தங்கள் நின்று விட்டது. எல்லோர் முகங்களிலும் கவலை சூழ்ந்தது.

சண்டை ஓய்ந்த பிறகு அதே அச்சுறுத்தல்களுக்கு நடுவே கிராமத்துக்கு அனைவரும் திரும்பினார்கள். இளங்கோ கையில் பெரிய கட்டுடன் வந்தான். "இண்டைக்கு பின்னேரம் எல்லாற்ற நக்ரும் வந்திடும் ஐயா, கடலாலகொண்டு வந்து இறக்கிப்போட்டாங்கள். அதால கஷ்டமாய்ப்போச்சு, வசந்தன் அண்ணைக்கும் காலில சின்னக்காயம். மற்றது மலர்விழி அக்கா காயப்பட்டு இருந்தவ, வீரமரணம். நேற்றுத்தான் புதைகுழியில விதைச்சது."

ஒரு நிமிடம் மௌனம் நிலவியது. நெஞ்சை கைகளால் நீவிவிட்டுக் கொண்டார். சுறுசுறுப்பும் சிரிப்புமாக திரியும் மலர்விழி...

இதென்ன துன்பம்... இது போல் எத்தனை எத்தனை பேர்...

''இந்த ஆனையிறவுக்கு ஒரு நாளைக்கு இருக்குது அடி"முகம் இறுக சொல்லிவிட்டுப்போனான் இளங்கோ.

வேகமான நகர்வோடு நாட்கள் கடந்து போய்க்கொண்டிருந்தன. அடுத்தடுத்து இரண்டு போகமும் வயல் செய்து எடுத்தாயிற்று. லாபம் என்று எதுவும் இல்லாமலே.

கை நிறைய காசு வந்த காலம் போய்விட்டது.

பொருளாதாரத்தடை கடுமையாக அமுல் செய்யப்பட்டதால் இனிமேல் காரை வைத்திருப்பதில் எந்த பயனும் இல்லை என்பதை உணர்ந்தார். விற்றுவிடலாம் என்ற தீர்மானம் எழுந்ததுமே நெஞ்சுக்குள் மூச்சு சிக்குப்பட்டு நிற்பது போன்ற உணர்வு.

பூநகரியில் நின்ற காரை நைலோன் கயிறு மூலம் உழவியந்திரத்தில் கட்டி இழுத்துக்கொண்டு வந்து சேர்த்தான் முருகானந்தன்.

"ஆரோ வாடகைக்கு ஓடுறவன் காரைக்கேக்கிறானாம். தியாகராசா விதானையார் சொன்னவர்."

"சரி. கூட்டிக்கொண்டு வந்து குடு"

"இருவத்தையாயிரம் தான் கேட்கிறானாம்."

மனம் துணுக்குற்றது. தன்னை நிதானப்படுத்திக்கொண்டார்.

" ஒரு லட்சத்துக்கு மேல பெறுமதியுள்ள கார்தான். ஆனா இப்ப உள்ள நிலையில.... சரி கேட்டதுக்குக் குடுத்து விடு. என்னென்டு ஓடுவானாம்."

"இப்ப எல்லா வாகனமும் மண்ணெண்ணயில தானே ஓடுது"

"சரி குடுத்துவிடு"

அன்று சனிக்கிழமை. இருபத்தையாயிரம் கொண்டு வந்து அவரிடம் நீட்டியபோது 'வாங்கு தம்பி' என்று முருகானந்தனிடம் சொன்னார். நெஞ்சுக்குள் ஏதோ் புரண்டுகொண்டே இருந்தது.

அவன் இன்னொருவனுடன் வந்து காரை கட்டி இழுத்துக்கொண்டு போனான். மளுக்கென்று கண்களில் நீர் திரையிட்டது.

காரும் அவருக்கு குழந்தை மாதிரித்தான். எத்தனை வருடங்களாக ஓடுகிறார். இன்றைக்கு அதுவும் அவரை விட்டு போய்விட்டது.

கண்களை மூடிக்கொண்டு சாய்வு நாற்காலியில் படுத்துவிட்டார்.

ஐந்தாம் வகுப்பு படிக்கும் சாந்தனுக்கு வாணிகணக்கு சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்த மாலை நேரம், மோட்டார் சைக்கிளின் பலமான இரைச்சல் கேட்க வாசலைப்பார்த்தார். பாலச்சந்திரன் இறங்கி வந்தான்.

"வா தம்பி. இங்கால இரு"

''கார் வித்திட்டீங்களாம். மரியகண்டு சொன்னது"

"ம்" தலையசைத்தார்.

''நாங்களும் விற்பம் எண்டு பார்க்கிறம், காரையும் றக்ரரையும் விற்கிறதுக்கு சொல்லியிருக்கு. கொழும்பு பக்கம் போவம் எண்டு யோசிக்கிறன். இனி இங்க இருக்க ஏலாது." "ஏன் மோனை" அவர் திகைப்புடன் கேட்டார்.

"தியேட்டரையும் இடிச்சுப்போட்டாங்கள், கடையும் இப்ப நடத்த ஏலாது.தடை எண்டு ஒரு சாமனையும் வரவிடுறாங்களில்லை. வயலும் விதைச்சுக் கொள்ள ஏலாமல் கிடக்கு. கொழும்பில போய் ஏதும் பிஸினஸ் செய்வம் எண்டு யோசிக்கிறன். பண்டாகமத்தை தியாகராசா விதானைக்கு குத்தகைக்கு குடுத்திருக்கு மற்றக்காணியளையும் பார்த்துக்கொடுக்கவேணும்."

"அப்ப மரியக்கண்டு..."

"மரியக்கண்டுவும் குழம்பிப்போய் இருக்குது. இருக்கிற நாள்வரை பண்டா கமத்திலயே இரு எண்டு சொல்லியிருக்கு "

"அம்மா என்னவாம்"

"அம்மாவையும் கொழும்புக்கு கூட்டிக்கொண்டு போறம். தங்கச்சியவையும் தங்களோட வந்து இருக்கச்சொல்லி அம்மாவைக் கேட்டபடி. போனால் மாறிமாறி இருக்கலாம்." "உன்ர விருப்பம் போல செய் மோனை..."

பாலச்சந்திரன் போனபிறகு வெகு நேரமாய் நெற்றியில் கையை மடித்துக்கொண்டு படுத்திருந்தார்.

லட்சம் லட்சமாய் கொட்டித்தந்த இந்த மண்ணுக்கு என்ன நடந்து விட்டது... இல்லை இந்த மண்ணும் வளமும் அப்படியேதான் இருக்கிறது. சூழல்தான் மாறிவிட்டது.

சொந்த மண்ணிலேயே நிம்மதியாய் வாழமுடியாத சூழல் ஆழமான வலி நெஞ்சுக்குள் புரண்டு எழுந்தது.

(தொடரும்)

ஓடுவதில் பயனில்லை; நேரத்தில் புறப்படுவதே முக்கியம். - ஜீன் தெ லா ஃபோன்த்தேன்




# கனத்த நாட்களின் நிகழ்வுகள்...

**ச. இராகவன்**

அவன் கனத்த நாட்களை இப்படித்தான் உணர்ந்தான். அசாதாரணங்களை நிரப்பிய நாட்கள் அப்போது இறுக்கம் ததும்பி வழியும். - ததும்பி வழியும் இறுக்கத்தை தளர்த்தவோ சூரியன் கிடைப்பதில்லை. பெருமழை பொழியும். இடியுடன் கூடிய பெருமழை. ஆயினும் அதுமாரி காலமல்ல. இரவுகள் வழமையாய் இருளினுள் புதையுண்டிருக்கும். இருள் அடர்த்தியாகிக்கொண்டேயிருக்கும். ஆயினும் வழமையில் அவை நிலவெறிக்கும் இரவுகளாய் இருக்கும். சூரியன் அனல் மூச்செறியும் நாட்களில் மக்களின் தோல் கருகி சுவாசத்தில் கலந்து நாறும். ஆயினும் அது கோடைகாலமல்ல.

அவன் அதிகாலையில் எழுந்துவிடுவான். யோகாசனம் செய்தாக வேண்டும். இல்லாவிடில் அன்றைய நாள் அழுது வடித்துக்கொண்டு சோம்பிக்கிடப்பதாய் தோன்றும். அவர்கள் ஊரை ஆக்கிரமித்துக்கொண்டதன் பின்பான நாட்கள் அழுது வடித்துக்கொண்டு சோம்பிக்கிடக்கின்றன.

ஒரு நாள் அவன் அதிகாலையில் எழுந்து யோகாசனம் செய்துகொண்டிருந்தான். அவர்கள் வருகை தந்தனர். அவனைச்சுற்றி துப்பாக்கி முனைகளை குவித்தபடி நின்றிருந்தனர்.

''என்ன செய்துகொண்டிருக்கிறாய்?'' கறுப்பாய் நெடுவலாய் இருந்த ஒருவன் கேட்டான்.

''யோகாசனம் செய்துகொண்டிக்கிறேன்.'' அவன் இயல்பாய் எதுவிதபடபடப்புமின்றி பதிலளித்தான்.

யோகாசனம் என்றால்?''

"யோகாசனம் என்பது தேகப்பயிற்சி"

"எதற்காகத் தேகப்பயிற்சி செய்கிறாய்"

"சுகமான வாழ்க்கைக்காக"

" உனது பதில்கள் எங்களின் சந்தேகங்களை மிகவும் வலுப்படுத்துவதாய் அமைகின்றன"

"........." அவன் மௌனமாய் நின்றான்.

"நீ குறிப்பிடுகின்ற யோகாசனம் ஒரு போராளி பயிற்சி எடுப்பதைப் போல் எங்களுக் குத் தோன்றுகிறது. ஒன்றில் நீ யொருபோராளியாய் இருக்கவேண்டும். அல்லது போராளிகளுடன் நெருக்கமான தொட ர்பு வைத்திருக்கவேண்டும்" கறுப்பாய் நெடுவலாய் இருந்த அந்த ஒருவன் தான் தொடர்ந்து உரையாடியவண்ணமிருந்தான். துப்பாக்கி முனைகள் அவனை தொடர்ந்து நோக்கியபடியேயிருந்தன. அவன் சாதாரணமாகத்தானிருந்தான். அவர்களோ அவன் பயந்து நடுங்கவேண்டுமென எதிர்பார்த்திருக்கக்கூடும். இதனால் அவர்கள் மிகவும் சினமூட்டப்பட்டிருந்தனர்.

"நாங்கள் நினைத்தால் உன்னை சுட்டுக்கொல்லமுடியும். நீ உண்மையைக் கூறுவதன் மூலம் எங்கள் சந்தேகங்களை வலுவிழக்கச் செய்யக்கடமைப்பட்டுள்ளாய். இதனால் சரியான பதிலைக்கூறும்படி கேட்டுக்கொள்கிறோம்." அவன் தந்தை முன் வந்து கதைத்தார். " இவர் எனது மகன். நல்லொழுக்கமிக்கவர். தியானம் ஒரு மனநோய் நிவாரணி என்பதாலும் யோகாசனம் தேகஆரோக்கித்தைப்பேணும் என்பதாலும் எனது மகன் அதில் ஆர்வங்காட்டி வருகிறார். தவிரவும் இவர் ஒரு பல்கலைக்கழக மாணவர்."

"எங்களைப் பொறுத்தமட்டில் பல்கலைக்கழக மாணவர்கள் போராளிகளாகவோ, போராளிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பவர்களாகவோ உள்ளனர். உமது மகன் பல்கலைக்கழக மாணவர் எனில் அவர் யார்? போராளியா அல்லது போராளியுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பவரா?" அவன் சினத்துடன் கேட்டான். தந்தை மௌனமாய் நின்றார்.

"நீங்கள் எங்களது சந்தேகங்களை வலுவிழக்கச்செய்யும் எந்தவொரு ஆதாரத்தையும் சமர்ப்பிக்கவில்லை. ஆதலால் உமது மகனை விசாரணைக்காக எமது தலைமைக் காரியாலயத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டியுள்ளது. அங்கே எங்களால் சிற்சில உரைகல் சோதனைகள் நிகழ்த்தப்படும். அதன் பின்னர் எங்கள் சந்தேகங்கள் வலுவிழந்தால் உமது மகனைப் பத்திரமாகத் திருப்பியனுப்ப நாங்கள் கடமைப்பாடுடையவர்கள்.'' தொடர்ந்து சொல்லி முடித்தவன் அவனைத் தங்களுடன் புறப்படத்தயார்ப்படுத்தினான். அவ னுக்கோ அவர்களுடன் புறப்பட்டுச் செல்வதைத்தவிர வேறு மார்க்கம் இருந்திருக்கவில்லை. தந்தையும் பின்னால் இழுபட்டுவந்தார். அவ ருக்கும் அதைத்தவிர வேறு மார்க்கம் இருந்திருக்கவில்லை.

தலைமைக் காரியாலயத்திலும் அவன் விசாரணை செய்யப்பட்டான். ஓர் உயர்ந்த பருத்த தேகமுள்ள பெரிய காதுகளையுடைய, மீசையில்லாத கரகரத்த குரலுக்குரிய அதிகாரியால் அவன் விசாரணை செய்யப்பட்டான்.

"பிரபாகரனைத் தெரியுமா?''

"நேரில் பார்த்ததில்லை. பத்திரிகைகள் வாயிலாகத் தெரிந்திருக்கிறேன்"

"பொய் சொல்லவேண் டாம்?''

"உண்மையாகத்தான் சொல்கிறேன்"

"பொட்டு அம்மானைத் தெரியுமா?''

"அவரையும் நேரில் பார்த்ததில்லை. பத்திரிகைகள் வாயிலாகத் தெரிந்திருக்கிறேன்."

"திரும்பத் திரும்ப பொய் சொல் கிறாய்!

"இல்லை. உண்மையைத் தான் சொல்கிறேன்."

"உன்னுடைய பல்கலைக் கழக துணைவேந்தரின் பெயரென்ன?

''பொன். பாலசுந்தரம் பிள்ளை."

"அவருக்கு திருமணமாகிவிட்டதா"

"ஆமாம் "

"மனைவியின் பெயரென்ன?''

"தெரியாது"

"துணைவேந்தருக்கு எத்தனை பிள்ளைகள்?''

"தெரியாது"

ஏன் இவற்றை நீ தெரிந்து வைத்திருக்கவில்லை?''

''எனக்கு இவை அவசியமில்லாதவை என்பதால் தெரிந்து வைத்திருக்கவில்லை."

"நீ ஒரு பல்கலைக்கழக மாணவனாயிருப்பதால் துணைவேந்தரின் குடும்பப் பின்னணியினை அறிந்து வைத்திருத்தல் மிகவும் அவசியமானது."

"......................"

"பல்கலைக்கழக மாணவர்கள் புலிகளுடன் நெருங்கிய தொடர்பினை பேணி வருகின்றனர் என நாங்கள் அறிந்துள்ளோம். உனக்கும் புலிகளுடன் நெருங்கிய தொடர்புண்டல்லவா?''

"நிச்சயமாக இல்லை"

"எதையும் மறைக்காதே. உண்மையைச் சொல்லி விடுதலானது பல விபரிதங்களை நிகழாமல் தடுக்க வல்லது."

"நான் எதையும் மறைக்கவேண்டிய தேவை இல்லை"

"அப்படியானால் எங்களது ஆட்கள் உன்னைக்கண்டபோது நீ என்ன செய்துகொண்டிருந்தாய்?''

நான் யோகாசனம் செய்துகொண்டிருந்தேன்"

"இல்லை. நீ தொடர்ந்து பொய் சொல்லி வருகிறாய். உண்மையில் நெருக்கடியான நிலமைகளில் அதாவது இராணும் உன்னைச்சுற்றி வளைத்திருக்கும் போது எப்படித் தப்பித்துக்கொள்வது என்பதற்கான பயிற்சியைத்தான் நீ செய்து கொண்டிருந்தாய் என்றே நாங்கள் கருதுகிறோம்."

"நிச்சயமாக இல்லை."

"எங்களுடைய வினாக்களுக்கு நீயளிக்கும் விடைகளானவை மேன்மேலும் சந்தேகங்களை வலுப்படுத்துகின்றன. இப்போது உன்னை வீடு செல்ல அனுமதிக்கிறேன். ஆனால் ஒவ்வொரு நாளும் நீ இங்கே வந்து காலையும் மாலையும் கையொப்பமிடல் வேண்டும்" தொடர்ந்து வந்த நாட்களில் அவன் கையொப்பமிடுவதற்காகவே நித்திரை விட்டெழுந்தான். அவன் நித்திரை விட்டெழும் போதெல்லாம் மழை தூறிக்கொண்டிருந்தது. ஆனால் அது கோடைகாலமாயிருந்தது. அவன் மீது விழுந்த மழைத்துமிகள் நீர்கோர்த்து தும்மிக்கொண்டிருக்கச்செய்தது. அவன் தொடர்ந்து பல நாட்களாய்த் தும்மிக்கொண்டிருந்தான்.

நீ ஒரு ஒழுக்கமான மாணவனாக இருத்தல் வேண்டுமென நாங்கள் எதிர்பார்க்கிறோம். எங்கள் எதிர்பார்ப்பினை பூர்த்தியாக்கவேண்டிய கடப்பாடுடையவனாய் நீ இருக்கின்றாய். உனது நண்பர்கள் உன்னைத் தவறாக வழி நடத்தக்கூடியவர்கள் என்பதால் நீ கவனமாயிருக்கவேண்டும்" என்று அவர்கள் அவனை எச்சரித்தவண்ணமிருந்தனர். அவனோ தொடர்ந்து தும்மிக்கொண்டிருந்தான். அவனுக்கு பல்கலைக்கழகத்தில் நண்பர்கள் எவரும் குறிப்பிட்டுச்சொல்லும் படியாக இருந்திருக்கவில்லை.

• • •

திருவெம்பாவை நாட்களில் சங்கு, சல்லாரி, சேமக்கலம் இசைத்துப் போவோர் அவன் துயில் கலைத்துச்செல்வர். குளிர் மிகுதியாய் இருக்கும். அதன் பின்னர் விழிப்புடனே படுத்திருப்பான். கோவில் மணிகள் தொடர்ந்தொலிக்கும். யாரோ திருப் பள்ளியெழுச்சி பாடிக்கொண்டிருப் பதும் இடைக்கிடை கேட்கும். கடவுளை நினைத்தால் பாவமாய் இருக்கும்.

ஆனால் சங்கு, சல்லாரி, சேமக்கலம் இசைப்போரின் பணியை நாய்கள் ஏற்றுக்கொண்ட பின்பான காலங்களில் வைகறையில் அனைவர்க்கும் துயில் கலைந்துபோகும். அவன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்திருப்பான். அல்லது அம்மா வந்து எழுப்புவாள். "தம்பி" நாயள் குரைக்குது. அவங்கள் வாறாங்கள் போல ஆயத்தமாய் இரு"

அவனும் திருவம்பாவைநாட்களில் வைகறையில் துயிலெழுந்து நீராடி சேகரன், மணி, அகிலன், சீலன் என்ற குழுவில் இணைந்துகொண்டு சங்கு, சல்லாரி,சேமக்கலம் இசைத்திருக்கிறான். பிள்ளையார் கோவிலில் இருந்து புறப்பட்டு சாவகச்சேரி நோக்கிச் செல்லும் வீதியினூடாக நடந்து யார்க்கருப்பிள்ளையார் கோவிலையடைந்து ஒரு சுற்றுச்சுற்றி தெடுத்தனைத்தெருக்களில் வலம் வந்து எக்கட்டியான் தெருவழியே செங்குந்தர் வீதியில் மிதந்து திரும்பவும் பிள்ளையார் கோவிலை வந்தடைகையில் அவனுக்கோ மனம் நிறைந்திருக்கும். காலப்போக்கில் விடியும் வரை படுத்துறங்கி எழுந்திருப்பதே அவனுக்கு மனநிறைவைத் தந்திருந்தது. அது காரணங் கூறமுடியா மனநிறைவாய் இருந்தது. அவர்களின் வருகைக்கு பின்பாக அவனது •மனநிறைவு கேள்விக்குறியாகிப்போனது. திருவெம்பாவை என்பது பத்து நாட்கள் என்ற வரையறைக்குட்படாது நீண்டு கொண்டிருந்தது. அவன் இரவுகளில் அறிதுயில் கொள்ளவேண்டியவனாயிருந்தது. கசகசவென்று வியர்த்து வழிந்தது. உடலெங்கும் வியர்க்குரு படர ஆரம்பித்தது. ஊசியால் குத்துவது போல் அடிக்கடி உணர்ந்தான். சொறிந்துகொண்டிருக்கவேண்டியுமிருந்தது. ஆயினும் தொடர்ந்து மழைபொழியும் மாரிகாலமாயிருந்தது.

நாய்கள் எங்கும் மோசமாய் குரைத்துக்கொண்டிருக்கும். அவர்கள் குரல்கள் முதலில் அங்கங்கே கேட்கும். அவன் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்திருப்பான். அம்மா வந்து சொல்வாள். அந்தரப்பட்டு "தம்பி" இண்டைக்கு பள்ளிக்கூடப் பொடியளையும் திருப்பி விட்டிட்டாங்கள். நீ ஆயத்தமாய் இரு" இரவெல்லாம் தொடர்ச்சியாய் வாகனங்கள் இரைந்து சென்றதன் காரணம் அப்போது விளங்கும். வேலிகளைப் பிரித்துக்கொண்டுவருவார்கள். அவன் வெளிமுற்றத்தில் நின்றி ருப்பான். அவர்களின் வெறித்த பார்வை அவன் மீது நிலைகுத்தி நிற்கும். அவர்கள் செல்லப்பணிக்கும் கோவிலுக்கு செல்லவேண்டியிருக்கும். அவன் பின்னே தந்தை வால் போல வந்துகொண்டிருப்பார். கண்கள் எரிவெடுக்கும். பீளை வெளி வந்திருக்கும். உதடுகள் உலர்ந்து வாய் நாறும். கழுவப்படாத முகத்தோடு அவன். அவனைப்போல பலர் செம்மறியாடுகள் போல் போய்க்கொண்டிருப்பர். அப்போதெல்லாம் அவன் நினைத்துக்கொள்வான். ''பேசாமல் வன்னிக்குப் போயிருக்கலாம்.''

• • •

அவர்களின் வருகை நிகழ்ந்த முதல் நாள் 'சிங்கன்' சங்கிலியை அறுத்துக்கொண்டு எங்கோ ஓடிவிட்டது. கொட்டிலில் நின்ற பசுக்கள் வெருண்டன. பசுக்கள் பேய், பிசாசுகளை கண்டால்தான் பயப்படுமாம். அவர்கள் வீட்டைச் சுற்றிலும் தென்பட்டனர். கிடுகு வேலிக்கு மேலாக அவர்களின் தலைக்கவசங்கள் பயமுறுத்தின. அவன் அறையினுள் ஒடுங்கினான். அறையிலிருந்த ஒவ்வொன்றும் அவனுக்கு அச்சமூட்டின. "பேசாமல் வன்னிக்குப்போயிருக்கலாம்" சூரியனை முதல் தடவையாக நமஸ்க்ரிக்க எண்ணியது மனம். ஆனால்..........

வீட்டின் வாசலில் அவர்கள் முகாமிட்டிருந்த மூன்று நாட்களும் அவன் அறையினுள் ஒடுங்கவேண்டியிருந்தது. இரவில் மயானத்தில் படுத்திருப்பதாய் உணர்ந்தான். அச்சந்தரும் கனவுகள் தொடர்ச்சியாய் வந்தன. அது ஒரு விளையாட்டு மைதானமாய் இருக்கலாம். சிலர் கால்பந்து விளையாடிக்கொண்டிருக்கின்றனர். பந்துக்குப்பதிலாக அவன் தலை உருண்டோடிக்கொண்டிருக்கிறது. மைதானத்தைச்சுற்றி முண்டங்களால் வேலியிடப்பட்டிருக்கிறது. காகங்கள் ஆரவாரித்துக்கொண்டிருக்கின்றன. அவற்றின் காலிடுக்குகளில் ஒவ்வொரு கட்கோளங்கள்.

அவன் கட்டிலில் படுத்திருக்கிற. கட்டிலில் தீப்பிடித்து எரிகிறது. அவன் கால்களை மடித்து ஒடுங்குகிறான். தீ நாக்குகள் அவனை நக்குகின்றன. அவன் புழுப்போல் நெளிந்து துடிதுடிக்கிறான். யாரோ கெக்கட்டமிட்டுசிரிக்கின்றனர். தன்னை மீட்பவர் வருகைக்காக அவன் மனம் ஏங்கிக்கொண்டிருக்கிறது.

• • •

அகிலனும், சீலனும் சொல்லாமல் போன போது அவன் மணி, சேகரன் எல்லோருமாக அவர்கள் இருவருமே தமது எதிர்காலத்தினை சிதைத்து விட்டதாக கூடிக்கதைத்தனர். ஆனால் இப்போதோ மணி சிறையில் வாடுகிறான். சேகரன் முகந்தொலைந்தே போனான். அவன் கனத்த நாள் நிகழ்ச்சிகளுக்குள் சிக்கி சிதைந்தே போனான். எல்லாமும் அர்த்தமிழந்து போயிற்று. அவன் மீதோ அடிக்கடி நிகழ்ந்தன விசாரணைகள். இறுதியில் அவனாலேயே தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளவியலவில்லை.

முன்னைய காலங்களைப்போல நிலவெறிக்கிறது. கமுகோலைகள் பளபளத்துக்கொண்டிருக்கின்றன. எனினும் அவனுக்கோ வானம் வெறுமையாகத்தோன்றுகிறது. ஊரோ இரவு வருமுன்னே அடங்கிவிடும். நிலக்கறையானும், கரப்பான் பூச்சிகளும் இரவில் நிசப்தத்தை சிதைத்து பயமுறுத்தும். பூவரசின் சருகுகள் சரசரக்கும். அவன் ஒவ்வொரு சப்தத்திற்கும் அர்த்தம்கொள்ள வேண்டியவனாய் உடல் விறைக்க கட்டிலில் படுத்திருப்பான். எப்போதும் போல் "பேசாமல் வன்னிக்குப் போயிருக்கலாம்" மனம் அங்கலாய்க்கும்.

• • •

துயிலுமில்லத்துக்கு முன்பாக வீதியில் நடந்துகொண்டிருக்கிறான். மனம் அமைதியடைந்துள்ளது. பலர் மலர்ச்செண்டுகளுடன் சென்று கொண்டிருக்கின்றனர். அகிலனும், சீலனும் அவன் மனக்குகையில் தோன்றி புன்னகைத்துக்கொண்டிருக்கின்றனர். அந்தப் புன்னகையால் மனக்குகையில் ஒளி துலங்குகிறது. ஒவ்வொன்றுக்கும் ஆழமான அர்த் தப்படுத்தலை அவன் பெறுகிறான். துயிலுமில்லமெங்கும் ஒளிபரவுகிறது. அந்தப் பேரொளியின் முன்னே அவன் குறுகிப்போய் நிற்கிறான். அவ னுக்கு தானும் மணியும், சேகரனும் மன்னிக்கமுடியாத குற்றமொன் றைச்செய்திருப்பதாக தோன்றுகிறது. பேரொளி அவன் மீதும் பரவுகிறது.



# நூல்நோக்கு




**நூலின் பெயர்:** கூலிக்கு வந்தவன்
**எழுதியவர்** : ச.வே.பஞ்சாட்சரம்
**வெளியீடு** : தூண்டி இலக்கிய வட்டம்
கேணியடி.
திருநெல்வேலி.
**நூலின் விலை:** 170/=

**ஈழத்து** நாவல் இலக்கிய வரலாற்றில் பல எழுத்தாளர்கள் பல்வேறு முனைகளிலும் தமது ஆக்கத்திறனை புகுத்தி உள்ளனர். எனினும் கவிஞர் ச.வே. பஞ்சாட்சரத்தின் ''கூலிக்கு வந்தவன்'' நாவல் தனக்கென தனித்துவமான முனைப்பைக்கொண்டுள்ளது.

எமது மண்ணின் கற்பக தருவின் எல்லாப்பாகங்களும், எல்லாக்காலங்களிலும் பயன்தருதல் போல, கவிஞர் ச.வே. பஞ்சாட்சரம் அவர்கள் கவிஞராக அறிமுகமாகி சிறுகதை, நாவல் எனப்பல்வேறு இலக்கிய வடிவங்களிலும் தம் முத்திரையை ஆழப்பதித்துள்ளார். அவர் இயற்கையாகப் பிறந்த இயல்பு எழுத்தாளர்.

இலட்சிய வாழ்வு என்பது வெற்றி பெறப்போராட்டம்வேண்டும். பல்வேறு சோதனைகளையும், தடைகளையும் தாண்டி மனவுறுதியால் வெல்லலாம் என 'பெருந்தகை' யையும் 'பூங்கொடி' யையும் மாதிரி காட்டுகிறார்.

திடீர் திருப்பங்களாலும், வீர சகாசங்களாலும் வாசகர்களுக்கு விறுவிறுப்பூட்டும் துப்பறியும் நாவல்கள் அவற்றைப்படைத்த சிரஞ்சீவி, மாயாவி, கே.வி எஸ்வாஸ் போன்றவரின் காலத்தோடோயே முடங்கிவிட்டன. வரலாற்று ஆதாரங்கள் சிலவற்றையோ, பலவற்றையோ எழும்புக்கூடாகக்கொண்டு புனையப்படும் சரித்திரநாவல்களின் வருகை அத்துறையில் முத்திரை பொறித்த கல்கி, சாண்டில்யன், ஜெகசிற்பியன், அகிலன் போன்றோரின் காலம் போல் இல்லாமல் இன்று தளர்ந்துள்ளது என்றே சொல்லலாம்.

ஆனால் பருவ எழுச்சிகளும், கற்பனை, கனவுகளும்கொண்ட இளவயது உள்ளங்களைக் கவரும் பல நாவல்கள் இன்று தமிழ் நாட்டில் கொடிகட்டிப்பறக்கின்றன. அந்த வகையில் 'ரமணிசந்திர'னின் நாவல்கள் குறிப்பிடக்கூடியன.

ஈழத்தின் மங்கள நாயகம் தம்பையா முதற்கொண்டு மா.வே. திருஞானசம்பந்தர் காலம், வ.அ. இராசரத்தினம் காலம், டானியல், செங்கைஆழியான், தெனியான், தாமரைச்செல்வி, நந்தி, இளங்கீரன், சொக்கன் போன்றோர் நாவல்கள் படைக்கும் இந்தக்காலம்வரை, சமுதாயப்பார்வை கொண்ட, தரமான, சமூகஒழுக்க வரையறைகளைப் பேணிநிற்கும் நாவல்களும் படைக்கப்பட்டே வருகின்றன.

இந்த வரிசையில், கவிஞர் ச.வே. பஞ்சாட்சரம் எழுதிய 'கூலிக்கு வந்தவன்' நாவல் வெளிவந்துள்ளது. மனித வாழ்வின் பல பக்கங்களையும் தொட்டு, இன்ன இன்ன விடயத்தில் இப்படி இப்படித்தான் நடந்துகொள்ளவேண்டும் என்று (சொல்லாமல் சொல்லி) அனுபவ வாயிலாக உணர்த்திக்கொண்டே செல்கிறது இந்நாவல்! குடும்ப-சகோதர உறவு, வர்க்க முரண்பாடுகள், சமூக ஏற்றத்தாழ்வுகள் ஆண் பெண் உறவுகள், ஆன்மீக நம்பிக்கைகள் என்பவற்றில் எழும் பிரச்சினைகள் எல்லாமே அன்றாட நடைமுறைக்கும் பொருந்தும் வகையில் இந்நாவலில் முடிச்சவிழ்க்கப்பட்டிக்கின்றன.

"கூலிக்கு வந்தவன்" நாவல் சம்பவங்கள் ஏற்படுத்தும் மனப்பதிவுகள் தமிழரின் அகவாழ்வின் பண்பாட்டு விழு மியங்களையும், ஆன்மீக நம்பிக்கைகளையும் வாசகர் மனங்களில் மீள் நடுகை செய்வனவாக அமைந்துள்ளன. இவை இந்நாவலில் காணப்படும் விசேட அம்சங்கள்.

எழுத்தறிவு, படிப்பறிவில் மேலோங்கிநிற்கும் யாழ்ப்பாணச் சமுதாயம், படிப்படிறிவு அற்றவர்களுக்குமாக அண்மையில் புகுந்து கொண்ட புதிய ஊடக சாதனங்கள் ஊடான பாமர ரசனைகளின் மயங்கத் தொடங்கியுள்ள இன்றைய காலகட்டத்தில் இந்நாவல் வெளிவந்திருப்பது அதன் வர்த்தக நோக்கில் வெளியீட்டாளர்களுக்குப் பல்வேறு மனத்தளர்ச்சிகளை ஏற்படுத்தக்கூடும். எனினும் 40 ஆண்டுகளுக்கு முந்திய யாழ்ப்பாணத்துச் செம்மண் விவசாயக் கிராமங்கள் இரண்டினை கதை நிகழ் களமாகக் கொண்டு புனையப்பட்ட இந்நாவல் இன்று வாசிக்கும் போது மட்டுமல்ல என்றுமே சுவையும் மனத்தெம்பும் தரத்தக்கது! மீண்டும் மீண்டும் வாசிக்குத் தூண்டும் உள வேகத்தையும் இது தந்து கொண்டுள்ளது. " பழைய பவுண் என்றுமே பெறுமதியானது" என்று சொல்லப்படுகின்ற அதே கிராமியப்பின்புலங்களின் அடிப்படைகளைக்கொண்ட கருவில் உருவான நாவல் இது.

நல்ல ஒரு மேல் நாட்டு நூலுக்கு ஒரு விமர்சகன் எழுதியிருந்த விமர்சனக்கருத்து என் நினைவுக்கு வருகின்றது. இந்த நூலைப்படித்து முடித்ததும் கிழித்து எறிந்து விடுங்கள்! ஏனெனில் இரவலெடுத்து வாசிப்பவர்கள் இப்புத்தகத்தை பணம் கொடுத்து வாங்கத்தவறி, நூல் விற்பனை குறைந்து, இந்த எழுத்தாளருக்கு மனம் உடைந்து இவர் மேலும் நூலாக்கத்தில் ஈடுபடுவது தடைப்பட்டு இலக்கிய உலகுக்கே பெரு நட்டம் ஏற்பட்டுவிடக்கூடும்" என்று அவர் மனவருத்தப்பட்டார். ஆயினும் இந்நூல் விற்பனை பற்றிய பிரச்சினை ஒரு புறம் இருக்க, இன்றைய நிலையில் ஈழத்தமிழ் குடும்பங்கள் அனைத்துமே இந்நூலைப் படித்து பயனடையவேண்டும். இரவல் எடுத்துப்படித்தாயினும் மேம்படவேண்டும் என்பதே எம் விருப்பம். இந்நூலின் முன்னுரையில் மூதறிஞர் சிவராமலிங்கமும் "கூலிக்கு வந்தவன் வாசிக்கப்படவேண்டிய புதினமன்று. படித்துச்சுவைத்து இரைமீட்கவேண்டியது ஒன்று என்பது உறுதி'' என்று குறிப்பிட்டுச் சொல்லியதை இங்கு நோக்க வேண்டியுள்ளது.

எத்துறை சார்ந்த எழுத்தாளராயிருப்பினும் மொழிநடை மிகவும் முக்கியமானது. கருத்துக்களை கண்ணியமாகவும், பொருட்செறிவோடும், படிக்கும் கேட்கும்போது மனதில் பதிவிக்கவேண்டும். அந்த வகையில் கவிஞர் ச.வே. பஞ்சாட்சரம் போற்றலுக்குரியவர். தமிழ் இலக்கணம் என்றால் சிலருக்குக் கற்கும்போது அது தெளிவற்ற நிலையிலிருந்தபோது, தனது தனித்துவத் திறமையால் அதனை விளக்கமாகவும், சுலபமாக படிக்கக்கூடிய சாதாரண உரை நடையிலும் எழுதி அச்சேற்றி வைத்தார். அந்நூல் எத்தனையோ தமிழ்த்திறமைசால் மாணவச் செல்வங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறது. ஈழத்தில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் புலம்பெயர்ந்துறை தமிழ் மக்களுக்கும் வழிகாட்டி வருகிறது. கனடாவில் இவரது இந்தத் 'தமிழ் இலக்கணப்பூங்கா' ஒரு சஞ்சிகையில் பகுதி பகுதியாகப் பிரசுரிக்கப்பட்டுப் பரந்து வாழும் தமிழ்மக்களுக்குப் போதனை செய்கிறது.

போர்ச்சூழலால் சுவடுகளே இல்லாமல் அழிந்துபோன யாழ்ப்பாணக் கிராமிய நினைவுகளை, இந்நூல் படம் பிடித்துக் காட்டுகிறது: தமது சொந்த இருப்பிடங்களுக்கே போக முடியாத நிலையில், இந்நாவல் குறிப்பிடும் ஊர்களும், உறவுகளும் தத்தம் சொந்தக்கிராமிய மண் வாசனையை முகர்ந்து சிலிர்க்க உதவுகின்றது; அது மட்டுமன்றி கடந்த கால நினைவோட்டங்களையும், காலங்காலமாக காத்து வந்த பாரம்பரிய விழுமியங்களின் சுவடுகளையும் தொட்டுக்காட்டுகின்றது. நாவல் ரசனைகளை விடக் கருத்துக்களை நுணுக்கிக் காட்டும் சுவைகள் மேலோங்கி நிற்கின்றன.

ஒரு மரபுக் கவிஞராக இருப்பதால் எழுந்த மொழிநடையானது பிறள்வும், பிழைகளுமற்ற வசன ஆற்றலைக்கொண்டிருக்கிறது.


இயன்றவரை மொழிவழக்குக் கறை படாது கருத்துக்களை நடத்தி முடிக்கிறார். கொச்சை மொழிகளைக் கொட்டிக் கலக்காமல் இயன்றவரை நல்ல தமிழில் நடை போட்டுள்ளார்.

இதனால் வாசகருக்குக் கருத்தோடும்,நாவல் சுவையோடும் மொழிவளத்தையும் ஊட்டுவிக்கிறார்.

இலக்கியங்கள், கலை நயம் மிளிர்வது மட்டுமன்றி மனித குல மேம்பாட்டுக்கு உதவுவனவாயும் அமைய வேண்டும் என்ற கோட்பாடு பொதுவாக ஈழத்துப் படைப்பாளிகளிடையே மேலோங்கியுள்ள இக்காலத்தில் எழும் படைப்புக்கள் சில, கலைநயம் - கவர்ச்சி இன்றி வரட்சிப் படைப்புக்களாகவும் அமைந்து விடுவதைக் காண்கிறோம். ஆனால் "கூலிக்கு வந்தவன்" நாவல் தமிழின்பத்தோடு - இதயச்சிலிர்ப்பையும் ஊட்டிக் கொண்டிருப்பதோடு கருத்துச் செறிவும் கொண்டு விளங்குகிறது.

விற்பனையே அடித்தள எண்ணமாகக்கொண்டு பாலுணர்வுகளை அதீதமாகக் காட்டி மறைக்கும் நாவல்களும், இதயங்களைக் குறுக்கு வழியில் இழுக்கும் மதுவைப்போல் சுவைதரும் கதைகளும் போல் தற்காலிகமாக மயக்கவைக்கும் நாவலல்ல இது. குடும்பங்களில் எல்லோருமே வாசித்துப் பயனடைய வேண்டிய நூல்.

இல்லங்களில் நூல் நிலையங்களை உருவாக்க இதை முதல் நூலாகவே வாங்கிக் கொள்ளலாம்.



கே.எஸ்.ஞானமூர்த்தி.

## ஒட்டுவதா? வெட்டுவதா?

பொழுதுகள் விடிகின்றன
ஏனைய யாவும் புலர்கின்றன
வழமை போல....

நானும் நீயும் மட்டும்
வழமைக்கு மாறாய்
வழமை போலவே...

சில காலமாய் சிதிலமுற்று
கிழிந்து தொங்கும்
வாழ்க்கை ஆடையின் ஒட்டையிலுள்ளேயே
வாழ்ந்து வாழ்ந்து
தொலைத்தே விட்டோம்
எம் சுயங்களை....

நானும் நீயும் சுமக்கும்
ரணங்கள் ஒவ்வொன்றிலும்
அன்பு, பிணைப்பு, புரிதல்
அத்தனையும் வெளிநடப்பு

வாழ்க்கை ஆடையைத் தைக்க
வழிகேட்டு விழி யாசித்தபோது
நீ ஊசிக்குப் பதிலாய்
கத்தரிக்கோல் நீட்டுகிறாய்!
நீ ஊசிகேட்ட போது
நானோ கத்தரிக்கோலைக் கையிலெடுக்கின்றேன்.

இதுவே குடும்ப வன்முறையாய்..
பழி வாங்கலின் படலமாய்...
முடிவுரையற்ற வாழ்க்கை நூலாய்..

என்னை நீயும் உன்னை நானும் புரிய
தொலைத்த எமது சுயங்களைத் தேடுவோமா?

மா.பரமேஷ்வரன்.

## நெஞ்சம் மறக்குமா?

ஊ....ஊ...
என்ற ஒலி - என்
இதயத்தை உடைக்கிறது
இனிநான் தன்னந்தனியாகி
விடுவேனா
உடம்பு பதறுகிறது
மனைவியும் பிள்ளைகளும்
பதுங்கு குழிக்குள்
ஊழியின் முடிவின்
ஓசைபோன்று வெடிச்சத்தம்
சிங்கள வெறியரின்
எறிகணை - என்
வாசலில்
நான் பறந்து செல்கிறேன்
மேகங்களை தொட்டுவிட்டு
திரும்பிப்பார்க்கிறேன்
என் குடும்பத்தைவிட்டு
நான் பிரிக்கப்பட்டேன்.
நாலு சட்டங்களுக்கிடையில்
என் புகைப்படம்
புன்னகையுடன்
காகிதப்பூக்களால்
அலங்கரிக்கப்பட்டு.

றமேஸ்.

அன்பு கொண்ட இதயமே, அறிவு அனைத்திற்கும் தொடக்கம். - தாமஸ் கார்லைல்



# குழந்தைநாதம்

## கெட்டிக்காரச் சிறுவர்கள்



## முன்னோடிகள்

மழை பெய்து ஓய்ந்து மாலையாகிவிட்டது. அதனால் அவர்கள் கிராமத்துள் இறங்க முடியவில்லை. இரவு முழுவதும் கடுங் குளிராக இருந்தது. போர்வையால் இறுக மூடிக்கொண்டு சுருண்டு படுத்து விட்டார்கள். கண்கள் தூங்க மறுத்தன. பாடசாலை கண்முன் நிமிர்ந்து நின்றது. என்ன செய்வது... மீண்டும் சுவர்கள் கரைந்திருக்குமே...! ஏக்கம் அவர்களை வாட்டியது. விடியட்டும்... என்று எண்ணிக்கொண்டே தூங்கி விட்டார்கள்.

அன்று விடுமுறை நாள் பாடசாலைப் பக்கம் யாரும் வரமாட்டார்கள்.

கண்விழித்த தீபன் படுக்கையைச் சுருட்டிக் கொண்டு எழுந்துவந்தான். தாய் தேனீர் தயாரித்துக் கொண்டிருந்தாள். தேனீர் குடிப்பதற்கே அவனுக்குப் பொறுமையில்லை. தாயாரின் அன்பான கண்டிப்புக்காக தேனீரை ஊதி ஊதிக் குடித்து முடித்தான்.

தாயாரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு குமாரிடம் ஓடினான். குமாரும் தய்யாராகி விட்டான். எடுத்த தீர்மானத்தை விரைந்து முடிப்பதில் இருவருமே ஆவலாக இருந்தார்கள்.

குமார் முதல்ல பள்ளிக்கூடத்திற்குப் போவம். நேற்றும் நல்ல மழை பெய்திருக்கு என்றான் தீபன்.

குமாரும் தலையை அசைத்தான்.

பாடசாலை அவர்களின் வீட்டில் இருந்து அதிக தூரத்தில் இல்லை. உடனே புறப்பட்டுச் சென்றார்கள். தெருவெங்கும் மழை நீர் தொட்டம் தொட்டமாகத் தேங்கி நின்றது. அவர்கள் இருவரும் விலகி விலகிச் சென்றார்கள்.

பாடசாலைச் சுவரில் ஒருபகுதி இடிந்து கிடந்தது. அவர்களுக்கு அழுகைதான் வந்தது. என்ன செய்வது என ஒருகணம் திகைத்து நின்றார்கள்.

இப்படித்தான் உந்தப் பக்கத்துச்சுவர் இடிந்து விழப் போகுது. அதுக்கிடையில மேயவேணும் என்றான் தீபன்.

தீபன் உதைச் சரிப்படுத்திப் போட்டு, கிடுகுக்குப் போவமே என்று கேட்டான் குமார்.

வேண்டாம் குமார் முதல்ல கிடுகுகளைக் கொண்டுவந்து மேய்ந்து போட்டு சுவரை வைப்பம் என்று தடுத்தான் தீபன்.

ஓ! அதுவும் சரிதான் பிறகு மழைபெய்தால் கரைச்சுப் போடும்.

அதுதான் இப்ப உதோட மினக்கெடாமல் போவம் வா... இருவரும் வேகமாகத் திரும்பி தென்னை மரம் நிற்கும் வீடுகளை நோக்கி நடந்தார்கள்.

ஒவ்வொரு வீடு வீடாகப் போய் விளக்கமாகக் கூறிக்கேட்டார்கள்.

பலர் முன்வந்து உதவினார்கள். சில வீடுகளில் கிடுகுகள் ஓலைகளாக இருந்தன. அவர்கள் பின்னித்தருவதாக்க் கூறினார்கள்.

அவர்களின் முயற்சியைக் கண்டு அவ்வூர் இளைஞர்களும் பெரியவர்களும் வெட்கப்பட்டார்கள். சிலர் உடனேயே செயல்படத் தொடங்கினார்கள். தங்களின் வேலைகளை ஒதுக்கிவிட்டு ஓலைகளைச் சேகரித்து சுமந்து கொண்டு சென்றார்கள்.

தீபனுக்கும் குமாருக்கும் அளவுகடந்த மகிழ்ச்சி உண்டானது.

அவர்களின் எண்ணங்கள் நிறைவேறிக்கொண்டிருந்தன.

அவர்களுக்குப் பசியே தெரியவில்லை. அங்கு வந்தவர்கள் பள்ளிக் கூடத்தில் பழுதடைந்த கிடுகுகளை அகற்றி புதிய கிடுகுகளை வைத்து மேய்ந்தார்கள். இனி மழையோ தூவானமோ சுவர்களைப் பாதிக்காது என்ற நிலை வந்ததும் சுவர்களைப் பழுது பார்க்கத் தொடங்கினார்கள்.

இடிந்த பகுதியைத் திருத்தம் செய்வதற்கு ஊர் திரண்டு நின்றது. வேலைகள் எல்லாம் சிறப்பாக முடிந்தன. வந்தவர்களுக்குத் தீபன் நன்றி கூறினான். அவர்கள் தீபனையும் குமாரையும் பாராட்டினார்கள்.

அந்த ஊர்மக்களுக்கு தீபனையும், குமாரையும் நினைக்கப் பெருமையாக இருந்தது. கோவிலிலும்,வயலிலும் இவர்களைப் பற்றியே ஓரிரு வாரங்களாகப் புகழ்ந்து பேசினார்கள் மக்கள்.

**முருகு. பாரிமகன்**

## வாரம் ஒரு குறள்



*இல்லாமை காரணமாக இரந்து கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் கொடுப்பது ஈகை. கொடை என்று கூறப்படுவது நமக்குத் தெரிந்ததே. அந்தவகையில் கர்ணன் கொடையில் சிறப்புற அள்ளி அள்ளிக் கொடுத்ததாக பாரதக்கதை கூறுவதும் நாம் அறிந்த ஒன்றே.*

*வறியவர்களின் வாட்டம் தீர கொடுப்பதற்கு நம்மிடத்தில் நிறைய இருந்தால்தானே என்று நாம் நினைப்பதுண்டு. ஆனால் அள்ளிக் கொடுக்காது விட்டாலும், இல்லை என்று வருபவர்களுக்கு கிள்ளியாவது கொடுத்துதவுவதும் ஈகைதான். இதன்னைத் தான்*

*"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்*
*குலனுடையான் கண்ணே உள."*

*என்று வள்ளுவப்பெருந்தகை அழகாகக் கூறியுள்ளார்.*

## சொற்சிலம்பம் - 15

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கொ | அ | ஓ | வி | ளி | தொ | ஏ |
| ப் | வை | த | வ | அ | பா | ன் |
| ய | ரு | ர் | ர | வ | க் | ம் |
| க் | ளை | ல | கி | கெ | ம | வ |
| ட | ர் | கு | க் | ட | ஆ | ப |
| க | க | றி | மை | தை | கா | ந் |
| ரு | ல் | ம் | ஆ | இ | பா | ச |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 13 இன் விடைகள்

01. தோசை.
02. அப்பம்.
03. இடியப்பம்.

01. மிருதங்கம்.
02. வயலின்.

### சொற்சிலம்பம் - 13 இன் பரிசுக்குரியவர்

ப.மயூரி, தரம் - 05
கிளி/புனித திரேசா
பெண்கள் கல்லூரி,

### சொற்சிலம்பம் - 13 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. இ.போல் கெனடி,
இல -92, சிதம்பரபுரம்,
நலன்புரிநிலையம்,வவுனியா.

02. பு.செய்மதி,
1ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

03. சூ.புவிதர்சன்,
நட்டாங்கண்டல்,
மாங்குளம்.

04. தி.துசந்தன்,
சாஸ்திரி கூழாங்குளம்,
வவுனியா.

05. ம.டர்சிகா,
தரம் - 03,
மு/முள்ளியவளை த.வி

06. பா.கலாதீபன்,
128/1 முரசுமோட்டை,
பரந்தன்.

01. நீரிலும், நிலத்திலும் வாழ்பவை?

01) ............................................

02) ............................................

02. பறவைகள் மூன்று?

01) ............................................

02) ............................................

03) ............................................

பெயர் :- ............................................

முகவரி :-............................................

............................................

*சொற்சிலம்பம் -15*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை.*
*கிளிநொச்சி.*

## கண்டு பிடியுங்கள்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| க | லை | அ | மு | த | ம் |

01. சோறின் ஒத்த சொல் :- 3,4,5,6
02. இதில் 64 உண்டாமே :- 1,2
03. முகம் இதில் அமைந்துள்ளது :- 5,2
04. இதன் அழகு முகத்தில் தெரியும் :- 3,1,6
05. அகத்தின் அழகு இதில் தெரியும் :- 4,1,6
06. ஒட்ட நாம் பயன்படுத்துவது :- 1,6
07. அரும்பு என்றும் சொல்லலாம் இதை :- 4,2
08. கடலில் இது வரும் (எழுவது) :- 3,2
09. புகைபிடிப்பதனை இப்படியும் கூறலாம் :- 5,6
10. குளத்தில் உயிர் வாழும் :- 4,5,2

கை.அகிலன், தரம் - 10
யோகபுரம் ம.வி.

## நகைச்சுவை



**ஒருவர் :-**
இந்த அறையின் நீளத்தையும் அகலத்தையும் கூட்டினால் என்ன சார் வரும்?

**மற்றவர் :-**
குப்பைதான் வரும்.

**சு.கௌரீஷன்**



# அல்லிராணிக்கோட்டை

**மன்னார்** மாவட்டத்தில் குதிரை மலை என்னும் பழைய துறைமுகத்தையண்டிய முசலி முத்தரிப்பில் இன்று காணப்படும் அழிபாடுகள் அல்லிராணிக்கோட்டை என அழைக்கப்படுகின்றது. இப்பிரதேசத்தை அல்லிராணி ஆண்டது தொடர்பான பல ஐதிகக் கதைகள் உண்டு. தமிழ் இதிகாசமான மகாபாரதத்திலும் அல்லிராணி பற்றிய குறிப்புண்டு.

அல்லி அரசாணியுடன் தொடர்புடைய தமிழ் மரபுக்கதைகள் அவள் குதிரைமலைக்கருகிலுள்ள பகுதிகளை அரசாட்சிசெய்து வந்தாள் என்றும் அரசடியிலுள்ள (பழைய கற்பிட்டி) மலபார் இளவரசனின் மாளிகைக்குத் தரை மார்க்கமாக அடிக்கடி போய் வந்தாள் என்றும் குறிப்பிடுகின்றன. மலபார் இளவரசன் என்பது தமிழ் இளவரசனைக் குறிக்கும். இவள் அந்த இளவரசனிடம் இராச்சிய விஷயமாகச் சென்றாளா? அல்லது அவனைக் காதலித்தாளா? என்பது தெரியவில்லை.

" கிறிஸ்துவுக்கு 1500 வருடங்களுக்கு முன் வடஇந்தியாவிலிருந்து அரசாண்ட பாண்டவர்களில் ஒருவனாகிய அருச்சுனன் தீர்த்த யாத்திரை காரணமாக திவ்வியசேத்திரமாகிய நகுமலையைக்கொண்ட( கீரிமலை) மணிபுரத்துக்கு வந்தான் என்பதும் அங்கே ஒரு பூங்காவனத்தில் தனியே உலாவிய சித்திராங்கதை (அல்லிராணி) என்னும் நாககன்னியைக்கண்டு காதல்கொண்டு அவளை மணந்தான் என்றும் அவனுக்குப் பிறந்த சித்தரவாகன் (பப்பிர வாகன்) அரசனாயிருந்த போது அஸ்வமேத யாகம் செய்வதற்காக திக் விஜயம் செய்ததன் தகப்பனான அருச்சுனனைச் செயித்தான் என்றும் மகாபாரதக் கதையால் அறியலாம்" என யாழ்ப்பாணச் சரித்திர ஆசிரியர் முதலியார் செ. இராசநாயகம் கூறுகின்றார். சித்திரவாகம் சிங்கக் கொடியையும், பனைக்கொடியையும் கொண்டிருந்தான் என்று மேலும் கூறுகின்றார். இதன்படி வடமேற்கிலங்கை மட்டுமன்றி யாழ்ப்பாணக் குடாநாடும் அல்லிராணியின் ஆட்சிப்பிரதேசமாக இருந்திருக்கவேண்டும்.

அல்லிராணியைப் பாண்டிநாட்டு இளவரசி என்று கூறும் கதை ஒன்று நிலவுகின்றது. தீர்த்தயாத்திரையின் பொருட்டுத் தெற்கே வந்த அருச்சுனன் பாண்டி நாட்டில் மணலூரில் பாண்டியமன்னன் மகள் அல்லியை மணந்து பப்புருவாகனைப் பெற்றாள் என்கிறது அக்கதை.

அல்லிக்கும் அருச்சுனனுக்கும் புலேந்திரன் என்னும் மகன் பிறந்தான் என்றும் அவன் உருட்டி விளையாட பவளத்தேர் செய்வதற்கு பவளத்தைப் பெறச் சென்றவிடத்தில் பவளக் கொடியைத்திருமணம் செய்தான் என்றும் பவளக் கொடி நாடகத்தில் கூறப்படுகின்றது.



சேர் அலெக் சாண்டர் ஜோன்ஸ்ரன் (Sir Alexander John ston) 1800 ஆண்டுகளுக்கு முன்னர் வட மேற்கு இலங்கையை அல்லி அரசாணி ஆண்டாள் என விளக்கும் கதையொன்றைக் குறிப்பிடுவர். இதன்படி கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன் பின்னாக அல்லிஅரசாணி வாழ்ந்திருக்கவேண்டும்.

மெகஸ்தனிஸ்(கி.மு 302-279) தென்னாட்டரசியைப் பற்றிக்குறிப்பிடும் போது ஹெர்குலிஸ் என்னும் வீரம் மிக்க அரசனுக்கு பாண்டியை என்னும் ஒரே புத்திரி இருந்தாள் என்றும் அவளுக்குத் தென்கடல் வரை பரவியிருந்த இராச்சியப் பிரிவை ஆளும் உரிமையைக் கொடுத்திருந்தான் என்றும் குறிப்பிடுவர். இக்குறிப்பு தென்பகுதியை ஆண்ட அல்லியைக் குறிப்பிடுகின்றது என்பதில் தவறில்லை. மேலும் அல்லியின் ஆட்சியை நினைவூட்டுமுகமாகவே கன்னியா குமரி தெரிகிறது. அல்லிராணி இளமையில் பற்பல போர்களில் வெற்றி பெற்று பாண்டி நாட்டை ஆட்சி புரிந்தாள் என அல்லி அரசாணி மாலை குறிப்பிடும். எனவே அல்லி அரசாணியின் ஆட்சிப்பரப்பு தென்னிந்தியாவிலுள்ள பாண்டி நாட்டிலிருந்து இலங்கையின் வடக்கு, வடமேற்குப் பகுதிவரை பரந்திருந்தது எனக்கொள்ளலாம்.

## அல்லிராணிக்கோட்டை

குதிரைமலை என்னும் பண்டைய துறைமுகம் மன்னார் மாவட்டத்தில் மன்னாருக்கும் புத்தளததிற்குமிடையில் இருக்கிறது. கடல் கோளினால் அல்லிஅரசாணி அரசாண்ட பகுதிகள் கடலுள் தாண்டுவிட்டதாகவும் அரசடி மட்டுமே எஞ்சியுள்ளதாகவும்தெரிகிறது. இலங்கையில் குதிரை வியாபாரத்தை அரேபியர்கள் மட்டுமன்றி பழந் தமிழர்களும் நடத்தினார்கள். இதனை மகாவம்சமே எடுத்துரைக்கின்றது. அதன்படி சூரத்தீசன் காலத்தில் சேனன், குட்டகன் என்னும் இரு தமிழ்க் குதிரை வியாபாரிகள் அநுராதபுரத்தைக் கைப்பற்றி 22 வருடங்கள் (கி.மு177-155) ஆண்டனர். "இவ்வியாபாரிகள் அநுராதபுரம் நோக்கிப் படையெடுத்த போது அதற்குத் தடைக்கல்லாக முசலி காணப்பட்டது. அந்தப் பிரதேசத்தை ஆளும் அல்லிராணியின் கோட்டையைக் கைப்பற்றியே ஆக வேண்டும் என முனைந்திருக்கிறார்கள்." என பாஷையூர் தேவதாசன் எழுதிய 'அல்லிராணிக் கோட்டை' நாட்டுக்கூத்தில் குறிப்பிடுகின்றார். இதன்படி பார்த்தால் அல்லிராணியின் காலம் கி.மு 2ஆம் நூற்றாண்டாகவேண்டும்.

குதிரை வியாபாரிகளின் வணிகத் துறையாக குதிரைமலை விளங்கிற்று. இதனை மேற்கு நாட்டவர் ஹிப்புறஸ்(HIPPUROS) எனக் குறிப்பிடுவர்.

இத்துறையில் இறங்கிய மாலுமிகள் இதனை அண்டியிருந்த மேடொன்றில் கணிசமான முறையில் குடியிருந்தமையை அவதானித்துள்ளனர் எனப் பிளினி கூறுவர். ஐதீகக் கதைகள் இப்பகுதியை அல்லி அரசாணி ஆண்டதாகவும் காலப்போக்கில் அப்பகுதியைக் கடல் கொண்டு விட்டது எனவும் கூறுகின்றனர்.

## நாககன்னி

அல்லி அரசாணி நாகர் குலக் கன்னி எனக்குறிப்பிடப்படுகின்றாள். இலங்கையில் ஆதியில் வாழ்ந்த இயக்கர் நாகர் என்போர் மனித வர்க்கத்தைச்சேர்ந்தவர்கள் அல்லர் என்ற கருத்து முன்பு நிலவியது. நாகரை மனித சுபாபமுள்ள சர்ப்பங்களாகவும் இயக்கரைப் . பேய் கணங்களோடு கூடிய இராட்சதர்களாகவும் கருதப்பட்டது. நாகர்கள் மானுடத்தலையும் பாம்பின் உடலும் கொண்டவர்களாகவும் பாம்பின் படங்களைப்போன்ற தலையணி உடையவர்களாகவும் சித்திரிக்கப்பட்டனர்.

ஆனால் தற்கால ஆய்வுகள் நாகரும் இயக்கரும் இலங்கையின் ஆதிக்குடிகள் எனக்கொள்கின்றனர். இவர்களை திராவிடர்கள் எனச்சில ஆய்வாளரும் இயக்கருக்கும் நாகருக்கும் முந்திய ஆரியரல்லாத இனம் என வேறு சிலரும் கருதுவர். நாகர் நாக வணக்கத்தையுடைய மங்கோலிய வகுப்பைச் சேர்ந்த திபெத் தோவர்ம குலத்தவர்கள் என்றும் கி.மு. 4000 ஆண்டுகட்கு முன்னரே மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவிற்கு வந்து பின்னர் இலங்கைக்கு வந்தனர் என்றும் வரலாற்றாய்வாளர் கூறுகின்றனர். வட இலங்கையில் மாத்திரமன்றித் தென்னிலங்கையிலும் நாக அரசர்கள் ஆட்சிபுரிந்தனர் என்பதைத் தற்போதைய ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. நாககன்னியாகிய அல்லியரசாணியும் பாண்டி நாட்டையும் இலங்கையின் ஒரு பகுதியையும் ஆண்ட அரசி என்பது உறுதியாகின்றது.

விஜயன் முதலில் குவேனியை மணந்தான் பின்னர் அவளை விட்டு பாண்டிய இளவரசியை மணந்தான் எனச் சிங்கள இதிகாசம் கூறுவது தவறாகும் என்றும் யாழ்ப்பாணத்துக் கதிரைமலையை ஆண்ட நாக அரசன் மகளையே அவன் மணந்தான் என்றும் முதலியார் செ.இராசநாயகம் கூறுவர்.

மேலே கூறியவற்றிலிருந்து நாம் பின்வரும் முடிவுக்கு வரலாம்.

01. அல்லி அரசாணியின் ஆள்புலம் பாண்டி நாட்டிலிருந்து இலங்கையின் வடக்கு வடமேற்கு வரை பரந்திருந்தது.
02. அல்லிராணி ஒரு நாகர் குல இளவரசி. நாகர்கள் இலங்கையின் ஆதிக்குடிகள்.
03. அல்லிராணி தன் இளவயதில் போரில் பல தேசங்களைக் கைப்பற்றியவள்.
04. அருச்சுனன் அல்லிஅரசாணியை மணந்தான். இவர்களது புத்திரன் பப்பிரவாகன்( சித்திரவாகன், புலேந்திரன்)
06.இலங்கையிலிருந்த அல்லி ராணியின் இராசதானியும் கோட்டையும் குதிரைமலையையண்டிய முசலி முத்தரிப்பில் இருந்தது.
07.அல்லி அரசாணியின் கோட்டையின் பெரும்பகுதி கடல் கோளால் விழுங்கப்பட்டுவிட்டது.
08. அல்லி அரசாணியின் காலம் திட்டவட்டமாகத் தெரியவில்லை. பாரதகாலம் எனக் கொள்வது பொருத்தம் போலத்தெரிகிறது.

ஆதாரம் :-

திருமதி.ஜி.தனபாக்கியம்:
இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளும், திராவிடக் கலாசாரமும் 2001.
முதலியார் செ.இராசநாயகம்:
யாழ்ப்பாணச்சரித்திரம் 1933.
அல்லிஅரசாணி மாலை
பவளக்கொடி நாடகம்
மகாவம்சம்
பாஷையூர் தேவதாசன்:
அல்லிராணிக்கோட்டை நாட்டுக் கூத்து 2001

முல்லைமணி

# உள்ளூர் வைத்தியம்

## புற்றுநோயைத் தடுக்கும் தக்காளி

புரோஸ்டேட் புற்றுநோய் என்பது ஆண்களை அதிக அளவில் தாக்கும் புற்றுநோய். குறிப்பாக 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு இந்த வகை புற்றுநோய் வருவதாக புள்ளி




விபரங்கள் தெரிவிக்கின்றன. புரோஸ்டேட் புற்றுநோய் ஆண் உறுப்புக்கு இணையான சுரப்பி திரள்களான பெருஞ் சுரப்பியை தாக்குகின்றது. இதன் காரணமாக சிறுநீரக மண்டலம் பாதிக்கப்படுகிறது. இதனால் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும்போல தோன்றுவது. சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல் இருப்பது. சிறுநீருடன் ரத்தம் கலந்து போவது போன்ற அறிகுறிகள் தென்படலாம். இத்தகைய கொடிய புரோஸ்டேட் புற்றுநோயை குணப்படுத்தும் ஆற்றல் தக்காளிக்கு இருப்பதாக டாக்டர் மைக்கேல் டபிள்யு. ஸ்மித் தெரிவித்துள்ளார். தக்காளியில் அதுவும் சமைத்த தக்காளிக்கு புரோஸ்டேட் புற்றுநோயைக் குணப்படுத்தும் ஆற்றல் இருப்பதாக இவர் தெரிவிக்கிறார். தக்காளியில் லைக்கோபீன் என்றொரு பொருள் இருக்கிறது. இந்த லைக்கோபீன் தான் புற்றுநோய்க்கு எதிராக செயல் படுகிறது. மேலும் தர்பூசணிபழம். ரோஸ் நிற திராட்சை பழங்கள் ஆகியவற்றிலும் லைக்கோபீன் இருக்கிறது. ஆகையால் தக்காளி பழத்தை எந்த உருவத்திலாவது சேர்த்துக் கொள்வது நல்லது.

## பொல்லா நோய்கள் தீர்க்கும் வல்லாரை

இயற்கை அன்னை தன் அளப்பரிய அருள் நோக்கால். மாந்தர் தம்மை வாட்டி வதைக்கும் உறுப்பிணிகளிலிருந்து நலம்பெற எண்ணற்ற மூலிகைகளை அருட் கொடையாக வழங்கியிருக்கிறாள். மெய்ப்பொருள் நோக்கில் விளக்கிக் கூறுவதென்றால் அதாவது வேதாந்த ரீதியில் கூறுவதென்றால் பரம்பொருளே ஈன மானிடப் பிறவிகளின் மேல் கொண்ட அளப்பரிய கருணைப்பெருக்கால் தானே மூலிகை மருந்து பூண்டுகளாகவும் மூலிகை மரங்களாகவும் முளைத்து மக்களுக்கு உதவி வருகின்றார் என்று கூறுவது மிகையன்று. மூலிகைகளில் உலோகச் சத்துக்களை தன்னகத்தே கொண்ட மூலிகைகளும் இருப்பதாக பல வரலாற்றுக் குறிப்புகள் தெளிவாய்க் கூறுகின்றன. இரும்பை பொன்னாக மாற்றும் ஈடுயிணையற்ற மூலிகைகள் இருப்பதாக இன்றும் மருத்துவ வல்லுநர்கள் அழுத்தம் திருத்தமாக உறுதிபடக் கூறுகின்றனர்.

வல்லாரை மூலிகை மருதநிலத்தில் செழித்து வளரும் கீரை இனத்தைச் சேர்ந்தது. பொன்னாங்கண்ணி. கரிசலாங்கண்ணி. கீழ்க்காய் நெல்லி போன்ற சிறந்த மூலிகைகளில் ஒன்றாகும். பண்டைக்காலத்தில் துண்டுபட்ட தசைப் பகுதியை இணைக்கும் தொழுகண்ணி என்ற மூலிகையும். வேல் தைத்த புண்ணை ஆற்றும் சல்லியகரணி என்ற மூலிகையும். துண்டுபட்ட உடல் உறுப்புக்களை பொருந்தச் செய்யும் சந்தான கரணி என்ற மூலிகையும். ஆறாத ரணங்களை ஆற்றுவிக்கும் சமனிய கரணி என்ற மூலிகையும். மூர்ச்சை தீர்த்துக் குற்றுயிர் தரும் மிருத சஞ்சீவினி என்ற அதிஅற்புத ஆற்றல் படைத்த மூலிகைகளும் இருந்ததாக சூடாமணி நிகண்டு



கூறுகின்றது... வல்லாரை மூலிகை என்னென்ன நோய்களை தீர்க்கின்றது என்பதை ரத்தினச் சுருக்கமாய் கூறுவோம். தோல் புள்ளிகள். கால்களில் மஞ்சள் புள்ளிகள். எரிசி. பிலிஸ் சிவப்பு. இடது கழுத்து. இரு கைகள். கண் இமைகளில் சிவப்பு புள்ளிகள். உள்ளங்கால்களில் காது போன்ற வடிவமுள்ள சிவந்த புள்ளி. தொடைகள். முதுகு. மார்பு. கழுத்து. முகம் இவைகளில் சிவந்தபுள்ளிகள். அரிப்பு. ஏராளமான வியர்வை. சினைப்புகள். அடி வயிற்றில் செம் புள்ளிகள். மார்பில் கொப்புளங்கள். முகத்தில் பருக்கள். பல இடங்களில் சுருக்கென்று குத்துதல். மூக்கு நுனியில் அரிப்பு முதலிய நோய்களை அறவே அகற்றுகின்றது.

வல்லாரை கொடியநோயாகிய தொழு நோய் என்று கூறப்படும் குஷ்டநோயை அறவே போக்குகின்றது. வல்லாரைமூலிகை தீர்க்கும் மிக முக்கிய நோய்கள் ரத்த சீதபேதி. மஞ்சள் காமாலை. வெட்டைநீர்சுரப்பு காய்ச்சல்கள் தொழுநோய் (குஷ்டம்). இரண்டாவது கிரந்தி நிலை. யானைக்கால். வீக்கம் உடல் உறுப்புக்களை வெட்டியெடுத்தபின் ஏற்படும் புரையோடிய அழுகல்புண். முகப் பருக்கள். பெண்களின் வெள்ளைபடுதல். எல்லாவித தோல் வியாதிகள். கருப்பையில் வீக்கம். யோனிக்குழாய் அரிப்பு.தோலும் பெண்களின் பிறப்புறுப்பும். ஈரல். பூந்தசைகள் இவைகளும் பாதிக்கப்படுகின்றன. தோல்சதை அதிகமாக தடித்திருக்கும் வியாதிகளிலும் 'வரம்பு கட்டிக்கொண்டிருக்கும் வட்டவடிவமான புள்ளிகள் உள்தோல் வியாதிகளிலும் வல்லாரை மூலிகை மருந்து நன்கு வேலை செய்கின்றது. வல்லாரை நினைவாற்றலை மீட்டுத்தருவதில் இணையற்ற மருந்து என அனுபவப்பூர்வமாக கூறப்படுகின்றது. வல்லாரை மூலிகை மருந்து உள்ளே அருந்தவும் மேறபூச்சாகப் பூசவும் உரிய மருந்தாக ஹோமியோபதி மருந்து கடைகளில் கிடைக்கும். வேண்டியவர்கள் வாங்கி பயன்படுத்திக்கொள்ளலாம்.

சானா

பொருளின் அழகு, அவற்றைப் பற்றிச் சிந்திக்கும் உள்ளத்தில் தான் உள்ளது. - டேவிட் ஹ்யூம்



# இளையநாதம்

## பழக்கம்

படித்த பாதியில் - இப்பவும்
உன் பெயர் எழுதிப் பார்க்கும்
பழக்கம்
எல்லாம் தொலைந்து
எங்கோ மறைந்து
பல்லாண்டு கால வெளியில்
எல்லாம் சிதைந்து
நீ உன் பாடு
உன் வாழ் வென்றான பின்பும்
பழக்கத்திலுள்ளதின்றும்
படித்த பாதியிலுன்
பெயரெழுதிப் பார்க்கும்
பழக்கம்

கௌ.சீ

## அது உண்மை

நீ என்னை கல்லறையில்
புதைத்து விட்டேன் என்று
சொன்னாயாம் அது உன்னால்
முடியாத காரியம்.
ஏன் என்றால் என்
நினைவுகள் எல்லாம்
உன் இதயம் எனும்
கல்லறையில் ஆழமாக
பதிந்து விட்டன. இவற்றை
நீ தூக்கி எறிந்து விடுவாய்
ஆனால் அது உண்மை..!

கேதீஸ்

## வாசம் அறிந்தவன்

யார் சொல்வார் அவனை
மண் வாசம் அறியாதவனென்று
மண்ணில் பிறந்து
மண்ணில் தவழ்ந்து
மண்ணில் மரணத்தை தழுவி
வாழ்ந்து முடிக்கவென
ஆசை கொண்டு
மறுபிறப்பெடுத்து
வந்திருப்பவன் அவன்.

தீ

## சரளிக்கற்கள்...

### தீப்பெட்டி...

நெருப்பு வாயாடிகளை
மடியில் கட்டிக் கொண்டு
உரசினால் உயிரைவிடும்
தியாகி...

மலைகளில் ஏறித்
திரும்பியவனை
சமவெளியில்
உருள வைத்த
சாதாரணப் பிறவிகள்...

### காற்று...

காட்டில்
கவனிப்பாரற்று
வளர்ந்த
மூங்கிலை முத்தமிட
வைத்த
முதல் விஞ்ஞானி...

க.சிவநேசன்.

## ஊக்கமாத்திரை

# குண நலம் கொள்க

குணநலம் என்பதனைப் பண்பு நலம் என்றும் கூறலாம். ஒருவன் பெரிய அறிவாளியாகவும், வசதிமிக்கவனாகவும் இருக்கலாம். ஆனால் அவனிடம் குணநலம் இல்லையென்றால் எதற்கும் பயனற்றவனாவான். மனிதன் ஒரு மரத்தைப் போல் வளரக்கூடாது. மனிதனைக் கணித்திடுவதற்கான கருவியாக அமைவது. அவனது குணநலமே. தூய்மையான எண்ணம். இனிய பேச்சு. நல்ல செயல் ஆகியவை ஒருவனுடைய குண நலத்தை மற்றவர்களுக்குக் காட்டும் சாதனங்களாகும்.

மனிதனை விலங்கின் தன்மையிலிருந்து பிரித்துக்காட்டுவது. அவனது குணநலனே. உடலை வைத்து ஒருவனை மனிதன் என்று தீர்ப்பிட முடியாது. அவனது பண்பு நலனை வைத்தே மனிதன் என்று அவனைக் கூறலாம். மனிதனை மனிதனிடமிருந்தே இனம் காட்டுவதும் குணநலனே.

"தனி மனிதனின் ஒழுக்கத்தை இயல்பான பண்பைக் கொண்டே தீர்ப்பிட வேண்டும்" என்று அறிஞர் எமர்சன் கூறுகின்றார். எனவே. ஒரு வனுடைய சொல்லும். செயலும். சிந்தனையும் தூய்மை. நேர்மை என்னும் அடிப்படைகளில் அமைதல் வேண்டும்.

பல வகையான மலர்கள் குவியலாக உள்ளபோது. அவற்றை இன்னின்ன மலர் என்று கூறுகின்றோம். காரணம். அம்மலர்களின் நிறம். வடிவம். இதழ்கள். மணம் ஆகியவை அவற்றை வேறுபடுத்திக் காட்டுகின்றன. அவ்வாறே மனிதர்களையும் குணநலக் கூறுகளாகிய அறிவு. உணர்வு. மனத்தூய்மை. ஒழுங்கு ஆகியவற்றைக் கொண்டு இன்னார் இன்னாரென்று கூறுகின்றோம். தீயமனமுள்ளவரைக் கெட்டவர் என்றும். நல்லமனமுள்ளவரை நல்லவர் என்றும். ஆலோசனை கூறுபவரை அறிவாளி என்றும். சிந்தனையற்றவனை அறிவிலி என்றும். விலங்கு உணர்வுடையவனைத் துன்மார்க்கன் என்றும் கூறுகின்றோம்.

மனிதனுடைய குணநலம் வளரும் முதல் சூழ்நிலையாக அமைவது .வீடு. ஒவ்வொருவனும் நற்குணப் பயிற்சியை - நல்லொழுக்கப் பயிற்சியை வீட்டிலே முதலில் பெறுகின்றான். வீட்டில்வாழும் வாழ்க்கை அவனுடைய சமுதாய வாழ்க்கை எதிர்கால வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்றது. எனவே ஒருவனுடைய மனம். குணம் இரண்டும் வீட்டிலேயே நன்கு பக்குவப்படுத்தப்படவேண்டும். குடும்பத்திலிருந்தே ஒருவன் தன்னுடைய வாழ்க்கையை வாழத்தொடங்குகின்றான்.

ஒருவனுடைய குணநலத்தை வளர்க்கும் இரண்டாவது சூழ்நிலை. அவன் மேற்கொண்டு செய்யும்வேலை. அவன் தன்னுடைய வேலையின் மூலம் தன்னடக்கம். கவனம். விடாமுயற்சி. மன ஒருமைப் பாடு. கீழ்ப்படிதல் போன்ற பண்புகளை வளர்த்துக்கொள்ளுகின்றான்.

மனிதனுடைய குணநலத்தை வளர்க்க முயற்சி மிகவும் இன்றியமையாதது. முயற்சி இல்லாமல் குணநலத்தை வளர்க்கமுடியாது. இடைவிடாது தன்னுடைய உணர்வுகள் மீது கவனமும். தன்னடக்கமும் தேவை. தன்னுடைய வாழ்க்கைப்பாதையில் - முன்னேற்றப் பாதையில் பல சோதனைகளும். எத்தனையோ இடையூறுகளும் உண்டாகலாம். குணநலத்தில் சிறந்தவன் அவற்றையெல்லாம் கண்டு மனத்தளர்ச்சி கொண்டு நிற்கமாட்டான்: தன்னுடைய முயற்சியில் மேலும் ஊக்கமும். வேகமும் காட்டுவான். மனவலிமையும். உள்ளத்தில் நேர்மையும் உடையவன். அவ்விடையூறுகளையெல்லாம் கண்ட அளவில் மனம் சோர்ந்து. வாழ்வின் வெற்றியில் நம்பிக்கை இழக்கமாட்டான்: வாழ்வின் வெற்றியைப் பற்றி வீணாகக் கவலைப் படமாட்டான்.



குணநலம் என்பது. ஒருவனுடைய சக்திகளிலெல்லாம் ஒப்பற்ற சக்தியாகும். மனிதனது இயல்பைச் சிறந்த முறையில் படம் பிடித்துக் காட்டுவது. அவனுடைய குணநலமே.

ஒருவனுடைய அறிவாற்றல் பிறரது பாராட்டிற்கு வழிகோலுகின்றது. அவனது குணநலம் மரியாதைகளுக்குத் துணையாக அமைகின்றது. அறிவுத் திறன் மனவலிமையினால் வருவது. குணநலம் உள்ளத்தின் வலிமையால் உண்டாவது. மனிதனுக்குக் குணம்நலம் ஒருவிதமான சொத்து ஆகும். ஒருவன் ஒரு பண்ணையைப் பாதுகாப்பது போன்று. தன்னுடைய குணநலத்தையும் பேணுதல் வேண்டும். பண்ணையைப் பாதுகாத்துப் பலன் பெறுவது போன்று. வாழ்வில் தன் குணநலம் பேணி முன்னேற்றமும். மதிப்பும் புகழும் பெறுதல் வேண்டும்

ஒருவனுடைய குணநலம். அவனுடைய நேர்மைப் பண்பின்மூலம் வெளிப்படும். நேர்மைப் பண்புடையவன். தன்னுடையபேச்சின் மூலமம் செயலின் மூலமும் நேர்மையில் நின்றொழுகுவான்: தன்னுடைய மனச்சாட்சியின்படித் தன் தொழிலைச் செய்து வெற்றி காண்பான். மற்றவர்களால் மதிப்புடனும் மரியாதையுடனும் போற்றப்படுவான்.

"எந்த மனிதனும் பணக்காரனாகவோ. தலைசிறந்த மனிதனாகவோ. ஞானமிக்கவனாகவோ இருக்க நல்ல மனம் வேண்டும்" என்று அறிஞர் பெஞ்சமின் ருடியார்டு என்பவர் கூறுகின்றார். எனவே. வாழ்க்கையில் முன்னேற்றமும். வெற்றியும் காணவேண்டும் என்று விரும்புவோர். தமது குணநலத்தைப் பேணி வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

நன்றி:- முன்னேற்றத் திறவுகோல்

## சொல்லவேண்டிவந்த பொய்கள்

நானும் எனது நண்பன் குகனும் அன்றொரு நாள் கிளிநொச்சியிலிருந்து பிரதான வீதியூடாக வவுனியா செல்வதற்கு ஆயத்தமானோம். நானும் அவனும் காலை9.00 மணிக்குப் புறப்படும் பஸ்ஸில் பிரயாணம் செய்வதாகவிருந்தது. அதற்காக நான் எனது நண்பனை காலை 8.45 மணிக்கு கிளிநொச்சி பஸ் தரிப்பு நிலையத்தில் காத்திருக்கும்படி கூறிவிட்டு வீடு சென்றேன். மறுநாள் காலையில் நான் வேலை செய்யும் அலுவலகத்தில் குறிப்பிட்ட வேலையை செய்து கொடுக்க வேண்டியிருந்தமையினால் குறித்த நேரத்திற்கு பஸ் நிலையத்திற்கு செல்ல முடியாது போய்விட்டது. நேரமோ 10.30ஐ தாண்டிவிட்டது. எனது துவிச்சக்கரவண்டியை மிக வேகமாக செலுத்தினேன். நண்பனை பஸ் தரிப்பு நிலையத்தில் காணவில்லை. என்னை சரியான கோபம் ஆட்கொண்டது. ஆனால் சிறிது நேரத்தில் நண்பனோ வந்துசேர்ந்துவிட்டான் ஏதோ காலை 8.00 மணிக்கு வந்து நிற்பவன்போன்று வாயில் வந்தவாறு திட்டித் தீர்த்தேன்.அவனும் பொறுமையாய் தன்னை சாந்தப் படுத்திக்கொண்டு காலில் விழாத குறையாய் மன்னிப்புக் கேட்டான்.பின்பு நிதானமாக அவன் கூறினான்; நான் காலையிலிருந்து என்னைக் காத்திருந்துவிட்டு காலையுணவை எடுப்பதற்காக சிறிது நேரத்திற்கு முன்புதான் வெளியில் போனதாய். எனக்கோ திக்கென்றது. ஏனென்றால் நான் நண்பனுக்கு நேரகாலத்துக்கே வந்துவிட்டது போல பாசாங்கு செய்துகொண்டிருப்பது மட்டுமல்லாது பொய் வேறு சொல்லிக்கொண்டிருந்தேன். பாவம் நண்பன் ஒன்றும் அறியாது எனக்குப் பணிந்து நான் சொலவதெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தான்.

உருவி

## குறுக்கெழுத்துப்போட்டி - 50



### இடமிருந்து வலம்

01. மீன் பாடும் தேன்நாடு இறுதி எழுத்தை இழந்துள்ளது.
09. மோதிரம்.
17. பிரமை.
24. மகன் தலைகீழாக உள்ளது.
30. தாய்.
33. வருவாய் குழம்பியுள்ளது.
36. தினசரிப் பத்திரிகை தலைகீழாகவுள்ளது.

### மேலிருந்து கீழ்

01. வாசனையுள்ள மலர்.
09. அம்பு.
14. தாமரை.
38. பழம்.
48. மலர்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.48 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அச்சுவினி.
09. அபசகுனம்.
16. ·சஞ்சலம்.
23. தசாவதாரம்.
33. வரவு.
36. கார்த்திகை.
43. இடது.

**மேலிருந்து கீழ்**

01. அக்கினி.
02. அச்சம்.
07. அம்மா.
10. பஞ்சாயத்து.
18. சந்ததி.
35. வரிசை.
40. கைதி.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.50
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.48 இன் பரிசுக்குரியவர்


ஏ. சர்மிளா,
இல.620, நாவலர் றோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.48 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. தி. சிவரூபன், இல.187, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி. கிளிநொச்சி.
02. கு. நந்தகோபன், கணேசபுரம், கிளிநொச்சி,
03. இ. டிலக்ஷன், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.
04. க. பத்மசிறி, 32,2ம் குறுக்குத்தெரு, வவுனியா.

பெயர்:-....................
முகவரி:-....................
....................
....................

# ஈராக் இனி அமைதி கொள்ளுமா?




சதாம் உலக மக்களாலும் அதிக உலக ஊடகங்களாலும் அதிக தரம் உச்சரிக்கப்பட்ட பெயர். ஒரு நிழல் ஹீரோவாக உலக மக்களிடையேயும் நிஜ ஹீரோவாக அரபு மக்களிடையேயும் அமெரிக்கப்படைகளால் கைது செய்யப் படும்வரை இருந்தவர்.

இதே நேரம் ஈராக் மீது அமெரிக்கப்படைகள் யுத்தப்பிரகடனம் செய்த பின்னர் அமெரிக்கப்படை களாலும் அமெரிக்க அரசாலும் அமெரிக்கச் சார்பு ஊடகங்களாலும் அதிக தடவை கொல்லப் பட்ட ஒரு மனிதன்.

இதுதான் சதாமிற்கு அவரின் கைதுக்கு முன்னராக இறுதிக்காலப் பகுதியில் அவருக்கு அமெரிக்கா ஏற்படுத்திய பெரும் புகழ்.

இவற்றைவிட சதாம் குறித்து ஊடகங்கள் அவிழ்த்துவிட்ட கிளைக் கதைகள் ஏராளம்.

சதாம்-ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்த பின்னர் பக்தாத் திலிருந்த ரஷ்ய தூதுவராலயத்தில் தஞ்சமடைந்திருந்தார் எனவும, அதைத் தொடர்ந்து சதாமிற்கும் அமெரிக்க புலனாய்வு அதிகாரிகளுக்குமிடை யில் நடைபெற்ற இரகசிய பேச்சு வார்த்தையொன்றையடுத்து அவர் ரஷ்ய நகர் ஒன்றிற்கு பத்திரமாக சென்றுவிட்டார் எனவும் இதன் பயனாகவே பக்தாத் அமெரிக்க படைகளிடம் விரைவாகவே வீழ்ச்சி கண்டதெனவும் கதைகள் உலாவின.

இதனைவிட அமெரிக்கா- நேரடியாகவே சதாம் சிரியாவுக்கு தப்பிச்சென்றுவிட்டதாகவும் அங்கு அவர் உல்லாசமான மாளிகையில் எல்லாவசதிகளுடனும் தன் மேனியை மெருகூட்டிக்கொண்டு இருக்கிறார் எனவும் இன்னுமொருகதை.

ஆனால் இவை யாவற்றையும் மீறி சதாம் அமெரிக்காவால் அதிக தடவை கொல்லப்பட்டதாக சதாமின் கதையின் முடிவுரைக்கான கிளைக் கதை ஏராளம்.

இவைதான் உலாவந்த அமெரிக்காவால் பிடிக்கமுடியாத நிலையிருந்த சதாம் எனும் மாயாவியின் கதையாக இருந்தது.


ஆனால் உண்மையில் என்ன நடந்தது.


சதாம் தனது சொந்த ஊரான திக்ரிட் நகரின் சில மைல்களுக்கு அப்பால் உள்ள அத்வான் என்ற கிராமத்திலிருந்து ஒரு பண்ணை வீட்டில் இரகசிய சுரங்க அறையொன்றில் வைத்து ஒரு கதாநாயகனுக்குரிய எந்த எதிர்ப்பலைகளும் இன்றி ஒரு பரதேசிகோலத்தில் நோயாளியைப் போன்று அவரின் வயதிற்கேயுரிய வயோதிப கோலத்தில் தடுமாற்றமான ஒரு நிலையில் கைது செய்யப்பட்டிருப்பதாக அமெரிக்கா புகைப்படங்களை வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் சதாமின் கைதிற்கு பின்னர் அரபு உலக மக்களிடையே பல்வேறு விதமான உணர்வலைகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

சதாமின் கைதை ஆரவாரத்துடன் வரவேற்கின்றவர்களும் சதாம் அரபு மக்களை ஏமாற்றுவிதமாக அவர் தாங்கள எதிர்பார்த்த ஒரு வீரனுக்குரிய எந்த விதமான சாதனைகளும இன்றி சரணடைந்துவிட்டார் என்கின்ற உணர்வலைகளையும வெளியிட்டவண்ணமுள்ளனர்.

ஏனென்றால் அரபுலக







மக்களிடையே மாத்திரம் அன்று அரபுலக அரசியல் தலைவர்களிடையேயும் சதாம் கதாநாயக பாத்திரம் பெற்றிருந்தார் என்பது உண்மை.

இந்த நிலையில் அமெரிக்கப் படை களால் ஈராக் முழுமையாக கைப்பற்றப்பட்டதன் பின்னர் சதாம் எங்கே? எங்கே என்ற கேள்வி போல, இப்போது சதாம் அமெரிக்கப்படை

**வேழினி**

களால் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார் என்ற கேள்வியே பெரிதும் வியாபித்து நிற்கிறது.

அத்தோடு, சதாமிற்கான நீதி விசாரணையை அமெரிக்கா மேற்கொள்வதா? ஈராக் மேற்கொள்வதா? என்ற சர்ச்சை ஒருபுறமும், சதாமிற்கான தண்டனை எத்தகையதாக இருக்கப் போகிறது என்பது இன்னொருபுறமும் கேள்விகள் எழுந்த வண்ணமுள்ளன.

ஆனால் இவையாவற்றையும் மீறி இனி ஈராக்கிலும் மத்திய கிழக்குப் பிரதேசத்திலும் என்ன நடக்கப்போகிறது. இதுவே இப்போது எழுந்து நிற்கும் கேள்வி.

இதற்கு அதாவது சதாமின் கைதுக்குப் பின்னரே அமெரிக்கா உண்மையில் பல கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியுள்ளது.

சதாமின் கைது அமெரிக்க அதிபர் புஷ்ஷிற்கும் பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயரிற்கும் சரிந்துசென்ற செல்வாக்கை தற்காலிகமாக நிமிர்த்தி இருக்கலாம்.

ஆனால் அவர்கள் நிச்சயமாக இனி அதிகம் சிரமப்படப்போகும் அரசியல்வாதிகளாகவும் இருக்கப்போகிறார்கள் என்பதே மெய்.

ஏனென்றால் ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுக்க பிரதான காரணமாக கூறிய இரசாயன ஆயுதங்கள் மற்றும் அணு ஆயுதங் கள் தொடர்பான உண் மைநிலை விரைவிலேயே வெளிப் பட்டுவிடும்.

இந்த நிலையில் சதாம் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரி வித்திருப்பதுபோல எந்த வித இரசாயன மற்றும் அணுஆயுதங் கள்ளயும் கொண்டிராவிட்டால் அமெ ரிக்காவும் அதன் நேசநாடுகளும் கூறப் போகும் பதில் என்ன? என்பதே இப் போதுள்ள பிரச்சினை.



அவ்வாறு இரசாயன மற்றும் அணுஆயுதங்கள் எவையும் இல்லையென தெளிவுபடுத்துமாயின் சதாம் இழைத்த குற்றங்களைவிட புஷ்சும், பிளேயரும் இழைத்த குற்றங்களே அதிகமாக இருக்கும்.

சதாம் அவ்வாறு நீதிவிசாரணையை எதிர்நோக்கப்படுகிறதோ அதே நீதி விசாரணையை இவர்களும் சந்தித்தாகவேண்டும். ஆனால் இவர்கள் இதனை சந்திப்பார்களா?

அடுத்து சதாமின் கைதின் பின்னா ஈராக்கில் அமெரிக்கப்படைகளின் இருப்பு அவசியம்தானா? என்ற கேள்வி மிகவேகமாகவே பற்றத் தொடங்கிவிட்டது. இந்த நிலையில் அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் ஈராக்கிலிருந்து படைகளை வாபஸ் வாங்கிக்கொள்வார்களா?

இந்த நிலையில ஈராக்கில் தொடரும் தாக்குதல்கள் எப்படி தணிய வைக்கப்படப்போகின்றன என்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் அளிக்க வேண்டியிருக்கும்.

இந்த வினாக்களோடு நாம் மீண்டும் ஈராக்யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட போது அமெரிக்க படைகள் ஈராக்கில் தரையிறங்கி நகரங்களை கைப்பற்றிய போது அமெரிக்க படைச்சிப்பாய்களால் அப்போது அமெரிக்கா கூறியதுபோல் தற்செயலாக நடந்துவிட்ட இரண்டு சம்பவங்களை நினைவில் கொள்ள வேண்டும்.

அதாவது அமெரிக்க சிப்பாயினால் ஈராக் மண்ணில் ஏற்றப்பட்ட அமெரிக்க கொடியும், அமெரிக்க சிப்பாய்களால் அகற்றப்பட்ட சதாமின் சிலையின் முகத்தை அமெரிக்க தேசியக்கொடியால் போர்த்தியதும் தற்செயலான சம்பவங்கள்தான் என்பதை நிரூபித்தாக வேண்டும்.

அதற்கு அமெரிக்கா ஈராக்கிலிருந்து படைகளை வாபஸ் பெற்றாகவேண்டும்.

ஆனால் இது நடக்குமா?

இதற்கு அமெரிக்கா தெளிவான பதிலை அளிக்கத்தவறும்பட்சத்தில் அமெரிக்கப்படைகளை ஈராக்கிய மக்கள் மட்டுமன்றி அரபுதேச மக்கள் யாவரும் ஆக்கிரமிப்பு சக்திதான் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்வார்கள். ஈராக் மக்கள் மத்தியில் தாங்கள் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கிறோம் என்ற எண்ணம் இருக்கும்வரை அமெரிக்கா ஈராக்கை வென்றுவிட்டதாக மார்தட்டிக் கொள்ளவும்முடியாது. அமெரிக்கப் படைகள் சந்திக்கப்போகும் இழப்புக்களை தவிர்த்துக்கொள்ளவும் முடியாது.

இந்த நிலையில் சதாமின் கைதின் பின்னரும் நடந்த தற்கொலை தாக்குதல் அமெரிக்காவிற்கு பெரும் தலையிடியை ஏற்படுத்தவே செய்துள்ளது. அது தம்மைத் தாக்குவது யார் என்பதை இனங்காண்பதே யாகும்.

நிச்சயம் அமெரிக்கப்படைகள் மீது தொடர்ந்தும் தாக்குதல்கள் தொடருமானால் அது யார் என்பதை அமெரிக்கா இலகுவாகவே இனங்கண்டு கொள்ளலாம்.

அது சுதந்திரத்தை விரும்பும் மக்கள் என்பதை. சுதந்திரத்தை விரும்பும் மக்களுக்கு எதிராக அமெரிக்கா ஆக்கிரமிப்புப்போரை தொடருமானால் மத்தியகிழக்கப் பிரதேசம் இனி ஒரு போதும் அமைதிகொள்ளாது.

அமெரிக்காவும் வியட்நாம் கால துயரச்செய்திகளை அமெரிக்காவுக்கு காவிச்செல்வதை தவிர்க்க முடியாது.

ஒரு போதும் போராடாமலே இருப்பதை விட, போராடித் தோற்பதே மேலானது. – ஆர்த்தர் க்ளவ்

# சங்க இலக்கியம் காட்டிய தமிழரின் வீரம்

“மயிர்நீப்பின் வாழாக் கவரிமான்
அன்னார் உயிர்
உயிர் நீப்பின் மானம் வரின்”

என்னும் குறளுக்கு தயிர் கடைந்தால் தலைகாட்டும் வெண்னை போன்று தமிழ்ச்சங்கக் காலத்து வீரம் செறிந்த தமிழரின் வாழ்வு உண்மைச் சான்றாக அமைகின்றது. சங்ககாலம் என்பதே இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட காலம் இன்றுள்ள உலக மொழிகள் பலவற்றில் இலக் கியம் என்பதே எட்டிப்பாராது இருக் கலாம். அப்படியான இக்கால சூழ்நிலையில்த்தான் அகம் என்றும் புறம் என்றும் வாழ்க் கையினை அழகாக வகுத் துக் கொண்டு எட்டுத்தொகை பத்துப் பாட்டு என்ற இலக்கியங்கள் எழுந்தன. எட்டுத்தொகை நூல் களுள் பதிற்றுப் பத்து, பரி பாடல், புறநாநூறு நூல்கள் புறம் கூறுவன. பத்துப் பாட்டு நூல்களுள் குறவஞ்சிப் பாட்டு. முல்லைப்பாட்டு. பட்டினப்பாலை போன்றன தவிர்ந்த ஏனைய ஏழு நூல் களும் புறம் கூறுவன. இவற்றிலே சங்ககால மானத்தமிழனின் வீர வாழ்வு தெளி வாகப் புலப்படுகின்றது.



ஆடவர் மட்டுமன்றி பெண் களீ கூட அஞ்சா நெஞ்சுடன் வஞ்சமர் செய்து துணிவுடன் வாழ்ந்த காலம் அது விரைந்துவாரீர் வீரர்கள் என முரசும் இரைகின்றது. இதனை செவிமடுத்த “காதலி” என்பாலின் கணவன் சிங்கம் ஏறென நிமிர்ந்து நோக்கி எடுத்தான். வாளை, “களத்தில் நான் சாகாமல் இருந்தால் நம் சந்திப்பு மீண்டும் உண்டு. இல்லையேல் மனம் நோகாமல் முத்தங்கள் என் உடலுக்கு ஈர்ந்து வீரத்தை வாழ்த்திடுக” என்று கூறி விட்டு போர்க்களம் விரைகின்றான். அப்போரிலே வீர மரணம் அடை கின்றான். பகை வெல்லச்சென்ற கணவனது வைர நெஞ்சத்தை நினைத் துப் பெருமை கொள்கிறான். அதற்கு முதல் முதல் நாள் போரில் தன் சொந்த அண்ண னையே பறி கொடுத்தாள். ஆனாலும் அவள் மனம் தளரவில்லை. குறை வில்லாத தோற்றத்துடன் குன்றம் போல் வளர்ந்திருந்த தன் புதல்வனை உச்சி மோர்ந்து திலகமிட்டு குடும்பி தனை கோதி விட்டு உடை வாளைத் கையில் தந்து “சென்றுவா மகனே” என்று அனுப்பிவைத்தாள். நெடு நேரம்போல் பகைப் படை வீழ்கின்ற தென்று அடுக் கடுக்காய் வந்த செய்தி களை கேட்டுக் களம் புகுந் தான். அந்த வீரத்தாய் அங்கு அவள் மைந்தன் மார் பில் அம்பு தாங்கி வீழ்ந்து கிடந்தான். என்னுயிரே! என் மகனே! நீ வாழ்க என வாழ்த்தினாள் அவ்வீரத் தாய். இவ்வாறு வீரம் செறிந்த மறத்தமிழர் வாழ்வை புறநாநூற்றுப் பாடல் கூறுகின்றது.

பூதப்பாண்டியனின் புகழைக் கேட்டு பொறாமை கொண்டு போர் முரசு ஒலிக்கலானார் சேரசோழ மன்னர் இருவர். •இருமன்னர் எதிர்ப்பதாலோ அஞ்சவில்லை. பூத பாண்டியன் பெரும் படைகள் எதிரியிடம் உண்டு என்று தடுத்ததேவியிடம் “பொன்னை, பொருளை உன்னை இப்பூமியை காக்க மற்றார் முன் சாய்ந்திடவோ” என்று வீர வார்த்தை கூறிவிட்டு பகைவர் புறமுதுகிட்டு புறத்தோட களம் விரைந் தான். நேற்று ஓடிவிட்டார் பகைவர் கடும் கோபங்களுக்குள்ளாகிய பூத பாண்டியன் தேவியின் மடியில் படுத்த வாறே உயிர் இழந்து வீரசுவர்க்கம் அடைகின்றான். “இனி நாளில்லை அவர் இல்லா உலகில். எனது தரையின் மீது குதித்து உடன் கட்டை ஏறி வீரகாவியமானால் தேவி இப்படிப் பட்ட வீரத்துடன் தமிழர் பரம்பரை சங்க காலத்தில் வாழ்ந்ததைச் சங்க இலக் கியங்கள் சுட்டி நிற்கின்றன.

> சங்க இலக்கியங்களில் காணப் பட்ட தமிழரின் வீரம் எம் தமிழீழத்திலும் எம் மக்களி டையே காணப்பட்டது. அதாவது சங்க இலக்கியங்களின் போர்ப்பறை கேட்ட போது மனைவியர் தமது கணவனை போருக்கு அனுப்பியதைப் போன்று தமிழீழத்திலும் வன்னியில் போர்ப்பறை கேட்ட போது எல்லைப் படையாக சிறப்பு எல்லைப் படையாகமக்கள் திரண்டனர்.

நெடுஞ்செழியப் பாண்டியனின் வீரம் சொல்லி முத்துப் பாட்டாய் திகழ் கின்றது. நெடுநெல்வாடை நெடுஞ்செழி யன் போர்க்களத்திலேயே வீரச்சமர் ஆடிக்கொள்கின்றான். நீண்ட நாள் அவன் பிரிவால் ஏங்குகிறாள். கோப் பெருந்தேவி. மழைத்துளிகள் விழு கின்ற நள்ளிரவில் வீரர்கள் பலர் காய முற்று படுத்திருக்கும் பகுதியெல்லாம் பார்த்துச் சென்றான். மீண்டும் களம் விரைகின்றான். எதிர்ப்படைகளின் தலை களை உருண்டோடச் செய்கின்றான் காதலனைத் தேடி பேரரசி கடுகாய்க் குதிக்கின்றாள். அவனோ கடமையை ஆற்றங்கால் கடுக்கச் சுற்றுகிறான்.

காவேரி தந்த தமிழகத்துப் புதுமணலில் களம் அமைத்து சேர சோழபாண்டிய மன்னர் கோபுரகலத் தில் யார்கொடிதான் பறப்பதென்று போர் தொடுத்து கொண்டிருந்த காலமது. அந் நாளில் ஒரு நாள் களத்தில் தாய் நாடு காக்கச்சென்று இறந்தார், தந்தை என்பதைக் கேட்ட தணலில் வீழ்மெழு கானாள், தமிழகத்து கிளியொருத்தி “நாடு மீட்க்காமல் வீடு திரும்பேன் என்று கூறி அவன் கண வனும் களத்திலே வெஞ்ச மரமாடி காவிய மாகிவிட் டான். தன் புதல்வனான சிறுவனையே “சென்று வா மகனே செருமுனை நோக்கி” என்று அனுப்புகிறாளே அவ் வீரத்தாய். இவ்வாறு மானம் இன்றேல் உயிர் வாழாது மடிகின்றமை சிறந்தது என்பதற்கிணங்க மான உணர் வுடன் வாழ்ந்தமை சங்க இலக்கியம் சுட்டி நிற்கின்றது.

சங்ககாலத்திலே வீரத்துக்கு இலக்கணமாகத் திகழ்ந்த இரும் பொறை எனத் தமிழ் வரலாற்றில் இடம் பெற்ற கருவூர்சேரனும் ஒருவன் தகடுரான் அதியமானால் விரட் டப்பட்ட திருமுடிக் காடி மன்னன் இவளிடம் உதவிகோரி நிற்கின்றான். இரும் பொறையின் பாடகர் தாகடுர் மீது பாய்கின்றான். ஆனாலும் அதியமான் சழைத்தவனல்ல, இறுதிவரை போராடுகின்றான். இந்த நாள் களில் ஒரு நாள் அவன் மனைவிக்கு குழந்தைப் பிறப்பதை அறிகின்றான். இப்படி இருந்தும் தன்கடமை தவற வில்லை. போரினை நடத்திக்கொண்டே போர் கோலத்துடன் தன்மகவைக் காண விரைகிறான். இதனை ஔவையார் பாடும் போது “கையதுவேலே! காலமது புனைகழல்!

மெய்ப்பது வியரே! மிடற்றது பசும் பொன்”

என வர்ணிக்கின்றார். இதி லிருந்து அவனின் வீரத்தன்மை வெளிப் படுவதை காணலாம். இறுதியில் இரு படை அணிகளும் கடுமையாக மோத இரும் பொறையின் படையணிகள் ஆவேசமாகப் பாய்கின்றன. அதனை தாக்குப் பிடிக்க அதியமான் நெடு மானால் முடியவில்லை அந்தநேரத்தில் கூட அவனது வீரம் பகைவனிடம் பணிய மறுக்கிறது. தகடுர் தலை நகரை தாக்க முடியாமல் போனா லும் போகட்டும் தன் மானம் காக்க தமிழனாக நின்று அதிய மான் களத்தில் உயிர்விடுகின் றார். இதனை புறநாநூற்றுப் பாடல்கள் செம்மையாக எடுத்து விளக்குகின்றன.

இவ்வாறு சங்க இலக்கி யங்களில் காணப்பட்ட தமிழரின் வீரம் எம் தமிழீழத்திலும் எம் மக்களிடையே காணப்பட்டது. அதாவது சங்க இலக்கியங்களின் போர்ப்பறை கேட்டபோது மனை வியர் தமது கணவனை போருக்கு அனுப்பியதைப் போன்று தமிழீழத்திலும் வன்னியில்போர்ப்பறை கேட்டபோது எல்லைப்படையாக சிறப்பு எல்லைப்படை யாகமக்கள் திரண்டனர்.

சங்க இலக்கியங்களில் மகனைப் போருக்கு சென்று வாமகனே என்று வழியனுப்பிய தாய்மார் மாதிரி எம் மக்களிடையேயும் வெற்றித்திலகமிட்ட எத்தனையோ மக்கள் உள்ளனர். இவ் வாறு எதிரிப்படை கண்டால் மண்ண திர விண்ணதிர புயல்க் காற்றால் பகை எழுந்தவர்களே அம்மாவீரர்கள்.

மானமும் வீரமும் ஒருவனைத்
தன் மானம் உள்ளவனாக்குகின்றது.

**பொ.பரன்**

## பொறுக்கி எடுத்த பூக்கள்

### சில கேள்விகளும் பதில்களும்

☐ குரங்குகளுக்கு கவலையே இல்லையா?
☐ குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்று சார்ல்ஸ் டாவின் கூறினாரே! அதுதான் அவைகளுக்கு ஒரே பெருங்கவலை.

☐ அறிவை வைத்துக்கொண்டு மற்றவனின் அனுதாபத்தில் வாழ்பவன் எப்படிப் பட்டவன்?
☐ தங்கக் கோப்பையை வைத்துக்கொண்டு அதில் பிச்சை எடுப்பவன்.

☐ தேர்தல் என்பது என்ன?
☐ வாக்குறுதிகளை விதைத்து வாக்குச் சீட்டுக்களை அறுவடை செய்யும் ஒரு வகை விவசாயம்.

மகுடியார்.

### சில கவிதை வரிகள்

**சமாதானம் :-**
கள்ளப் பூனைகளின்
காவலிலே
வெள்ளைப் புறாக்கள்
கூட்டம் நடத்துகின்றன.

**கலவை:-**
அரசியல் - மதம்
என்ற இரு
அமுதங்களின்
கலவை
ஒரு விஷமாகலாம்

சுமதா

**கைதியின் பிள்ளை**
கூண்டுக் கிளிகளின்
காதலில்பிறந்த
கூண்டுக் கிளிக்கு
எப்படி...எதற்கு
வந்தன சிறகுகள்.

கல்யாணிஜி

### ஒரு குட்டிக் கதை

அவன்..?

பிரசங்கியார் உபந்நியாசம் செய்து கொண்டிருந்தார். மக்கள் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.
அவர் சொன்னார்-
ஒரு தரம் உண்பவன் யோகி.
இரு தரம் உண்பவன் போகி.
மூன்று தரம் உண்பவன் ரோகி...
கூட்டத்தில் இருந்து ஒரு குரல் எழுந்தது.
ஒரு வேளையும் உண்ண வழியில்லாதவன் யார்?
பிரசங்கியார் மௌனமானார்.
கேட்டவன் ஒரு பிச்சைக்காரன்.

மௌனா

### கண்ணதாசனின் ஒரு பாடல்

மாடுமனை தேடுவதும் வல்லநிலை கூடுவதும்
வாலிபம் இருக்கும் வரைதான்
வாசமொடு பாசமொடு வந்துறவு நாடுவதும்
வரவுகள் நிலைக்கும் வரைதான்.
கோடுவிழும் மேனிதனில் கோடிநரை தோன்றியபின்
கூடுவதும் என்ன சுகமோ?
கூடும் விற கூடு வெறுங்கூடு என வீழ்ந்தபின்னர்
கோவணமும் கூட வருமோ?

### பாரதியும் - ஷெல்லியும்

பாரதிதாசன் பாரதிக்கு தாசனாக இருந்தார். பாரதியோ ஆங்கிலக் கவி ஷெல்லிக்கு தாசனாக இருந்தார்.
அவரது புனை பெயர்களில் ஷெல்லிதாசனும் ஒன்று.
ஷெல்லியின் பெயரால் ஒரு சங்கமும் அமைத்திருந்தார்.
ஷெல்லி வானம்பாடி (SKYLARK) என்ற கவிதையை எழுதியது போன்று, பாரதியும் தனது குயில் பாட்டு என்ற நெடுங்கவிதையை எழுதினார்.

பொறுக்கி

# சிரியுங்க... சிரியுங்க... சிரிப்பின் இலக்கணம்



அடக்கியொடுக்கப்பட்ட உணர்ச்சிகள் சிரிப்பின் மூலம் விடுவிக்கப்படுகின்றன என்று ப்ராய்டு வற்புறுத்தினார். கற்பனா ஆபத்தால் உருவாகிய பயம் நீங்கியவுடன் சிரிப்புத் தோன்றுவது வழக்கம். 'தேவையற்ற அல்லது மேலதிக' உணர்வு சிரிப்பினூடாக வெளியேற்றப் படுகிறது.

'பல்வேறு முறைகளில் மனிதர் தமது மதிநுட்பத்தை புலப் படுத்தியுள்ளனர். ஆனால் எல் லோரும் ஒரே மாதிரியாகத்தான் எப் பொழுதும் சிரித்து வந்துள்ளனர்' என சாமுவேல் ஜான்சன் கூறினார்.

இது உண்மையாக இருக் கக்கூடும். ஆனால் நகைப்பின் ஊற்று - எதை எதை ஒட்டி சிரிப்பு எழுகின் றது என்பது - பண்பாட்டிற்குப் பண் பாடு வேறுபடுவது கண்கூடு.

'நண்பகலில் இருள்' என்ற புகழ் பெற்ற நாவலை எழுதிய ஆர்த்தர் கேஸ்லர் இப்பொழுது நகைப்பின் வரைவிலக்கணத்தை வகுக்க முனைந்துள்ளார். நாவல் களைத் தவிர, ஐரோப்பிய அரசியல் பற்றியும், சமுதாயம், விஞ்ஞானம், மறைஞானம், உளவியல் பற்றியும் ஏராளமான கட்டுரைகளையும், நூல் களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

உடலியல் ரீதியாக இயல்பான நகைப்பை வரையறை செய்வதனால், முகத்தின் 15 தசை நார்களின் ஒருங்கிணைந்த குறுக்கம் எனலாம். இத்தகைய தன்னியல்புச் செய்கையை உண்டுபண்ணும் ஒரு வகைத் தூண்டுகையே நகைச்சுவை எனப்படுகிறது.

இயல்பான நகைப்பிற்கும் நாகரிகமுற்ற மனிதனின் சம்பிரதாயச் சிரிப்பிற்குமிடையே கேஸ்லர் வேறு பாடு காண்கிறார். முன்னையதைப் பற்றியே அவர் ஆராய்கிறார்.

நகைப்பை ஒரு தன்னியல் புச்செய்கையாக நோக்கி இரு முரணுண்மைகள் புலப்படுகின்றன என்கிறார் அவர். கூசச்செய்யும் ஒளி யில் மணி சுருங்குகிறது. இத்தகைய எதிர்செயலின் பயன்பாடு தெட்டத் தெளிவு. அதன் உயிரியல் தன் மையை மேலும் அளிக்கவேண்டிய தில்லை. ஆனால் உயிர்வாழ்வதற் கான போட்டியில் சிரிப்பிற்கு இத்த கைய பயன்பாடு இருப்பதாகத் தெரிய வில்லை. கெடுபிடிகளிலிருந்து ஓய்வு அல்லது விடுவிப்பைத் தருகின் றது என்பதைத் தவிர சிரிப்பு என்ற தன்னியல்புச் செய்கைக்கு வேறு உயிரியல் பயன்பாடு கிடையாது; அதை ஒரு ஆடம்பர தன்னியல்பு செய்கை எனக்கேஸ்லர் வர்ணிக் கின்றார்.

நகைச்சுவையைப் பொறுத் தவரை தூண்டுகையினதும் எதிர் செயலினதும் தன்மைகளுக் கிடையே உள்ள வேறுபாடு இரண்டா வது முரணுண்மை என்கிறார் கேஸ்லர். முழங்காலில் தட்டியவுடன் இயல்பாகவே - யோசனை எதுவு மின்றியே - கால் மேல் நோக்கி உதைகின்றது. மன நிகழ்வுகள் எதுவுமின்றி இங்கு தூண்டுகையும் எதிர்ச்செயலும் உடல்ரீதியாக நிகழ்கின்றன. ஆனால் நகைச் சுவைப் படைப் பொன்றை வாசிப்பது போன்ற சிக்கல் மிக்க மனஞ்சார்ந்த செயற்பாடு, முகத்தின் தசைநார்கள் குறுக்கம் என்ற தன்னியல்புச் செய்கைக்கு வழிகோல்வது பிளேட்டோ காலம் தொடக்கம் தத்துவஞானி களுக்கு புரியாத புதிராக இருந்து வந்துள்ளது.

சொற்பொழிவாற்றும் போது தான் கூறியவற்றை கேட்போர் ஒப்புக் கொண்டனரா இல்லையா என்பதை உடனடியாக ஒரு விரிவுரையாளர் அறிவதற்கு திட்டவட்டமான சோதனை முறை எதுவுமில்லை. ஆனால் அவர் ஒரு பகிடியைக் கூறும்போது அது எழுப்பும் - அல்லது எழுப்பத்தவறும் - சிரிப்பொலி ஓர் உரைகல்லாக பயன்படும். நகைச்சுவையில் மட்டுமே சிக்கல் மிக்க ஒரு தூண்டுகை அச்சு வார்ப்பான, முன்கூட்டியே கூறவல்ல எதிர்ச்செயலை உண்டுபண்ணு கிறது. கதிர் இயக்கச் செயற்பாட்டை கண்டு பிடிப்பதற்கு கைகர் கருவி பயன்படுவது போன்று, சிரிப்பென்ற எதிர்ச் செயலிலிருந்து நகைச்சுவை என்ற எளிதில் அகப்படாத தன்மை யின் இருப்பை அல்லது இல்லா மையை உணர்ந்துகொள்ளலாம். வேறு எந்த வகைக்கலையிலும் இது சாத்தியப்படாது எனக்கூறும் கேஸ்லர், நகைச்சுவையை ஆராய்வதன் மூலம் பொதுப்படையாகப் படைப்பாற்றலின் தன்மையை அறிந்துகொள்ளலாம் என நம்புகிறார்.

சிரிப்பை உண்டாக்கும் அனுபவங்கள் பல்வகைப்பட்டன. அங்க சேஷ்டைகள், குறும்புச் செயல்கள் தொடக்கம் பல்வேறுபட்ட மனஞ்சார்ந்த 'கீச்சமூச் சுக்கள்' வரை. இந்தப் பல்வேறுபட்ட தன்மை யிடையே ஒருவகை ஒருமையைக் காண் கிறார். கேஸ்லர். இந்தஒருமை நகைச் சுவையின் 'இலக் கணம்' அல்லது 'தர்க்க விய'லைப் பிரதிபலிப் பதாகக் கொள்கிறார்.

அவ்வாறாயின் சிரிப்பின் 'இலக் கணம்' என்ன?

இருவேறு முரண்பட்ட தளங்களில் ஒரு நிலைமை காணப் படுதல். இத்தளங்களுக்கிடையே உள்ள மோதலே நகைச்சுவையை உண்டுபண்ணுகிறது எனக் கேஸ்லர் கருதுகிறார். எடுத்துக்காட்டாக அவர் தரும் உதாரணங்களில் ஒன்றைத்தரு கின்றேன். பிரஞ்சு மன்னர் 15ஆம் லூயியின் அரசவையைச்சேர்ந்த இளவரசர் ஒருவர் எதிர்பாராத வண்ணம் வீடு திரும்புகிறார். அவர் அங்கு கண்டகாட்சி; மனைவி ஓர் ஆயருடன் சல்லாபித்துக்கொண் டிருக்கிறாள். ஒரு கணம் தயங்கிய இளவரசன், தன்னை நிதானப்படுத்திக் கொண்டு அமைதியாக ஜன்னல் ஓரம் சென்று வெளியே நோக்கியவாறு தெருவில் நடமாடிக்கொண்டிருந்த மக்களை ஆசீர்வதிக்கத்தொடங் கினார். 'என்ன செய்கிறீர்கள்?' எனப் புலம்பிய மனைவிக்கு இளவரசன் அளித்த பதில், 'ஆயர் எனது கடமையைச் செய்கிறார். ஆகவே அவரது பணிகளை நான் ஆற்று கின்றேன்' இந்நிலைமையைப் பற்றி கேஸ்லர் கூறுகிறார். இளவரசனின் நடத்தை எதிர்பாராதது. ஆனால் அதே வேளையில் முற்றிலும் தர்க்கவியல் பாற்பட்டது. (இத்தகைய நிலை மைக்கு அத்தக்கவியல் வழக்காமாக பயன்படுத்தப்படாதபோதும்) மனித நாகரிகம் தோன்றிய காலந்தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வந்த தொழில் வேறுபாட்டு முறையே அந்தத் தர்க்கவியல். ஆனால் இளவரசனின் நடத்தை வேறுவிதி முறையால் - பால் ஒழுக்க விதிகளினால் - கட்டுப்படுத்தப்படும் என எதிர்பார்க் கப்படுகிறது. இந்த இருவேறு - ஒன்று ஒன்றைத் தவிர்க்கும் - விதிமுறை களின் திமிர் மோதலே நகைச் சுவையை உண்டு பண்ணுகிறது.

கட்டுப்பாடான சிந்தனை தனித்து அல்லது பிரித்து நோக்கும் தடத்திலேயே செல்கிறது. ஆனால் நகைச்சுவை போன்ற படைப்பாற்றல் சார்ந்த மனச்செயற்பாடுகளிலே சிந்தனை இணைத்து நோக்கும் பாங்கில் அமைகிறது. மேலே தரப்பட்ட உதாரணத்திலே, மனம் ஒரு தளத்திலிருந்து இன்னொரு தளத்திற்குத் திடீரெனத் தாவுகின்றது. கதையின் ஆரம்பம் கிளறும் குரோத, காம உணர்வுகள் இளவரசன் தெருமக்களை ஆசீர்வதிக்கும் புதிய சந்தர்ப்பத்துடன் பொருத்தப்பட முடியாததால், ஒட்டை ரயரிலிருந்து காற்று வெளிப்படுவது போல் சிரிப்பொலியாக பொங்கி வழிகின்றன.

இருவேறு முரண்பட்ட தளங்களின் மோதலே நகைச் சுவையை உண்டு பண்ணுகிறது என்ற வாய்ப்பாடு எல்லாவகை நகைச்சுவைக்கும் பொருந்தும் பொது உண்மை எனக் கேஸ்லர் கூறுகிறார். இதுதான் நகைச்சுவையின் அறிவு சார்ந்த அமைப்பு என்கிறார். அப்படி யாயின் இவ்வமைப்பிற்கு உயிரூட்டி இயங்கவைக்கும் உணர்ச்சிகள் என்ன? பல்வகைப்பட்ட நகைச்சுவை யிலே, பல்வேறு உணர்ச்சிகள் - ஏன் முரண்பட்ட உணர்ச்சிகள் கூட கலந்திருக்கலாம். எவ்வாறாகவிருந்த போதிலும், அதன் அடிப்படைக் கூறு வலிதாக்கு உணர்வு அல்லது அச்ச உணர்வு. உளவியலாளர் இவற்றை இரட்டை உணர்வுகள் எனக் கருது கின்றனர். மிக நுட்பமான நகைச் சுவையில் இவற்றை இலகுவில் கண்டு பிடிக்க முடியாது. நன்கு சமைக்கப்பட்ட உணவில் உப்பை கண்டுபிக்க முடியாது போல் (அது இன்றேல் உணவு உப்பு சப்பற்றிருக்கும்). ஆனால் பிள்ளை களையும் நாகரிகமுறாத மக்களை யும் கவரும் பகிடிகளில், கொடு மையையும் பழுகுத்தனம் நிறைந்த தன்னகம்பாவத்தையும் காணலாம்.

அடக்கியொடுக்கப்பட்ட உணர்ச்சிகள் சிரிப்பின் மூலம் விடுவிக்கப்படுகின்றன என்று ப்ராய்டு வற்புறுத்தினார். கற்பனா ஆபத்தால் உருவாகிய பயம் நீங்கியவுடன் சிரிப்புத்தோன்றுவது வழக்கம். 'தேவையற்ற அல்லது மேலதிக' உணர்வு சிரிப்பினூடாக வெளி யேற்றப்படுகிறது.



நகைச்சுவையைப் பற்றிய பழைய கோட்பாடுகள் அதனை தனித்த இயல்நிகழ்வாய் நோக்கின எனச் சுட்டிக்காட்டும் கேஸ்லர், அழுகைக்கும் சிரிப்பிற்கும் விஞ் ஞானக் கண்டுபிடிப்பிற்கும் நகைச் சுவைப் புத்தாக்க புனைவிற்கும் கலையின் அகத்தூண்டுகைக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு எனக் கருதுகிறார். கலை, விஞ் ஞானம், நகைச்சுவை ஆகிய மூன்று படைப்பாற்றல் சார்ந்த துறைகளுக்கு மிடையே திட்டவட்டமான எல்லை களை வரையறுப்பது முடியாத காரியம். அவற்றை இடையறாத தொடராக நோக்குதலே சாலும் என்கிறார்.

இதனை விளக்குகையில் அவர் மேலும் கூறுவதாவது; முன்பு ஒருவரும் காணாத ஒப்புவமையை உய்த்துணர்வதிலேயே விஞ்ஞானக் கண்டுபிடிப்பு தங்கியுள்ளது. எடுத்துக் காட்டாக, வில்லியம்ஹார்வே மீனின் இருதயத்தை இறைப்பு இயந்திரத் திற்கு ஒப்பிட்டார். கேலிச் சித்திர ஓவியன் வெள்ளரிக்காய் போன்ற மூக்கை வரையும்போது இதே அடிப் படைதான். நகைச்சுவையின் இலக் கணமாகக் கூறப்பட்ட இணைத்து நோக்கும் சிந்தனை முறை கலைக் கும் பொருந்தும். விஞ்ஞானக் கண்டு பிடிப்பிற்கும் பொருந்தும். வெவ்வேறு நடத்தை விதிமுறைகளின் மோதல் நகைச்சுவையாக அல்லது துன்பிய லாக அல்லது புதிய உளவியல் நுண்ணறிவாகப் பரிணமிக்கலாம். மனதிற்கும் சடத்திற்குமிடையே உள்ள வேறுபாடு இலக்கியத்தின் கருப்பொருளாகவும் கையாளப் படலாம் (மனிதன் தெய்வங்களால் அல்லது இனக் கீற்றுகளால் (குரோமோசோம்ஸ்) ஆட்டப்படும் சூத்திரப்பாவை) அல்லது குறும்புக் காரர்களின் 'கைவரிசை'க்கு வசப்பட லாம் (கௌரவம், மகிமையும் மிக்க 'பெரிய' மனிதர் ஒருவர் குதிரையில் அமரவிருக்கும்வேளை குறும்புக் காரன்குதிரையை நகர்த்துகிறான்; 'பெரிய' மனிதரும் ஈர்ப்புச் சக்தியின் நியதிக்குட்பட்ட சடமாகிறார்).

எல்லாத்துறைகளைப் பொறுத்தவரையிலும், படைப்பாற்றல் சார்ந்த அறிவு பூர்வமான, அறிவுணர் வற்ற செயற்பாங்குகளும் இணைப்பை நாடும் செயற்பாடுகளாகவே இக்கால உளவியலால் கருதப்படுகின்றன. முன்னர் தனி வேறாகவிருந்த அனு பவ அறிவுத்துறைகள் படைப்பாற் றலால் இணைக்கப்படுகின்றன.

இணைப்பாக்கமே விஞ் ஞானியின் நோக்கம். பழக்கமான வற்றையும் நிலைபேறுடையவற்றை யும் அடுத்தடுத்து வைக்க கலைஞன் விழைகிறான். மோதலை விளைவிப் பதே நகைச்சுவையாளனின் நோக்கம். செயல் நோக்கங்கள் வேறுபடுவதால் ஒவ்வொருவகைப் படைப்பாற்றல் எழுப்பும் உணர்ச்சிகளும் வேறுபடு கின்றன. ஆய்ந்தறியும் அவாவைக் கண்டுபிடிப்புத் திருப்திப்படுத்துகிறது. உணர்வுத் தாய்மைக்கு கலை வழிகோலுகிறது. நகைச்சுவை மனக்காழ்ப்புகளைச் கிளறி அவற் றினால் தீங்கு ஏதும் ஏற்படாதவாறு அவற்றை வெளிப்போக்குகின்றது.

விஞ்ஞானத்தின் எல்லை எது, கலையின் எல்லை எது என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. படைப்பாற்றல் மிக்கவன் இரு துறை களிலும் குடியுரிமை வகிக்கின்றான் எனக் கேஸ்லர் வற்புறுத்துகிறார். தொடர்ச்சியான ஒரு பட்டையில் அழுகையும் சிரிப்பும் இருதுருவ முனைகள்; ஞானியும் கோமாளியும் சகோதரர் என்பதே கேஸ்லரின் கட்சி.

மேற்கத்தியநாடுகளிலே நகைச்சுவையின் இன்றைய நிலை பற்றிக் குறிப்பிடுமிடத்து, இருமுக் கியகாரணிகள் அதனைப் பாதிக் கின்றன எனக் கூறுகிறார். பொதுசன தொடர்புச் சாதனங்கள், அதிவேகமாக மாற்றமடைந்துவரும் பண்பாட்டிலே ஏற்பட்டுள்ள விழுமியங்கள் சார்ந்த நெருக்கடி முன்னையது வணிக அடிப்படையில் இயந்திரபாங்கான நகைச்சுவை உற்பத்திக்கு ஏது வாகின்றது; பின்னையது 'கறுப்பு' அல்லது 'அபத்த' நகைச்சுவைக்கு வழிகோலுகிறது.

**ஏ.ஜே.கனகரட்னா**

கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கம் கிராமியவங்கி
வாடிக்கையாளர்களுக்கான

# அறிவித்தல்

எமது கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்க கிராமியவங்கி 2002-2003ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வுகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதனால், இவ்வங்கியில் கணக்குவைத்திருக்கின்ற சகல வாடிக்கையாளர்களும் இக்கிராமியவங்கியில் உள்ள தங்கள் கணக்கு மீதிகளுடன் தங்கள் கைவசமுள்ள புத்தகங்களின் மீதிகளை 20.12.2003-20.01.2004ஆம் திகதிக்குள் சங்க கடமை நேரத்தில் சமுகமளித்து உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் 1990ஆம் ஆண்டிற்கு முற்பட்டதும் ரூபா-500க்குட்பட்ட மீதியைக்கொண்டதுமான நடைமுறைப்படுத்தாத சகல கணக்குகளும் மீளாய்வு செய்யப்படாவிடின் சங்கநிதியாக மாற்றப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.


(சி-7119) பொதுமுகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், கரைதுறைப்பற்று.

"வடமாகாணத்தின் மாபெரும் கணனிக் காட்சியறை"

## நொதேன் ரெக்னோலஜி பிறைவேட் லிமிட்டட்

NORTHERN TECHNOLOGY(PVT)LTD





- சகலவகையான கணனிகளையும் நீங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
- இலங்கையில் எப்பிரதேசத்திலும் இல்லாதவாறு இரண்டு வருட உத்தரவாதம்
- இலகு தவணைக்கட்டன முறை

யாழ்ப்பாணத்தில்:-
இல:20,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021-222 5653

வவுனியாவில்:-
இல:-52,2ம் குறுக்குத்தெரு,
வவுனியா.
T.P:-024-2221649

மன்னாரில்:-
இல:-31A,ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.

(சி-8539)

"கணனி உலகின் காட்சிப்பெட்டகம்"

டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை,
கிளிநொச்சி.

# பணிநிலை வேண்டுகை

கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்களால் சுயமாக தயாரித்த விண்ணப்பங்களை ''பணிப்பாளர்'' டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு 25-12-2003ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைத்தல்வேண்டும்.

**1) தாதிகள் ,மருந்தாளர்**

வயதெல்லை :- 18-26
தகைமை :- க.பொ.த.(சா.த) இல் விஞ்ஞானம், ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**2) எழுதுநர்**

வயதெல்லை :- 20-26
தகைமை :- க.பொ.த.(சா.த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**3) தட்டெழுத்தாளர்**

வயதெல்லை :- 20-26
தகைமைகள் :- க.பொ.த.(சா.த) சித்தியுடன் ஆங்கிலம், தமிழ், தட்டெழுத்தில் இரண்டு வருட முன்னனுபவம் இருத்தல் வேண்டும். (கணனி இயக்குநர் விரும்பத்தக்கது)

**4) பரிசாரகர்**

வயதெல்லை :- 23இற்கு மேல்
தகைமை :- க.பொ.த.(சா.த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**5) சுத்திகரிப்பாளர்**

வயதெல்லை :- 25இற்கு மேல்
தகைமை:- 8ஆம் ஆண்டு கற்றிருத்தல் வேண்டும்.

**6) காவலாளி**

வயதெல்லை :- 23-35
தகைமை:- 8ஆம் ஆண்டு கற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு:-
1. தங்குமிடவசதிகள் செய்து கொடுக்கப்படும்.
2. ஆண்,பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
3. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
4. மேற்குறிப்பிட்ட பணிக்கு முன்னனுபவம் கொண்டவர்கள் விரும்பத்தக்கது.

பணிப்பாளர்,
டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை,
கிளிநொச்சி.
(சி-8740)



# அன்பெனும் ஊற்றினிலே...

அன்புதான் மனிதனின் உயிர்நாடி அன்பென்ற மிக மெல்லிய நூலிழையில் தான் மனித வளர்ச்சி தங்கியுள்ளது. இது இல்லையெனில் மனிதன் நீரின்றி வாடும்பயிர் போல் வாடிச் செத்துவிடுவான். அன்பென்ற அமுதினையுண்ட மனிதனாலேயே மிகப்பெரிய சாதனைகளைச் சாதிக்க முடிந்துள்ளது. மனிதனுக்கு உறவுகளுடன் உள்ள அன்பே வீட்டின் பொருளாதாரத்தைப் பெருக்குகிறது. மனிதனுக்கு சமூகத்தின் மீதுள்ள அன்பு நாட்டின் வசதிவாய்ப்பைப் பெருக வைக்கிறது.

அன்பு மனிதனின் பலத்தைக்கூட்டி செயற்கரிய சாதனைகளைச் செய்யத்தூண்டுகிறது. இது மனிதனின் நெறியான வாழ்க்கைக்கு அத்திவாரமிடுகிறது. இந்த நெறிமுறை அவன் பலமாக மாறுகிறது. அந்தப்பலத்தினால் சாதனைகளை நிலைநாட்ட முடிகிறது. சிறுவயதில் தாயின் அன்பைப்பரிபூரணமாகப் பெற்றுக்கொள்ளும் குழந்தை வாழ்க்கையில் நெறிமுறை தவறாத ஒரு வாழ்க்கையை வாழ்ந்து சமூகத்தின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பதுடன், நாட்டின் நலனிலும் அக்கறையுடன் செயற்படுபவனாக இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அன்பைப் பூரணமாகப்பெற்று வளராத ஒரு மனிதன் எப்போதும் மற்றவர்களைத் துன்பப்படுத்தும் செயல்களிலேயே ஈடுபட்டுத் தன்னைத்தானே தாழ்த்தி அழிந்துவிடும் நிலையே காணப்படுகிறது. எனவே சிறுகுழந்தைகளின் தேவையறிந்து அன்புடன் அவர்களைப் போசித்து வளர்ப்போமானால் நாட்டில் ஏற்படும் பல சிக்கல்களுக்கு பரிகாரம் தேடியவர்களாவோம்.

பெற்றோருடன் வளரும் குழந்தைகளைவிட பல்வேறு நிலைகளில் வாழும் குழந்தைகளே கவனத்தில் எடுக்கப்படவேண்டியவர்கள். இவர்களை நாம் பரிவுடன் பார்க்க வேண்டும். அவர்களுக்கு பொருளதவி செய்யாவிட்டாலுங்கூட அவர்களை கௌரவமாக நடத்தவேண்டும். இதை விடுத்து அவர்களை அலட்சியப் படுத்தி வீணான அவதூறுகளை அவர்கள் காதுபடக்கதைப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இந்தச் சிறுதவறுகள் அவர்களின் பிஞ்சு மனங்களில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களை தீயசெயல்கள் செய்யத் தூண்டிவிடும். இதனால் பாதிக்கப்படுவது சமூகமும் நாமும் தான் என்பதை மறந்து விடுதல் கூடாது.

நாம் நாட்டுப்பற்றாளராக, சமூகப்பற்றுள்ளவர்களாக இருப்போமானால் எங்கள் சூழலில் வாழும் குழந்தைகளின் மனம் நோகாமல் அவர்களை நேசிக்கப்பழக்கப்படுத் திக்கொள்ள வேண்டும். நாங்கள் அவர்களுக்குக்கொடுக்கம் கௌரவத்திலேயே அவர்களுடைய எதிர்காலமும் நாட்டின் எதிர்காலமும் தங்கியுள்ளதென்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

சமூக வளர்ச்சியை நாடுபவர்கள் கூட சில சமயங்களில் தங்கள் அருகில் உள்ளவர்களின் மன உணர்வுகளை மதிக்கத்தவறிவிடுகின்றனர். அவர்கள் எல்லாம் பாவப்பட்ட ஜென்மங்கள், அவர்களுக்கும் சமூகவளர்ச்சிக்கும் ஒரு தொடர்புமே இல்லை என்று எண்ணி விடுகிறார்கள். இதனால் குற்றவாளிகளை நாங்களே வளர்க்கிறோம் என்பதை மறந்து விடுகிறார்கள். இதனால் சமூகத்தை முன்னேற்ற அவர் பாடுபடும் அதேநேரம் அதைச்சீர்குலைக்க அவருடன் இருப்பவர்களே தயாராகிறார்கள். எனவே நாம் எம் அருகில் உள்ள வர்களை மதித்து கௌரவம் கொடுத்து அன்பாக நடத்துவோமானால் நல்ல சமூகத்தை உருவாக்குவது சுலபமாகிறது.

பல துறைகளிலும் முன்னேறிய அமெரிக்காவிலேயே இந்தப் பண்பை அலட்சியம் செய்ததனாலேயே பள்ளிக்கூட மாணவர்கள் சக மாணவர்களைக் கொலை செய்வதும் பள்ளிக்கூட ஆசிரியர், அதிபர்களைக் கூட கொலைசெய்யும் அளவுக்கு பள்ளிமாணவர்களின் நிலை மாறியுள்ளது. அங்கு உறவுகளுக்குள் கூட அன்பென்பது நேரங் கணித்துத் தான் கிடைக்கிறது. அதுவும் ஆத்மார்த்தமான அன்பாக காணப்படுவதில்லை இதனால் ஒரு குழந்தையின் மனம் பாதிப்படைந்து வக்கிரமான எண்ணங்களும், சிந்தனைகளும், கொலைவெறியும் கூட ஏற்பட்டுவிடுகிறது. இதனாலேயே இப்படியான சம்பவங்கள் அங்கு அடிக்கடி நிகழ்கின்றன.

இதை எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு நாம் குழந்தைகளை மட்டுமல்லாது வளர்ந்த மனிதர்களையும்கூட அவர்களின் குறைகளை மனதிற்கொள்ளாது கௌரவத்துடன் அன்புடன் நோக்கப் பழகவேண்டும். இது நம் சமூகத்தை சீர்செய்யும் என்பது திண்ணம். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை, தந்தை வளர்ப்பினிலே" இது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூற்று. அன்பே அறிவு, அன்பே அழகு, அன்பே ஆரோக்கியம், அன்பே செல்வம் என்பதை அறிந்து கொண்டால் எமது அனேக பிரச்சினைகள் மங்கி மறைந்துவிடும். மனம் என்றும் அமைதியடையும். இதனால் ஆக்கபூர்வமான சிந்தனைகள் மேலோங்கும். நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவும். எனவே நாம் குழந்தைகளை மட்டுமல்லாது அனைவரையும் அன்புடன் அரவணைத்து ஒரு ஆரோக்கியமான, ஏழைகளற்ற, குற்றவாளிகளற்ற சமூகத்தை வளர்த்து எமது நாட்டை வெற்றிப் பாதையில் வீறுநடைபோட வைப்போம்.

அன்பானவர்களே! உங்கள் அருகில் சற்றே பார்வையைத் திருப்புங்கள். உங்கள் அன்பான பார்வைக்காக வாடிநிற்கும் ஒரு உயிர். இவர்களைத் திருப்திப்படுத்தாமல் நீங்கள் சாதிக்கப்போவது ஒன்றுமே இல்லை. சாதித்தாலும் அது பெயரளவில் மட்டும்தான். உங்கள் மனம் திருப்தியடைய வேண்டுமானால்; ஒரு உயிரையேனும் அலட்சியப் படுத்தாமல் அன்புடன் பழகுங்கள் அதுவே உங்கள் முழு வெற்றிக்கும் உறுதுணையாகும் உலகில் முன்னேற்றத்திற்கு அத்திவாரமாகும்.

**இராஜசாந்தி**

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களது கண்களிலே தெரிந்தது சோகம். அச்சோகத்தினுள் அம்மாவின் மனமும் கலந்து இருந்ததனால் அம்மாவினால் மனம் வைத்துச் சாப்பிடக்கூடமுடியாமல் அன்று இருந்தது.

இந்தியப்படை 32 மாதங்களாகத் தமிழ் மக்களுக்குக் கொடுத்த பல துன்ப துயரச்சுமைகளிலிருந்து விடுபட்டு ஊர்மக்கள் அமைதியான, நிம்மதியான சூழலில் வாழ ஆரம்பித்தார்கள். தன்பிள்ளைகள், பேரப்பிள்ளைகளோடு வாழும் நிலைகண்டு அம்மாவினது முகம் பூரிப்பில்பூத்தது. இருப்பினும் அவரது முகத்திலே எல்லையற்ற சோகம் தெரியவே செய்தது.

90 மத்தியபகுதியில் அமைதிச்சூழல் போர்க்களச் சூழலாக மாறியதும் மீளவும் ஊர்மக்களோடு அம்மாவும் இடம்பெயர்ந்து கங்கை மணலாறு ஊரில் சில நாட்கள் வாழ்ந்தபின் பச்சனூர் அகதிமுகாமிற்கு சென்றுவாழ ஆரம்பித்தார்.

இவ் நெருக்கடியான காலப் பகுதியில் தாக்குதல் ஒன்றுக்காக வெடிமருந்து நிரம்பிய கேன்களை எடுத்துவரச்சென்றபோது 03ஆம் கொலணிப் பாதையில் சிங்களப் படையினர் பதுங்கித்தாக்குதல் மேற்கொண்ட சமயம் அம்மாவின் மகன் சத்தியன் வீரச்சாவு அடைந்தார்.

இத்தகவலைப் போராளி றொபின் அம்மாவிடம் சொன்ன வேளை அம்மாவை அறியாமலே கண்களும், மனமும் கலங்கின. ஆனாலும் ஏனைய போராளிகளைப் போல்தான் தன் பிள்ளையும் என்று சொல்லியபடி தன்னை அமைதிப்படுத்தினார்.அம்மா.

தமிழினம் வாழவேண்டும், தமிழனத்தை வாழவைக்க வேண்டும். என்பதற்காகவே போராளிகள் தம்மை அாப்பணித்துப்போராடுகின்றார்கள் என்கிற அரசியல் விளக்கங்களைப் பெற்றுப் புரட்சிகரத் தமிழ்த் தேசிய அரசியலில் ஊறிநின்றார் அம்[illegible] அவருடன் விடுதலைப் போர் [illegible]டர் பாகத் தவறாகக் கதைத்தால் கடுமையான கண்டிப்பிற்குள்ளாக வேண்டிய நிலையே அவர்களுக்கு நேரிடும்.

அம்மா இனி இழப்பதற்கு எதுவுமே இல்லை என்று அவரின் மனது மரத்துப்போய்விடக்கூடிய இழப்புக்களை அடுத்தடுத்து அம்மா சந்தித்தார்.

அம்மாவின் இன்னொரு மகன் குமாரதுரை பாலு என்கிற பெயரில் ஆனையிறவு போர்க்களத்தில் 91 இல் வீரச்சாவு. இத்தகவலை கட்டைப்பறிச்சானில் கடமையாற்றிய முன்னணிப் போராளி கண்ணதாசன் வாயால் பெற்றுக் கொண்ட அம்மா எல்லாப் பிள்ளைகளைப் போலத்தான் தன்பிள்ளையும் என வழமையான ஆற்றத்தக்க வார்த்தையைச் சொன்னார்.

கங்குவேலியில் திருமணம் செய்த மகன் யோகநாதன் 93இல் விறகு எடுக்க வண்டியில் காட்டுக்குள் சென்றபோது அகத்தியதாவனம் பகுதியில் வைத்து சிங்களப் படையால் சுட்டுக்கொல்லப்பட்டார். அம்மா தன் கணவனை இழந்த பின் உறவும், நிழலும், ஆறுதலும் அப்போது பிள்ளைகள்தான் என எண்ணியிருந்த அம்மாவிற்கு தொடரும் துயரம்



கல்லையும் கரைத்திடச்செய்தது.

அம்மா தன் கடைசிப் பிள்ளைகளான மோகனச்சந்திரன்,சூட்டி ஆகிய இருவர்களையும் செல்லம்கொடுத்து தன் தாய்மையின் உச்சப்பாசவலைக்குள் அரவணைத்து 95 இல் தன் ஊரில் வாழ்ந்து வந்தார்.

[illegible]டுதலைப்போாரங்கு மிகப் பெரிய [illegible]ரலாற்றுச் சமர்களைச் சந்தித்தது.

அச்சமர்களில் வெற்றி பெற்று விடுதலைப்புலிகள் இராணுவ மேலாண்மைப்பலத்துடன் மேலோங்கியிருந்தார்கள்.

அம்மாவின் கடைக்குட்டி மோகனச்சந்திரனும் விடுதலைப்புலியாக இணைந்து 98 இல் கடலில் வீரச்சாவு அடைந்தார். ஈழத்தமிழரின் விடுதலைக்கான வரலாற்றிலே தனக்கான தடத்தைப் பதித்துச்சென்றார். அவரது கடைசிச்செல்லப் பிள்ளை மேஜர் சின்னச்சத்தியன் இதனைக் கேள்விப்பட்ட அம்மாவுக்கு தலை தலையாக அடித்து அழவேண்டும் போல இருந்தது, அவரை அறியாமலே கண்ணீர் பெருகி வழிந்தது. அவரின் மனதினுள் கவலை வளர்ந்து ஆழமாகப்பரவிற்று.

மகன் சத்தியனைக் காணச்சென்று வரும் சம்பூர்ப்பக்கம் செல்வதனை முற்றாகவே நிறுத்திக் கொண்டார். கடலில் வீரச்சாவு அடைந்ததனால் படகில் சென்று வரும் கடற்பயணங்களை மேற்கொள்ளாது விட்டுவிட்டார்.

கண் பார்வை குறைந்து, முகச்சுருக்குகளில் பெரும் வியர்வையுடன், விழியோரம் வழியும் நீர் கலந்த 72 வயதான நிலையில் அம்மா தன் கடைசி மகள் சூட்டியுடன் ஊரில் வாழ்ந்து வருகின்றார். அம்மாவிடம் இயல்பாகவே காணப்பட்டுவந்த நகைச்சுவைச் சுபாவம் - வாழ்வின் துன்ப துயரங்களைச் சகித்துக் கொள்ளக்கூடியதாகவிருந்தது.

மகள் விஜயலட்சுமியின் மகன் பாலா என்ற கடற்புலிகளில் செயலாற்றிவரும் தன் பேரனை அம்மா சந்தித்தசமயம் உன் மூன்று மாமாக்களும் கௌரவமாக இருந்து இறுதிவரை இலட்சியத்துக்காகவே பாடுபட்டார்கள். நீயும் இயக்கத்தில் கௌரவமாக இருந்து இறுதிவரை செயல்படு எனச்சொல்லித் தன் விடுதலைக்கான பற்றுறுதியை வெளிப்படுத்தினார்.

விடுதலைப்போராட்டம் தமிழீழம் என்னும் கருத்துக்களை விதையூன்றிய காலமிது என்பதால் அம்மாவினது மனவுலகம் பக்குவம் அடைந்த நிலையில் இருந்து போராளிகளை அணைத்துச்சென்ற, செல்கின்ற ஒரு தாயாக இருந்தது. அவர்களுடைய நியாயமான தொண்டுகளுக்கு உதவக்கூடியவராக இருந்தார். அம்மா செய்த தியாகங்கள் அளப்பரியது.

சிங்களத்தின் அநீதியை அராஜகத்தை எதிர்த்துப் போராடி வீரச்சாவு அடைந்த மாவீர்களுக்குள் அம்மாவின் மூன்று பிள்ளைச் செல்வங்களும் கலந்தார்கள்.

சிங்களத்தின் இனவெறியாட்டத்தினால் தன் கணவன், இரண்டு பிள்ளைகள் என மூன்று சொந்த, இரத்த, பாச உறவுகளை அம்மா இழந்தே இருந்தார்.

இவைகள் அம்மாவினது சிந்தை அணு ஒவ்வொன்றிலும் கலந்திருந்து அவரது நெஞ்சைத்து அதிர்வுகளாக இருக்கின்றன. இந்நிலையிலும் அவரின் அபார மனவுறுதி, வைரமுடைய நெஞ்சு அனைத்தும் தனித்துவம் மிக்க ஒருவராக வேயுள்ளார்.

அந்தவகையில் அம்மாவினது மேன்மையான தியாகத்தை தமிழ் இனமும், தமிழ்த் தேசமும் கௌரவிக்கின்றது.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –48



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள் –48

.................................................

.................................................

.................................................

.................................................

பெயர் : .................................

முகவரி : .................................

.................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –47



தர்ஷிகா செல்வராசா,
இல - 649,7ம்யூனிற்,
இராமநாதபுரம்.

### பரிசுக்குரிய வரிகள்

பார்க்கும் இடமெல்லாம் பாழடைந்த கட்டடங்கள்.
யார்க்கு சொல்லியழ யாமடைந்த துன்பமதை
நோக்கும் நெஞ்சமெல்லாம் நொந்துபோன காயங்கள்
ஏக்கம் எம் மனதில் – என்று தீரும் எம் கஷ்ரம்?

### பாராட்டுக்குரிய வரிகள்

*நேற்று வாழ்ந்த எம் மனை வீடு*
*அன்று படைகளால் சீரழிந்த பெருவீடு - தொடர்ந்து*
*பாதுகாப்பு வலயம் எனப் பெயர்தான் இதற்கு....*
*புரிந்துணர்வில்கூட போய் வாழ வழியில்லை எமக்கு!*

ம.அருள்யோண்சன்,
தமிழீழம்.

*எங்கோ பிறந்தவனுக்கு*
*இங்கோ வெறியாட்டம்*
*அடித்து உடைத்து சிதைக்கிறான் - அதற்குள்*
*தனக்கும் ஒரு பாதுகாப்பு - முட்கம்பிச் சுருளால்.*

திருமகள் குமாரசாமி,
பொன்னாவெளி.

*பெரும்பான்மையோரால் உலகின் உதவியுடன்,*
*உருஇல்லா தமிழருக்கு தரப்பட்ட நினைவு சின்னங்கள்.*
*மருகிய எம் பசுமை உணர்வுகளை அடக்கி*
*வரும் காலத்தில் வரலாறு சொல்ல இவை நிலைக்குமா?*

அ.ஜெ.டெனிசியஸ்,
முல்லைத்தீவு.

*இது யுத்தத்தின் எச்சம்*
*தமிழர் துயரத்தின் சின்னம்*
*புரிந்துணர்வில் ஊர்சென்றும்*
*வீதியோர வாழ்வுதான் இன்னும்.*

T.றேகன்,
வவுனியா.

*உயர் பாதுகாப்பாய் பகையே நீ வாழ்கிறாய்!*
*துயர்கள் முடியாதா? இன்பங்கள் பிறக்காதா?*
*தடைகள் போட்டெங்கள் மனைகள் அழிக்கிறாய்!*
*விடைகள்தான் ஏது? விடியல்தான் எப்போ?*

பொலிகையூர் வசந்தன்,
புதுக்குடியிருப்பு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.


அறிமுகப்படுத்துகின்றோம்!

**வன்னி மண்ணில்,**
**கணினி முறையில் வடிவமைக்கப்பட்ட**
**பொலிமர்(பிளாஸ்ரிக்) இறப்பர் முத்திரைகளை,**
**குறித்த தவணையில் விரைவாகவும், தரமாகவும்**
**பெற்றுக்கொள்ள நாடுங்கள்.**

**அந்திவானம் பதிப்பகம்**

யாழ்சாலை, கிளிநொச்சி (சி-8964) வேணாவில், புதுக்குடியிருப்பு





சதாமைக் கைது செய்த வெற்றிக்களிப்பில் வெற்றிக்கான சமிக்ஞையை காட்டும் ஒருஅமெரிக்க வீரரும், அருகே, ஈராக் டிக்ரீக் நகருக்கு சில மைல்களுக்கு அப்பால் அக்வர் நகரில் அமைந்திருந்த பண்ணை வீட்டில் சதாம் பதுங்கி இருந்த குகையையும் மேல் உள்ள படங்களில் காணலாம்.



அருகில் உள்ள படத்தைப்பார்த்து வெறுமனே நினைத்து விடாதீர்கள். அது வெறுங்கட்டடம் அல்ல. பல சோகங்களைத்தாங்கிய கட்டடம். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது அமெரிக்காவால் யப்பானில் அணுகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட இடங்களில் ஒன்றான ஹிரோசிமா தான் இன்னும் அதன் நினைவால் புனரமைக்கப்படாது அப்படியே... சோகத்தை தாங்கியபடி காட்சி தருகிறது.




ரைட் சகோதரர்களின் நூற்றாண்டு தினத்தையொட்டி பிரான்சிய பயணிகள் விமானம் வாஷிங்டனிலுள்ள 760000 சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள தளத்தில் சாகசம் நடந்தது உங்களுக்கும் தெரிந்ததே.

யப்பானிய நகரமொன்றின் அழகிய தோற்றம் விமானத்திலிருந்துபார்க்கையில்....



# 45ம் நாள் நினைவலைகளும்

## அந்தியேட்டி அழைப்பிதழும்



| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 23 - 05 - 1980 | 08 - 11 - 2003 |

08-11-2003 அன்று வீரச்சாவு நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும், ஆறுதல் செய்திகளைஅனுப்பியோருக்கும் நன்றிகள் கூறுவதோடு, 22- 12-2003 திங்கட்கிழமை நடைபெறவிருக்கும்அந்தியேட்டி நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"நன்றி"

## கப்டன் தேவன்/சுதன்

நவரட்ணம் மதிகிருஸ்ணாகரன்
(மாதகல், யாழ்ப்பாணம்) (3904)

மார்க்கண்டு வீதி,
முழங்காவில்.

தகவல்,
குடும்பத்தினர்.

# அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு

முதல் தடவையாக தமிழீழத்தில் உள்ள எட்டு மாவட்டங்களையும் உள்ளடங்கிய பெண்களுக்கான தடகள பெருவிளையாட்டுப்போட்டி எதிர்வரும் 05.03.2004 அன்று கிளிநொச்சியில் நடாத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது. மாவட்ட ரீதியில் வீராங்கனைகள் தங்களை தயார்படுத்துலுடன், போட்டியில் மேலதிக விபரங்களுக்கு தங்கள் தங்கள் மாவட்ட விளையாட்டுத்துறையினருடன் அல்லது மாவட்ட மகளிர் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஏற்பாட்டவை,
அரசியல்துறை மகளிர்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
கிளிநொச்சி,
தமிழீழம்.




இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.